ஸ்ரீ நந்தன வருடம் சித்திரை மாதம்
இலவச வார இதழ் பக்கம் 48
செவ்வாய்க்கிழமை (01-05-2012)

கதிர் ஒளி

கனடா
உலகத் தமிழரின் ஒரே நம்பிக்கை ஒளி
Vol: 05 Issue: 196
Editor in Chief : RAJAPANDIAN PAULRAJ
E-Paper : www.kathiroli.digitalepaper.in

KATHIR OLI MEDIA INC.
3500 McNicoll Ave. Unit # 8 (West of Markham Road/On McNicoll Ave.) Scarborough, Ont.
Tel: 4162927772 Fax: 4162927793 kathirolinews@gmail.com Toll Free: 1-855-592-7772

தமிழருக்குப் புகழ் தேடித்தந்த சட்டத்தரணி
மெலனி டேவிட்க்கு கதிர் ஒளியின் பாராட்டு விழா!





(வீரகேசரி மூர்த்தி)

கனடா எங்கும் பரந்து பட்டு வாழும் பல்வேறின மக்களுள் இவ்வாண்டுக்கான சிறந்த பிரஜைகளாகத் தெரிவு செய்யப் பட்டுள்ள இருபத்தைந்து பேரினுள் தமிழ் மகளான பிரபல சட்டத்தரணி மெலனி டேவிட்டும் ஒருவராகத்தெரிவு செய்யப் பட்டு வெற்றித் திருமகள் ஆகியுள்ளார். அவரை முன்னணி தமிழ் பத்திரிகையாகத் திகழும் 'கதிர் ஒளி' முதன் முதலாகப் பாராட்டு விழா எடுத்து கௌரவித்துள்ளது.

காரைக்குடி உணவகத்தில் கடந்த ஞாயிறு மாலை கலாநிதி பாலசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கலாநிதி பாலசுந்தரமும், கதிரொளி ஆசிரியர் போள் ராஜ பாண்டியனும் திரு.பிரகாஸ் டேவிட்டுக்கும், திருமதி.மெலனி டேவிட்டுக்கும் பொன்னாடை போர்த்தியும் கேடயம் வழங்கியும் கௌரவித்தார்கள். பெற்றோர் பிள்ளைகள் உட்பட குடும்ப சமேதராக திருமதி மெலனி டேவிட் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார். முன்னாள் எம்.பி.திரு.ஈழவேந்தன், திரு.சாமி அப்பாத்துரை, காப்புறுதி பிரமுகர் திரு.திருமதி. கோதை அமுதன், ஆதவன் பத்திரிகை ஆசிரியர் திரு.பாபு, பத்திரிகை யாளர் புதுவை இராமன், போதகர்களான திரு.வரன் சின்னத்தம்பி, திரு ராஜ்குமார், ஆகியோருட்பட மற்றும் பலர் இவ் வைபவத்தில் கலந்து சிறப்பித்தார்கள்.

இதன் தொடர்ச்சி
24ம் பக்கம் பார்க்க...

உண்மையான காதல், எண்ணத்திலே மலர்ந்து, உள்ளத்திலே இடத்தைத் தேடிக் கொள்ளும். - கர்னீலியஸ் நீல்


Formula Honda
Where You're treated like family
2012 Accord
0.99%
BRAND NEW HONDA
NEW HONDA
STANDARD FEATURES ON ALL MODELS INCLUDE:
$268 @ 0.99%
$3,235
PER MONTH FOR 48 MONTHS
NO GIMMICKS
100 PLUS USED CARS!!
JUST GREAT DEALS!!
ODYSSEY
BRAND NEW HONDA
NEW HONDA
$348
3.99%
CR-V
BRAND NEW HONDA
NEW HONDA
$298
3.99%
$3,661
NEW
$97
NEW HONDA
Civic
1.99%
OR LEASE
$169 @ 1.99%
BEST SELLING CAR IN CANADA 14 YEARS IN A ROW.
2008 Acura MDX Sport Utility SUV
68,368KM
2008 Acura RDX Sport Utility SUV-
78,489 KM
2009 Acura TL Sedan Sedan
82,702 KM
2010 Acura TSX Sedan
38,265KM
2008 Acura TSX Sedan Sedan
72,335KM
2008 Acura TSX Sedan Sedan
72,280 KM
2009 Honda Accord EX Sedan Sedan
17,878KM
2008 Honda Accord EX Sedan Sedan
85,612KM
2008 Honda Accord EX-L Coupe Coupe
83,300KM
2008 Honda Accord EX-L Sedan Sedan
42,151KM
2008 Honda Accord EX-LEATHER
86,194 KM
2008 Honda Accord LX Sedan Sedan
68,5277KM
2008 Honda Accord LX Sedan Sedan
74,093 KM
2009 Honda Civic
36,0616KM
HONDA
Certified
Used Vehicles
ராஜா தர்மலிங்கம் - Dir: 647 833 4998
2240 Markham Road (at Finch), Scarborough.
www.formulahonda.com

மெல்லியாளுக்கு மென்னழகு!



முகத்துக்கு ஒப்பனை போடும் போது பருவத்திற்க்கு ஏற்ற பொருட்களைப் பயன்படுத்தினால் சரும ஆரோக்கியம் பாதுகாக்கப்படும். இது கோடைகாலம். கோடையில் வியர்வையினால் வேர்க்குரு உள்ளிட்ட சருமக் கோளாறுகள் ஏற்படும். முகத்தில் எண்ணெய் வடியும். எனவே கோடைக்கேற்ற எளிய ஒப்பனைக் குறிப்புகளைப் பார்ப்போம்.

பவுண்டேசன்

கோடை காலத்தில் ஒப்பனை இட்டுக்கொள்ளும் போது அடர்த்தியாக பவுண்டேசன் போடுவதைத் தவிர்க்கவும். ஏனெனில் இது வியர்த்து முகத்தில் கரும்புள்ளிகளை ஏற்படுத்திவிடும். லிக்விட் பவுண்டேசன் மெலிதாகப் பயன்படுத்தலாம். சரும நிறத்திற்கு ஏற்றதாகப் பயன்படுத்தினால் கூடுதல் அழகு தரும்.

கன்னக் கதுப்பு

கன்னங்களின் அழகை அதிகரிக்க உபயோகிக்கும் ரூஜ் கூட மெலிதாக இருப்பதே கோடைக்கு ஏற்றது. இல்லையெனில் வெயிலுக்கு உருகி அழகைக் கெடுத்துவிடும்.

கண்ணுக்கு காஜல்

கண்களில் அழகை அதிகரித்துக் காட்டுவதில் கண் மைக்குப் பெரும் பங்குண்டு. காலை நேரத்தில் வெளியில், வெயிலில் செல்ல வேண்டியிருக்கும் என்பதால் மெலிதாகவும், மாலை நேரத்தில் அடர்த்தியாகவும் கண்ணுக்கு மை இட்டுக்கொள்வது போடுவது கண்களுக்குப் பாதுகாப்பைத் தருவதுடன், கண்களுக்கு கூடுதல் கவர்ச்சியையும் தரும்.

லிப் கிளொஸ்

கோடையில் லிப்ஸ்டிக்கிற்கு டாட்டா காட்டிவிடுங்கள். உதடுகளுக்கு அழகு தருபவை லிப் கிளொஸ்தான். உடைகளுக்கும், சருமத்திற்கும் ஏற்ற லிப்க்ளொஸ் உபயோகியுங்கள்.

பன்னீர்

கோடையில் பன்னீர் பூசிக்கொள்வது குளுமை தரும். சருமத்தில் அடைந்துள்ள அழுக்குகளை நீக்க சிறிதளவு பருத்துத் துணியில் பன்னீரை நனைத்து முகத்தைத் துடைத்தால் அழுக்குகள் நீங்கிவிடும். சருமம் புத்துணர்ச்சியோடு திகழும். வியர்வையினால் உண்டாகக்கூடிய துர்நாற்றமும் கட்டுப்படும்.

கோடைகாலத்தில் வியர்வை ஆறாகப் பெருகுவதால் உடலில் துர்நாற்றம் வீசும். அதேபோல் பாதங்களில் எழும் விரும்பத்தகாத வாசனையினால் பொது இடத்தில் இயல்பாக இருக்க முடியாது. கோடையில் வியர்வை நாற்றத்தைப் போக்க நாம் மட்டும் தூய்மையாக இருந்தால் போதாது, நாம் உபயோகிக்கும் பாதணிகளையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் பாதங்களை ஆரோக்கியமாகவும், அழகாகவும் பராமரிக்க முடியும்.

பாதங்களைக் கழுவுங்கள்

அடிக்கடி குளிர்ந்த நீரால் பாதங்களைக் கழுவுங்கள். இதனால் துர்நாற்றம் வீசுவது தடுக்கப்படும். பழைய பாதணி, காலுறை போன்றவைகளை மாற்றுங்கள். சில செருப்புகள் நீரில் பட்டதும், நீரை உள்ளிழுத்துக் கொள்ளும் தன்மை இருக்கும். அந்த நீரில் செருப்பு ஊறி அதனால் துர்நாற்றம் ஏற்படும். அப்படிப்பட்ட செருப்புகளை நீர் பட்டதும் உடனடியாக வெயிலில் காய வைக்கவும்.

உலர்வாக வையுங்கள்

வெய்யில் காலங்களில் ஷு அணிவதைத் தவிர்க்கலாம். அவ்வாறு அணிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் தினமும் சொக்ஸைத் துவைத்துப் பயன்படுத்த வேண்டும். கூடுமானவரை பருத்தியால் செய்யப்பட்ட சொக்ஸ் அணிவது நல்லது. மேலும் சொக்ஸ் அணியும் முன் காலில் பவுடரைத் தடவவும். இது வியர்வையைத் தடுத்து காலை உலர்ந்த நிலையில் வைக்க உதவும்.

டேனின் டீ

கோடைகாலத்தில் நாம் என்ன சாப்பிடுகிறோம் என்பதும் முக்கியம். வாசனைப் பொருட்கள் அதிகம் கொண்ட உணவுகளைத் தவிர்க்க வேண்டும். அதேபோல் வெங்காயம், வெள்ளைப்பூண்டு போன்ற உணவுகளை உண்ணக்கூடாது. இதனால் வியர்வை மூலம் துர்நாற்றம் பரவுவது தடுக்கப்படும்.

டேனின்கள் கொண்ட தேநீரை தண்ணீரில் கலந்து 10 நிமிடங்கள் ஊறவைக்கலாம். பின்னர் பாதங்களை அரைமணிநேரத்திற்கு அந்த தண்ணீரில் தளர்வாக வைத்து ஊறவைக்கவும். இது அதிகம் வியர்வை சுரப்பதை கட்டுப்படுத்தும். பாதங்களை உலர்வாக வைக்கும்.

வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்!

FIREMAN STEINMETZ
PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

MOTOR VEHICLE ACCIDENT

FRACTURES - SPINAL CORD INJURY - BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT - INTERNAL INJURIES OR DEATH



Jack J. Fireman Q.C. LLM.
Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer"catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



Harry F. Steinmetz
Mr. Steinmetz is a member of the Advocates Society, the Canadian Bar Association, the Metropolitan Toronto Lawyers Association and the Medico-Legal society.

உங்களுக்குத் தெரியுமா?

- நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள் அத்துடன் **$86,000.00** வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.
- நடந்த விபத்து உங்கள் தவறாக இருப்பின் உங்களால் **$86,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

If the impairment catastrophic your claim can be:
- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expenses up to **$1,000,000.00**

OVER 50 YEARS COMBINED EXPERIENCE
even if you are:
unemployed - employed - passenger - pedestrian
cyclist - traveling in public transit - student - housewife

You may be eligible for benefits to THOUSANDS of dollars

*if you have optional insurance you can calm up to **$1,000.00** IRB'S - per week
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்!

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

தீபன்

24 Hours Direct Line
(416) 505 - 9804
(416) 624 - 4751

Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of upper Canada)
www.thipaninjuryclaim.com
thiparanjan@gmail.com


அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்

TORONTO | SCARBOROUGH | MISSISSAUGA

JRS College
of Business and Health Care Inc.
"Committed to Provide Quality Training"

சிறந்த வேலைவாய்ப்புக்களுக்கான பயிற்சிநெறிகளை இலவசமாக பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா? நீங்களும் தகுதியுடையவராகலாம்.

DIPLOMA COURSES



Accounting and Payroll Administration
- Tuition fee
- Books fee
- Living Expenses(for 36 weeks)
- Day care (for 36 weeks)
- Transportation (for 36 weeks)

Health Office Administrator (HOA)
- Tuition fee
- Books fee
- Living Expenses (for 33 weeks)
- Day care (for 33 weeks)
- Transportation (for 33 weeks)


OTHER DIPLOMAS
- PERSONAL SUPPORT WORKER
- COMPUTERIZED ACCOUNTING
- OFFICE ASSISTANT

CERTIFICATE COURSES
- Food Service Worker
- Food Handling
- Nutrition
- Ms Office
- Quickbooks
- Electrician License Exam Prep Course
- Cashier
- Accpac
- Simply Accounting
- Bank Teller

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

SCARBOROUGH CAMPUS
(Midland & Finch)
330-4168 Finch Ave East
Scarborough, ON M1S 5H6
416-292-2455

இலங்கையின் மனிதஉரிமை மீறல்கள்! ஆதாரமிருந்தால் மட்டுமே விசாரணையாம்! இலங்கை அரசாங்கம்



மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்பாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும், குற்றமிழைத்தவர்கள் நீதிமன்றங்களின் மூலம் தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இலங்கை அமைச்சரவையின் மூத்த சட்ட ஆலோசகரான மொகான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவிடம் அளிக்கப்பட்ட அனைத்து மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்தும் விசாரணை நடத்தப்படும். இதன்மூலம் குற்றமிழைத்தவர்கள் என்று கண்டறியப்படும் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்.

ஐ.நா மனிதஉரிமை பேரவைக் கூட்டத் தொடரில் பல்வேறு அரசசார்பற்ற அமைப்புகள் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பல இடம்பெற்றிருப்பதாகவும், அவற்றை நிரூபிக்கும் ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் குற்றம்சாட்டின.

இலங்கை அரசுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட தாக்கல் இந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு எந்த ஆதாரங்களுமில்லை என்று, அரசதரப்பில் கூறப்பட்டது.

ஆனாலும், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மனிதஉரிமை மீறல்கள் அனைத்தையும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் தனித்தனியாக, ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்கள் குற்றமிழைத்திருக்கிறார்களா என்பதைக் கண்டறிந்து, அதற்கான ஆதாரங்கள் இருப்பின் அவர்கள் மீது வழக்குத் தொடர்வதற்கும் இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பர்.

இலங்கைப் படையினர் மனிதஉரிமை மீறில்களில் ஈடுபட்டதற்கோ, பொதுமக்களைத் துன்புறுத்தியதற்கோ ஆதாரங்கள் இருந்தால், இலங்கை இராணுவத் தளபதிக்கு எவரும் நேரடியாக முறைப்பாடு செய்யலாம். அதுபற்றி விசாரணை நடத்தப்பட்டு, அந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானால் குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும்.

ஆதாரமற்ற வெறும் குற்றச்சாட்டுகளின் மீது இலங்கை அரசாங்கத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வெளியிடப்பட்டு மூன்று மாதங்கள் தான் ஆகியுள்ளன. இந்தநிலையில், இலங்கை அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளது என்று குற்றம்சாட்டுவது நியாயமற்றது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கை செய்திகள்

கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளிற்கு இலங்கையிலிருந்து பணியாளர்கள்

இலங்கைப் பணியாளர்களை கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா, சுவிஸ்சர்லாந்து மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகளிற்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளில் தாம் ஈடுபட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

பணியாளர்களை அனுப்புவதற்காக சகல நாடுகளுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக அத்திணைக்களத்தின் தலைவர் தெரிவித்தார்.



இந் நாடுகளில் பொறியியளாலர், ஹோட்டல் வேலை மற்றும் விமான நிலைய வேலைகளில் அதிக வெற்றிடங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே தான் இலங்கைப் பணியாளர்களை சர்வதேச நாடுகளில் வேலை செய்வதற்கு ஏற்ற வகையில் பயிற்றிவித்துள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹிலாரியுடன் பேச்சு நடத்த பீரிஸ் குழுவினர் அடுத்த மாதம் 14 ஆம் திகதி அமெரிக்கா பயணம்

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அடுத்த மாதம் 14 ம் திகதி அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளார். அமெரிக்காவுக்கு செல்லும் அமைச்சர் பீரிஸ் அந்நாட்டின் இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனுடன் முக்கிய விடயங்கள் குறித்து பேச்சு நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது யுத்தத்தின் பின்னரான இலங்கையின் முன்னேற்ற நிலைமைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நல்லிணக்க வேலைத்திட்டங்கள் துரித மீள் குடியேற்றம் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் அரசாங்கத்தின் எதிர்கால செயற்திட்டங்கள் குறித்து அமெரிக்க தரப்பினருக்கு இந்த விஜயத்தின்போது அமைச்சர் பீரிஸ் விளக்கமளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அமைச்சர் பீரிஸுடன் பேச்சு நடத்த எதிர்பார்ப்பதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் குறிப்பிட்டிருந்தார். இலங்கையுடன் இணைந்து செயற்பட அர்ப்பணிப்புடன் உள்ளோம். எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் விரைவில் அமைச்சர் பீரிஸுடன் நாங்கள் பேச்சு நடத்தவுள்ளோம். நாம் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்துடன் கௌரவமான பேச்சுக்களை மேற்கொள்வோம். மிகவும் முக்கியமாக இலங்கையில் அனைத்து மக்களுடனும் நாம் இறுக்கமான உறவை பேணுவதற்கும் விருப்பம் கொண்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளே இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸை சந்திப்பதற்கு மே 18ம் திகதியை ஒதுக்கி கொடுத்திருந்தனர். அதேவேளை குறிப்பாக வெளிவிவகார அமைச்சரின் அமெரிக்க விஜயத்தின் போது கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



தம்புள்ள பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஏற்க முடியாது - இரா.சம்பந்தன்

தம்புளள் பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.


தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த புனித பிரதேசங்களை பாதுகாக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், சிறுபான்மை இன மத வழிபாட்டுத் தளங்கள் ஒரு விதமாக கவனிக்கப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ஒரு மத வழிபாட்டுத் தளத்தை அகற்றி வேறும் இடத்தில் அமைப்பது ஏற்புடையதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கில் பல இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டுள்ளதாகவும், பௌத்த விஹாரைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தாம் ஏற்கனவே முறைப்பாடு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சிறுபான்மை சமூகங்களை வேதனைப்படுத்தும்



வகையில் அமையக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.


அனைத்து விதமான வன்முறைகளும் கண்டிக்கப்பட வேண்டியவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளர்.

அரசாங்கத்திற்கு வெள்ளை வான்களில் நபர்களைக் கடத்த வேண்டிய அவசியமில்லை!

குற்றவாளிகளை கைதுசெய்ய வேண்டும் என்றால் சட்டரீதியாகவே கைது செய்வேம் ஆனால் கடத்த மாட்டோம் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் 95 வீதமான வான்கள் வெள்ளை நிறத்தைக் கொண்டவையாகவே காணப்படுகிறது எவரையும் கைது செய்ய வேண்டுமாயின் சட்ட ரீதியில் கைது செய்யக் கூடிய அதிகாரம் அரசாங்கத்திடம் காணப்படுகிறது. எனவே அரசாங்கத்திற்கு வெள்ளை வான்களில் நபர்களைக் கடத்த வேண்டிய அவசியமில்லை,

எமது நாட்டில் கடத்தல் சம்பவங்கள் ஒன்றும் புதிய விடயமல்ல கடத்தல் சம்பவங்கள் கடந்த காலங்களிலும் இடம்பெற்றுள்ளன ஆனால் கடந்த காலங்களை விடவும் தற்போது அதிகளவில் ஊடகங்களில் கடத்தல்கள் பற்றி பிரச்சாரம் செய்யப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டிய லக்ஸ்மன் ஹுலுகல்ல.



கடந்த இரண்டு தசாப்த காலமாக நாட்டில் இடம்பெற்ற யுத்தம் பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளியானதாகவும் தற்போது நாட்டில் சமாதானம் நிலவி வருவதனால் கடத்தல் சம்பவங்களை முன்னிலைப்படுத்தி ஊடகங்கள் செய்திகளை வெளியிடுவதாகவும்.

இராஜதந்திர அழுத்தங்கள் காரணமாக பிரேம்குமார் குணரட்னம் கடத்தப்பட்டதாக வெளியான தகவல்களில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

கொலு மண்டபங்கள் போலவே, குடிசைகளிலும் குடியிருப்பது காதல். - ஜான்ரே

ஆசிரியர் அரங்கம்!

தமிழினத்துக்குப் பெருமை சேர்க்கும் தாய்க்குலம்!

நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் சக்தி தாய்க் குலத்துக்கு உண்டு. அதே போன்று அநீதி யான, அக்கிரமமான முறையில் நடந்து கொள்வோரை அழிக்கும் சக்தியும் பெண்களுக்கே உண் டு. அதனை 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்ற பழமொழி எடுத்தியம்புகின்றது. இறைவனையே சக்தி வடிவில் காணும் தமிழினத்தவர்கள் படைக்கும் சக்தியாகத் திகழும் தாய்மைக்கு பண்டைக் காலம் முதல் முதலிடம் அளித்து மதித்து வருகின்றனர். இன்றும் கூட உனது தாய் மொழி என்ன? தாய் நாடு எது? என்றே கேட்கப்பட்டு வருகின்றதே தவிர தந்தை மொழி என்ன? தந்தை நாடெது? எனக் கேட்கப்படுவதில்லை. எனவே தமிழினத்துக்கு பெருமையி னை ஏற்படுத்துவது நமது தாயக்குலம் தான்.

தாய் நாட்டினை விட்டு தமிழினம் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் புலம் பெயர்ந்த நாடான கனடா விலும் தமிழினத்துக்கு பெருமை சேர்ப்பது தாய்க்குலமே என்பதனை நடைமுறையயில் நிரூபித்துக் காண்பித்தவர்கள் செல்வி ராதிகா சிற்சபைஈசனும், பிரபல சட்டத்தரணி திருமதி மெலனி டேவிட்டும். அகதிகள், பயங்கரவாதிகள் என அவமதிக்கப்பட்டு வந்த தமிழினத்தை தலை நிமிர வைத்து இந்நாட்டின் முதலாவது தமிழ் எம்.பி. என்ற வரலாற்று பெருமையைப் பெற்றவர் செல்வி ராதிகா சிற்சபைஈசன்.

அவரை அடுத்து கனடா எங்கும் வாழும் பிரஜைகளுள் இவ்வாண்டுக்குரிய சிறந்த இருபத்தைந்து பிரஜைகளுள் ஈழத் தமிழ் பெண்மணியான பிரபல சட்டத்தரணி மெலனி டேவிட்டும் ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். தாய் நாட்டிலேயே சட்டக் கல்வியை முடித்த இவர். கனடாவுக்கு வந்த பின்னரும் இரு பெண் குழந்தைகளையும், குடும்பத்தையும் பராமரித்துக் கொண்டு எட்டு ஆண்டுகளாக பல்கலைக் கழகம் சென்று சட்டக் கல்வியை கற்று விபத்து நிவாரண சட்டத்தரணி ஆனார். மிகக் குறுகிய காலத்திலேயே தனது சிறந்த பண்பினாலும், தொழில் வல்லமையினாலும் பல்லின மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்தவர். இவருக்கு தமிழ் இனத்தவர்கள் மாத்திரமன்றி பிற இனத்தவர்கள் கூட வாக்களித்து சிறந்த பிரஜையாக தெரிவு செய்துள்ளமை தமிழினத்தை தலை நிமிரச் செய்துள்ளது.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்ற பழமொழிக்கு ஒப்ப சமூகத் தொண்டுகளுக்கும், பொதுப் பணிகளுக்கும் புன்னகை பூர்த்த முகத்துடனும், பெருமனதுடனும் வாரி வழங்கி ஆதரவு அளித்து வருபவர் திருமதி மெலனி டேவிட்.

தமிழ் வார இதழான 'கதிர் ஒளி' திருமதி மெலனி டேவிட்டுக்கு முதன் முதலில் பாராட்டு விழா எடுத்து பாராட்டிக் கௌரவித்ததன் மூலம் பெருமை அடைந்துள்ளது. வாழ்க தாய்க் குலம்!

ஆக்கம்: இணையாசிரியர், வீரகேசரி மூர்த்தி

ஆசிரியர்: பவுல்ராஜ் ராஜபாண்டியன், 'கதிர் ஒளி'

உங்கள் தொடர்புகட்கு:

Kathir Oli Media Inc.

3500 McNicoll Ave. Unit # 8 (West of Markham Road/On McNicoll Ave.) Scarborough, Ont. Office (416) 292-7772, (416) 292-9093, Fax: (416) 292-7793 Toll Free: 1-855-592-7772, Hot lines: (647) 766-7333, (647) 867-0264 (647) 856-0264, E-Mail: kathirolinews@gmail.com / www.kathirolinews.com / www.kathiroli.digitalepaper.in

Published by : Kathiroli Media Inc.
Publisher : Vijayaletchumi Hanna
Director & Editor in chief : Rev. Rajapandian Paulraj
Associate Editor: Veera kesary Moorthy Sellathurai
Children's Section: Radha Ram, Canada
Editorial, Layout & Designing : IFS Team-India, email: newssmartinfo@gmail.com
Digital E-Paper : Newssmart, India, www.newssmart.in, email:digitalepaper@yahoo.com
Printers : Printwell Web Press, Canada
Total Circulation : 20,000 Copies
Annual Subscription in Canada $ 200 and USA $ 250, Other Countries $ 300
Special Writer's : Dr. Balasundaram, Mr. Perri Muthuraman, Sinthanai pookal Mr. Pathmanathan, Pudhuvai Raman, Mr. K.Kulandaivelu, Guru, Dr. Paul Joseph and newssmart India & Srilanka.
Distribution : Montrial, Cornwall
GTA, Markham, Missisauga, North York, Brampton: Mr. Ravi Vairamuthu
Ottawa: Mr. Siva

மொன்றியல் தொடர்புகளுக்கு...

மொன்றியல் வர்த்தகர்கள் மற்றும் ஆக்கங்களை எழுதுபவர்களும் மற்ற அனைத்து தொடர்புகளுக்கும் அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்:

சிவா: 1-514-276-4206

மீண்டும் வலுப்பெறுகிறது தமிழீழக் கோரிக்கை

அனலை நிதிஸ்
ச. குமாரன்

போரை வெற்றிகொள்ள களம் இருந்தால் மட்டும் போதாது. புறநிலைக் களம் மற்றும் மக்களின் ஆதரவுகள் இருந்தால்த்தான் போரை வெற்றிகொள்ள முடியும் என்பதுதான் நியதி. இறுதிப் போர் நடைபெற்ற வேளையில் தமிழகம் புறநிலைக் களமாக இருந்திருந்தால் தமிழீழத் தனியரசை பல ஆண்டுகளுக்கு முன்னரே உருவாக்கியிருக்க முடியும்.

1991-ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழக அரசியலில் ஏற்பட்ட மாறுதல்கள் தமிழீழம் அடையும் நோக்கத்திற்கு தடையாக இருந்தது. 1991-ஆம் ஆண்டுக் காலப் பகுதிகளுக்கு முன்னர் பல ஆண்டுகள் தமிழ் போராளி அமைப்புக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல்கள் தமிழீழம் அமைக்கும் நோக்கம் பலிக்காமல் போனதற்கு ஒரு காரணமாக இருந்தது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலான ஈழத் தமிழர்களின் ஆயுதப் போர் தமிழீழக் கோரிக்கைக்கு தடைக் கற்களாகவே அமைந்தது. தமிழர்களுக்கென்று ஒரு கட்டுக்கோப்பான அரசியல் தலைமைத்துவம் இன்றுவரை இருந்ததில்லை. இராணுவ ரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகள் தலைமைப் பண்புகளை கொண்டிருந்தார்கள். அரசியல் ரீதியாக தமது தலைமைப் பண்பை உருவாக்கி வரும் வேளையில் இறுதிப் போருடன் அனைத்தும் நிறுத்தப்பட்டு விட்டது.

ஏறத்தாள எட்டுக் கோடித் தமிழர்களைத் தன்னகத்தே வைத்துள்ள தமிழ் நாட்டின் அரசியல்வாதிகளின் பின்னுக்கு முன் முரணான நடவடிக்கைகள் அரசியல் ரீதியாக தமிழர்களை ஒற்றுமைப்படுத்தும் நிலையில் இல்லை. தமிழ்நாடு மற்றும் தமிழர் மேம்பாட்டுடன் சம்பந்தப்பட்ட எந்தவொரு நிகழ்வுகளும் தமிழ்நாட்டில் ஏற்பட்டுவிட்டால், ஆளும் கட்சி எதிர்க்கட்சிகளை வசைபாடி மக்களை பிழையான வழிக்கே அழைத்துச் சென்றுள்ளார்கள் என்பதுதான் வரலாறு.

தலைமைப் பண்புகளுக்கு ஒவ்வாத செயற்பாடுகளையே கலைஞர் மற்றும் ஜெயலலிதா போன்றவர்கள் இதுநாள் வரை செய்து வந்துள்ளார்கள். கொள்கை ஒன்றை வகுத்துவிட்டால் அதற்காக இறுதிவரை போராடும் தன்மை ஒரு தலைவருக்கு இருத்தல் வேண்டும். தொண்டர்கள் அக்கொள்கைகளில் இருந்து மாறாமல் இருக்க தலைவர் தொடர்ந்தும் அதற்காக குரல் கொடுத்துக் கொண்டு இருக்க வேண்டும். பெரியார், காமராஜர், அண்ணா மற்றும் எம்.ஜி.ராமச்சந்திரன் போன்ற மறைந்த தமிழகத் தலைவர்கள் தமது கொள்கைகள் என்னவோ அதற்காக போராடி வெற்றியடைந்தவர்கள்.

போராட்டப் பாதைகள் மாறலாம் ஆனால் போராட்டம் மாறிவிடக்கூடாது என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அடிக்கடி கூறுவார். இவருடைய கூற்று நூற்றுக்கு நூறு வீதம் உண்மையே. ஒற்றையடிப் பாதையில் சென்று போராட்டத்தை வெல்லலாம் என்பது மடத்தனம். போராட்டத்தின் தன்மைகளை அறிந்து நெளிவு சுளிவுகளுக்கு ஏற்றவாறு போராட்டத்தை செய்தாலே வெற்றிகொள்ள முடியும்.

காலத்திற்கு ஏற்றவாறு மாறும் தலைமைகள்

முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன் உயரிய தலைமைப் பண்பைக் கொண்டவர். தான் கொண்ட கொள்கையில் இறுதிவரை பற்றுக் கொண்டு வெல்லும் மனம் படைத்தவர் எம்.ஜி.ஆர். ஈழத் தமிழர்களுக்கு தமிழீழமே இறுதித் தீர்வு என்கிற கொள்கையை ஏற்றுக்கொண்டு தமிழீழப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் பல்வேறு உதவிகளைச் செய்தவரே எம்.ஜி.ஆர் என்பது உலகறிந்த உண்மை.

1970 மற்றும் 1980-களில் தமிழ்ப் போராளிகள் தமிழகம் சென்றபோது அவர்களைப் பிடித்து சிறிலங்காவிடம் ஒப்படைத்த கலைஞர் பின்னர் தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதாகக் கூறி ரெசோ என்கிற அமைப்பின் தலைவராக செயற்பட்டார். இயக்கங்களை ஒற்றுமைப்படுத்துவதற்குப் பதில் அவர்களை பிரித்துப் பார்க்கவே விரும்பினார் கலைஞர். டெலோ போன்ற போராளி இயக்கங்களுக்கு பண உதவிகளை செய்து விடுதலைப் புலிகளின் தலைமையை ஓரம்கட்ட வேண்டுமென்கிற வகையில் செயற்பட்டார் கலைஞர்.

காலத்திற்குக் காலம் மாறுபட்டக் கருத்துக்களைக் கொண்டு செயற்பட்டவரே கலைஞர். இராஜீவ் மரணத்திற்குப் பினனர் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாறுதல் காரணமாக 1991-ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டம் ஒன்றில் கலைஞர் பேசுகையில், விடுதலைப் புலிகளின் தனி ஈழம் என்ற கோரிக்கையில் உள்ள சிரமங்களை எடுத்துரைத்தார். ஒன்றுபட்ட இலங்கைக்கு உள்ளேயே தமிழர்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென்கிற வாதத்தை முன்வைத்துப் பேசிவந்தவர் கலைஞர்.

பிரபாகரன் இல்லையென்றால் தமிழர்கள் அழிக்கப்பட்டு விடுவார்கள் என்று கூறி வந்தவரே ஜெயலலிதா. 1990-ஆம் ஆண்டில் கருணாநிதியின் ஆட்சியைக் கலைத்து மீண்டும் தேர்தலை நடத்தி அதன் மூலமாக தான் ஆட்சிக் கட்டில் ஏறிவிட வேண்டுமென்கிற காரணத்தினால் பொய்ப் பிரச்சாரங்களை ஜெயலலிதா மேற்கொண்டார்.

சிங்கள அரச படைகளுடன் மீண்டும் 1990-ஆம் ஆண்டில் போர் ஆரம்பித்தவுடன் பல்லாயிரம் தமிழர்கள் தமிழ் நாட்டிற்கு அகதிகளாக படையெடுத்திருந்த காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் தமிழகத்திற்குள் உட்புகுந்து விட்டதாகவும், சட்டம் ஒழுங்கு தமிழகத்தில் சீர்குலைந்து விட்டதாகவும் கூறி தமிழக ஆட்சியைக் கலைக்க உத்தரவிடும்படி போராட்டங்களை முன்னெடுத்த ஜெயலலிதா வெற்றியும் கண்டார்.

இந்திய மத்திய சர்க்கார் தமிழக அரசைக் கலைத்து ஆளுநர் ஆட்சியை கொண்டு வந்தது. 1991-ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது ராஜீவ் படுகொலை செய்யப்பட்டார். இதனைச் சாட்டாக வைத்து கலைஞர் தலைமையிலான தி.மு.காவிற்கு எதிராக பிரச்சாரம் செய்து ஜெயலலிதா அமோக வெற்றிபெற்று தமிழக முதல்வரானார். இதன் பின்னர் இயற்றப்பட்ட சட்டங்கள் ஈழத் தமிழர்கள் பற்றியோ அல்லது அவர்களுடைய போராட்டம் பற்றியோ தமிழகத்தில் பேசுவதற்குக்கூட இடமளிக்கவில்லை.

தமிழீழத்திற்கு ஆதரவாக பேசுபவர்கள் சிறை அடைக்கப்பட்டனர். அப்பாவி ஈழத் தமிழ் அகதிகளை கைது செய்து புலி எனும் முத்திரை குத்தி பல்லாண்டு காலம் சிறைவாசம் அனுபவிக்க வழி அமைத்து கொடுத்தார் ஜெயலலிதா. காலங்கள் உருண்டோடின. பல்லாயிரம் ஈழத் தமிழர்கள் ஈழத்தில் அழியும் போது வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தார்கள் தமிழக அரசியல்வாதிகள். தமிழீழ விடுதலைக்குப் போராடிய விடுதலைப் புலிகள் புறநிலைக் களமின்றி தவித்தார்கள்.

பல்வேறுபட்ட தடைகளை ஏற்படுத்தி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த மக்களை வதைப்படுத்தியது சிங்கள அரசுகள். தமிழ் நாடு பக்கபலமாக இருந்திருந்தால் எவ்வித தடைகளுமின்றி பொருட்களை கொள்முதல் செய்து பல்லாயிரம் மக்களை பட்டினியிலிருந்து காப்பாற்றி இருக்கலாம். புறநிலைக் களம் இல்லாத காரணத்தினால்த்தான் ஈழத் தமிழர்கள் பல இன்னல்களைச் சந்திக்க நேர்ந்தது. ஈழத்திற்கு ஆதரவாக தாம் வாழும் நாடுகளில் உலகத் தமிழர்கள் போராட்டங்களைச் செய்து உலக நாடுகளின் கவனத்தை ஈர்ந்தார்கள். ஆனால், புறநிலைக் களம் இல்லாத காரணத்தினாலேயே நான்காம் கட்ட ஈழப் போர் தோல்வியில் முடிந்தது.

மீண்டும் ஈழத்திற்கான குரல்

ஈழப் போர் உச்சிக்கட்டத்தில் இருந்த போது ஜெயலலிதாவின் கட்சி எதிர்க் கட்சியாக இருந்தது. தமிழக மக்களின் எழுச்சியைக் கண்டு அவர்களின் ஆதரவைப் பெற்று மீண்டும் ஆட்சிப் பீடம் ஏறிவிட வேண்டுமென்கிற காரணத்தினால் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மூன்று வருடங்களுக்கு முன்னர் எடுத்தார் ஜெயலலிதா. கலைஞருக்கு எதிராக பிரச்சாரங்களை மேற்கொண்டு மீண்டும் அரச நாற்காலியைப் பிடித்துக் கொண்ட ஜெயலலிதா ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான சில செயற்பாடுகளை செய்து கொண்டிருக்கிறார். தமிழீழமே ஈழத் தமிழர்களுக்கு இறுதித் தீர்வு என்று கூறாமல் இலங்கைத் தமிழர்கள் என்றே கூறிவருகிறார் ஜெயலலிதா.

கலைஞர் தலைமையிலான தி.மு.க. கடந்த தேர்தலில் படுதோல்வி அடைந்தது. அன்றிலிருந்து இன்றுவரை ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான பேச்சுக்களை பேசி வருகிறார் கலைஞர். பொதுக்கூட்டம் ஒன்றில் கலைஞர் சில தினங்களுக்கு முன்னர் பேசும்போது, 'தமிழீழம் மலராததற்கு காரணம் நிறைய உண்டு. அது பற்றி ஆராய்ந்து சொல்ல விரும்பவில்லை. தமிழன் தலை நிமிர்ந்து வாழ வேண்டும். தமிழீழத்துக்கு இன்றைய தினம் புதிய எழுச்சியை உருவாக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. நான் முன்பு சொன்னது போல் எனக்கு இன்னும் எத்தனை ஆண்டுகளோ தெரியாது. ஆனால்

ஈழத்தின் எழுச்சியை உருவாக்காம
உங்களை மட்டும் அல்ல இந்த உலகத்ன
விட்டே போகமாட்டேன்' என்ற
கலைஞர்.

அவர் மேலும் தெரிவிக்கையி
'உங்களுக்கு நிறைவேறாத ஆ
உண்டா? என்று பத்திரிகையாளர்க
என்னிடம் கேட்டார்கள். அதற்கு ஈழ
மலர வேண்டும் என்பதே என் ஆ
என்றேன். தமிழ் மலர பாடுபட நா
அனைவரும் ஒத்துழைக்க வேண்டு
மீண்டும் டெசோவை உருவாக்க வே
டும் என்று ஆசைப்படுகிறேன். அதி
நானும்இ பேராசிரியர் அன்பழகன்,
வீரமணி இடம்பெறுவோம்' என்ற
கலைஞர்.

கடந்த வாரம் சிறிலங்கா சென்று திரு
பிய இந்திய நாடாளுமன்றக் குழுவி
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை
சேர்ந்த டி.கே.ரங்கராஜனும் இடம்பெற்
இருந்தார். நாடு திரும்பியதும் சிறிலங்
அரசிற்கு ஆதரவான பல சொற்பதங்கள
பாவித்தே வந்தார் இவர். குறிப்பாக தா
வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்
சென்ற போது தமிழ் மக்கள் தன
தமிழீழம் கோரவில்லையெனவு
இலங்கை நாட்டிற்குள் சில அரசிய
அதிகாரங்களைப் பெற்று வாழ வேண்
மென்பதே தமது விருப்பம் என்று தம்
டம் தமிழ் மக்கள் கூறியதாக பத்திரிகை
யாளர்களிடம் கூறினார் ரங்கராஜன். இ
குறித்து இவருடைய கருத்துக்கள
நிராகரிக்கும் விதமாக அறிக்கை
வெளியிட்டார் கலைஞர்.

கலைஞர் தனது அறிக்கையி
'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி
செய்தித் தொடர்பாளர், சுரேஷ் பிரேம
சந்திரன், வாக்குறுதிகளை மீறுவதை
இலங்கை அரசு வழக்கமாக கொண்டிரு
கும் வரலாற்றினை சுட்டிக்காட்டி இரு
கிறார். சுரேஷ் பிரேமச்சந்திரன் தோலுர
துக் காட்டியிருக்கும் இலங்கை அ
தொடர்ந்து பின்பற்றி வரும் தமி
விரோத வரலாற்று நிகழ்வுகளி
பின்னணியில் பார்த்தால், தற்போ
சுஷ்மா ஸ்வராஜ் தலைமையில் சென்
இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களி
குழுவிடம் அதிபர் ராஜபக்சே அ
திருக்கும் உறுதிமொழிகள் அனைத்
ஏமாற்றும் தந்திரோபாயங்கள் தா
என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்

'டி.கே.ரங்கராஜன் வெளியிட்டுள்
இன்னொரு தகவல் நமது உள்ளத்
உலுக்குகிறது. மட்டக்களப்பு பகுதிகளு
குச் சென்ற போது எங்களுக்கு வேதன
யான நிலை ஏற்பட்டது. உண்மை
லேயே நான் கண்ணீர் விட்டே
இலங்கைப் போரில் 35,000 தமிழ்ப் பெ
கள் விதவைகளாகி உள்ளதைப் பா
தோம். இவர்களில் 13,000 விதவைகள்
வயதுக்கும் குறைவானவர்கள் என்
அவர் சொல்லியிருக்கிறார்.'

'தனி ஈழம் வேண்டுமென்று இலங்
யில் யாரும் வலியுறுத்தவில்லை என்
சொல்லியிருக்கும் டி.கே. ரங்கராஜ
கவனத்திற்கு ஒரு நிகழ்வினை நின
வூட்ட விரும்புகிறேன். 1977-ஆம் ஆண்
நடைபெற்ற தேர்தலுக்கு முன்பு, 1976
வட்டுக்கோட்டை என்ற இடத்தில் நட
பெற்ற மாநாட்டில், அனைத்துத் தமி



...க்களின் விடுதலைக் 'கூட்டணி; ...லையக மக்களுடைய அமைப்பு என ...ல்லோரும் ஒன்றிணைந்து 'தனித் தமிழ் ...ழம்' தான் என்ற முடிவினைத் தீர்மான ...ாக வடித்தெடுத்து அதனையே முன் ...வைத்து தேர்தலிலே போட்டியிட்டார் ...ள். தமிழ்ப்பகுதிகளில் நடைபெற்ற ...தர்தலில், ஒரு தொகுதியைத் தவிர 18 ...தாகுதிகளில் அவர்கள் வெற்றி பெற்றார் ...ள்.'

'தனித் தமிழ் ஈழம் தான் என்பது ...977-ஆம் ஆண்டிலேயே தமிழ் மக்கள் ...ன்வந்து தந்த தீர்ப்பு. ஆனால் 35 ...ண்டுகளுக்குப் பிறகு இப்போதுள்ள ...லை உலகெங்கிலும் பரவியிருக்கும் ...மிழர்களின் உள்ளக் கிடக்கை தனித் ...மிழ் ஈழம் என்ற ஒரே திசையை ...நாக்கியே மேலும் உறுதிப்பட்டிருக் ...றது. இலங்கைத் தமிழர் பிரச்சினையை ...டக்குமுறை அடாவடிகளாலோ, அதி ...ார அத்து மீறல்களாலோ, சர்வாதிகார ...திராட்டங்களாலோ தீர்த்து விட முடி ...ாது. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ...மலும் தாமதமோ தயக்கமோ இன்றி ...ர்வு காணப்பட வேண்டுமென்பது காலத் ...ின் கட்டளை. அதைக் கால வரையறை ...ின்றி ஒத்தி வைத்து விட முடியாது' ...ன்று தனது அறிக்கையில் கூறினார் ...லைஞர்.

'தனி ஈழக் கோரிக்கையில் மார்க்சிஸ்ட் ...ட்சியை விமர்சித்துள்ள கலைஞருக்கு ...க்கட்சியின் மாநிலச் செயலர் ...ி.ராமகிருஷ்ணன் பதிலளித்துள்ளார். ...லங்கையில் பல்வேறு தரப்பினரும் கூறியுள்ள கருத்தைத்தான் டி.கே.ரங்கராஜன் தெரிவித்ததாக ஜி.ராமகிருஷ்ணன் குறிப்பிட்டார். இது தொடர்பாக ஜி.ராமகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: 'தனி ஈழத்திற்குக் குறைவான எதற்கும் இலங்கைத் தமிழர்கள் எதற்கும் சம்மதிக்க மாட்டார்கள் என்ற கருணாநிதியின் கருத்து குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பிரிக்கப்படாத ஒன்றுபட்ட இலங்கைக்கு உள்ளேயே தீர்வு காண்பதுதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். இலங்கை சென்ற இந்திய எம்.பிக்கள் குழுவிடமும் இதே கருத்தையே தெரிவித்துள்ளார்.'

அவர் மேலும் தெரிவிக்கையில், 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுரேஷ் பிரேமச்சந்திரன் சென்னையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய கருத்தரங்கில் உரையாற்றுகையில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் அரசியல் தீர்வு என்பதையே வலியுறுத்தினார். இப்போதும் கூட அவர் தனி ஈழத்திற்குக் குறைவான எதையும் ஏற்கமாட்டோம் என்று கூறவில்லை. மாறாக, தமிழர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்றுதான் வலியுறுத்தியுள்ளார். எந்த ஒரு பிரச்சனையிலும் சம்பந்தப்பட்ட மக்கள் மற்றும் பிரதிநிதிகளின் கருத்தோட்டம் என்ன என்பதே முதன்மையானது. மார்க்சிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து அதிகபட்ச சுயாட்சி, அர்த்தபூர்வமான அதிகாரப்பரவல் என்பதையே முன்பின் முரணின்றி தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளது' என்றார் ஜி.ராமகிருஷ்ணன்.

தமிழீழம் அடையும் வரை ஓயமாட்டேன் மற்றும் வன்முறையின்றி ஜனநாயக விழுமியங்களுக்கு ஏற்றவாறு தமிழ் ஈழத்திற்கான பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும், இதற்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இந்திய அரசு உதவ வேண்டுமென்று கருணாநிதி குரல் கொடுத்துள்ளதானது உலகத் தமிழர்கள் மத்தியில் பேரதிர்ச்சியை உண்டுபண்ணியுள்ளது. ஆட்சிக் கட்டிலில் இருந்த காலத்தில் அமைதியாக இருந்துவிட்டு, இப்போது கலைஞர் பேசுவது நாடகம் என்று கருதுகிறார்கள் உலகத்தமிழர்கள்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள், மாநில சுயாட்சியும் அதிகாரப் பரவலும் வேண்டும் என்பதுதான் இந்தியாவின் நிலைப்பாடு அதுவே தனது நிலைப்பாடும் என்று கலைஞர் தொடர்ந்து கூறி வந்தார். ஆனால் தற்போது திடீரென பல்டி அடித்துள்ளது வெறும் நாடகம் என்று கருத வேண்டியுள்ளது. சிங்களவர்கள் கோபப்படும்படி நடந்து கொள்ளக் கூடாது என்று சில வருடங்களுக்கு முன்னர் பேசியவரே கலைஞர். தனி ஈழம் என்கிற வாதத்தை இப்போது முன்வைத்துப் பேசும்போது மகிந்த ராஜபக்சாவின் சகோதரர் கோத்தபாய ராஜபக்சா கலைஞரைக் கண்டித்து அறிக்கை விட்டுள்ளார். ஈழத்தை இந்தியாவில் அமைப்பதே சிறந்ததாகவும் கலைஞருக்கு அறிவுரை கூறியுள்ளார் கோத்தபாய.

பல்லாயிரம் தமிழ் மக்கள் ஈழத்தில் சாகும்போது ஆட்சியில் இருந்தவரே கலைஞர். இந்திய மத்திய அரசில் கலைஞருடைய கட்சி முக்கிய பங்கு வகிக்கிறது. தனது கட்சியின் செல்வாக்கை பாவித்து மனிதாபிமான ரீதியிலாவது ஈழத் தமிழர்களின் துயரை துடைக்க முனையாமல் வெறும் கண் துடைப்பு நாடகங்களை நடத்தியதைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை. இப்படிப்பட்டவர் தற்போது தொடர்ந்தும் ஈழம் பற்றி அறிக்கை விட்டுக்கொண்டு இருக்கிறார். இவருடைய அறிக்கைகளுக்கு பதில் அறிக்கைகளை தொடர்ந்தும் வெளியிட்டுவரும் ஜெயலலிதா இது சம்பந்தமாக எதனையும் தெரிவிக்காமல் இருக்கிறார்.

தமிழீழ விடுதலைக்கான குரல் மீண்டும் தமிழகத்தில் ஒலிக்கிறது என்பது உண்மையே. தலைமைப் பண்புகள் இல்லாமல் வெறும் அரசியல் காய் நகர்த்தல்களுக்காக ஈழப் போராட்டத்தைப் பாவிப்பது வெட்கப்பட வேண்டிய விடயம். தமிழ் நாட்டில் இருக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த குரலில் தமிழீழமே சிறிலங்காவில் வாழும் தமிழர்களுக்கு இறுதியும் அறுதியுமான தீர்வு என்று கூறி அறவழிப் போராட்டத்தை ஆரம்பிப்பதே தமிழீழ தனியரசை நிறுவ வழி வகுக்கும். இதுவே லட்சக்கணக்கான மக்களின் குருதி சிந்திய மண்ணுக்கும் மக்களுக்கும் அளிக்கும் ஆதரவாக அமையும்.

கனடா உலகத்தமிழர் பத்திரிகை ஆசிரியரின் வாகனம் தீக்கிரை

இது ஒரு கொலைப் பயமுறுத்தல் எச்சரிக்கை என்று கனடாத் தமிழ் ஊடகவியலாளர் இணையம் கண்டனம்





கனடிய முன்னணித் தமிழ் ஊடகங்களில் ஒன்றான 'கனடா உலகத்தமிழர்' பத்திரிகையின் ஆசிரியரும் வெளியீட்டாளருமான திரு. ந. கமலவாசன் 'கமல்' அவர்களின் இல்லத்தின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த அவரது வாகனம் 2012 ஏப்ரல் 23ஆம் திகதி திங்கட்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் மூன்றுமணியளவில் தீ மூட்டி எரிக்கப்பட்ட வன்செயலை கனடாத் தமிழ் ஊடகவியலாளர் இணையம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இதுதொடர்பாக ஊடகவியலாளர் இணையம் வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

பூரணமான ஊடக சுதந்திரமுள்ள கனடிய நாட்டில் ஒரு சுதந்திரமான ஊடகவியலாளர் மீது மிகக் கொடூரமான முறையில் திட்டமிட்டு நடத்தப்பட்ட ஓர் செயற்பாட்டின் அங்கமாகவே இதனை நாம் கருதுகின்றோம் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

'கருத்துகள் புனிதமானவை, விமர்சனங்கள் சுதந்திரமானவை' என்ற ஊடக தார்ப்பரியத்தை உணர்ந்துகொள்ளாத சில விசமிகளின் செயலாகவே இதனைப் பார்க்க முடிகின்றது.

சிறிலங்கா சிங்கள தேசத்தில் ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் நடத்தப்பட்டுவரும் தாக்குதல்களுக்கு நிகரானதாக, கனடாவிலும் தமிழ் ஊடகவியலாளர் மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோ என்று சந்தேகிக்கும் அளவிற்கு இந்தத் தீமூட்டல் இடம்பெற்றுள்ளது.

இதனை சாதாரண ஒரு நிகழ்வாகவோ, தற்செயலான ஒன்றாகவோ ஊடகவியலாளர் இணையம் கருதவில்லை.

திரு. கமலவாசன் மீது கடந்த மூன்று வருடங்களாக பல்வேறு வகையான அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தாக்குதல் முயற்சி, கொலைப் பயமுறுத்தல், கடத்தல் பயமுறுத்தல், பொது இடங்களில் தகாத வார்த்தைகளால் ஆத்திரமூட்டல் போன்ற பல சம்பவங்களையிட்டு காவல் துறையினரிடம் இவரால் புகார் செய்யப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளும், சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சூழ்நிலையில் அவரது சொந்த வாகனம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இதற்கான நோக்கம் என்ன என்பது பற்றி காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருவதால் நாம் மேலதிகமாக எதுவும் குறிப்பிடப்பட விரும்பவில்லை. ஆனால் இன்றைய காலத்தையும் சூழ்நிலையையும் பயன்படுத்தி கனடியத் தமிழ் சமூகத்தை கூறு போடவும், போர்க்குற்றம் புரிந்த சிறிலங்கா அரசாங்கத்தைக் கூண்டில் ஏற்றி குற்றவாளியாக்க கனடிய அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளை குழப்பியடிக்கவும், கனடிய அரசின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இயங்கிவரும் 'கனடா உலகத்தமிழர்' பத்திரிகையை முடக்கவும், இவரது வாகனம் தீக்கிரையாக்கப்பட்டது அமைந்திருக்கலாம் என்று இணையம் கருதுகின்றது.


கடந்த சில மாதங்களுக்குள் இங்கு இடம்பெற்ற இவ்வகையான சில தாக்குதல், அச்சுறுத்தல் முயற்சிகளையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

அரசியல் ஆய்வாளர் நேரு குணரத்தினம் அவர்களுடைய வாகனம் சேதமாக்கப்பட்டது, அவர் மீது தாக்குதலும் இடம்பெற்றது. மூத்த ஊடகவியலாளர் திரு எஸ். திருச்செல்வம் மீது இரண்டு, மூன்று தடவைகள் பொது நிகழ்வுகளில் வைத்து பயமுறுத்தல் எச்சரிக்கை விடுக்கப்பட்டது, ஒரு தடவை தாக்குதல் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த வரிசையில் இப்பொழுது 'கனடா உலகத்தமிழர்' பத்திரிகையின் ஆசிரியரின் வாகனத்தை தீமூட்டி எரித்ததை அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் விடுக்கப்பட்ட கொலைப் பயமுறுத்தல் எச்சரிக்கையாகவே நாம் பார்க்கின்றோம்.

புலம்பெயர்ந்த நாட்டில் நாம் அனைவரும் கட்டிக் காத்து வளர்க்கவேண்டிய ஊடக சுதந்திரத்தை அழித்தொழித்து, கனடிய தமிழர் சமூகத்திற்கு முழுமையான தலைகுனிவை ஏற்படுத்தும் தீய சக்திகளைக் காவல் துறையினருக்கு அடையாளம் காட்டி, அவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ் சமூக உறவுகள் அனைவரையும் பணிவுடன் கனடியத் தமிழ் ஊடகவியலாளர் இணையம் வேண்டுகிறது.

கருக்கலைப்பு உரிமைகள் குறித்து ஆராய சிறப்புக் குழு ஏற்படுத்த கொன்சர்வேற்றிவ் திட்டம்



கருக்கலைப்பு உரிமைகள் குறித்த விவாதங்களே இன்றைய பாராளுமன்றக் கூட்டத்தொடரின் முக்கிய அம்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மனித வாழ்க்கை எப்போது தொடங்குகிறது என்ற விடயத்தில் உறுப்பினர்களிடையே பல மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வருவதால் இது குறித்து ஆராய்வதற்கென சிறப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தவும் கோன்செர்வேற்றிவ் கட்சி திட்டமிட்டுள்ளது.

ஸ்டீபன் வூட்வோர்த் என்ற கொன்சர்வேற்றிவ் பாராளுமன்ற உறுப்பினர் சிறப்புக் குழுவினை ஏற்படுத்த வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போதைய கனடிய சட்டங்களின் படி ஒரு குழந்தை பிறந்து தாயின் தொப்புள்கொடியை விட்டு அகற்றப்பட்ட பிறகே அதற்கு மனித உரிமைகள் கிடைக்கிறது. இது கடந்த 400 வருடங்களாக பிரித்தானியா வில் பின்பற்றி வரும் இந்த சட்டங்களையே கனடாவும் அங்கீகரித்து வந்தது.

ஆனால் சமீப காலமாகவே கரு உருவான உடனேயே அதற்கு மனித உரிமைகள் கிடைக்கப்பெற வேண்டும் என்றும் கருக்கலைப்பு செய்து கொள்வதென்பது மனித உரிமை மீறல்கள் என பல கத்தோலிக்க மத அமைப்புக்களும், வேறு சிலரும் வாதிட்டு வருகின்றனர்.

மனித வாழக்கை தொடங்குவது எப்போது என்பதே இந்த சர்ச்சைகளுக்கெல்லாம் காரணம் என்பதால் முதலில் அது குறித்த விரிவான ஆராயச்சிகள் மேற்கொள்ளப்பட்டு சிறப்புக் குழு அளிக்கும் முடிவுகளின் அடிப்படையில் புதிய சட்டங்கள் உருவாகக்பப்டும் எனத் தெரிகிறது.

மாணவர்களின் போராட்டம் சட்ட விரோதமானது: காவல்துறை




அரசு கல்விக்கட்டண உயர்வு குறித்து இனிப் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்று கூறியதால் இந்தப் போராட்டம் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் கல்விக் கட்டண உயர்வை எதிர்த்து மொன்றியலில் மாணவர்கள் போராட்டம் நடத்தினர், இந்தப் போராட்டத்தை காவல்துறையினர் சட்டவிரோதமானது எனக்கூறி கலைத்து விட்டனர்.

கல்விக் கட்டண உயர்வை எதிர்த்து கியுபெக்கில் மாணவர்கள் நேற்று இரவு 9 மணிக்கு போராட்டம் நடத்தினர். இவர்கள் காவல் துறையினரின் தடுப்புகள் மீது கற்களை எறிந்தனர்.

இன்னொரு குழுவினர், இன்னும் சற்று தூரத்திற்கு வடக்கு நோக்கி பேரணி நடத்த முயன்றனர்.

மொன்றியல் பல்கலைக் கழக மாணவர்களின் கோரிக்கைக்கு முதல்வர் செவிசாய்ப்பு!



மொன்றியல் பல்கலைக் கழக மாண வர்கள் மாதக் கணக்காக மேற்கொண் வரும் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளுக் செவிசாய்க்க மறுத்து வந்த கியூபெ முதல்வர் ஜீன் சரெஸ்ட் வெள்ளி கிழமை தனது பிடிவாதத்தினை சற் தளர்த்தி உள்ளார். பல்கலைக்கழக மாண வர்களுக்கான கல்விக் கட்டணத்ன அவர் அதிகரித்ததை அடுத்து மாணவர்க எதிர்ப்பு நடவடிக்கையினையும், ஆர் பாட்டத்தினையும் மேற்கொண்டு வந் னர். அவர்களை பொலிஸார் கட்டு படுத்த முயன்ற போது சில அசம்பா தங்களும் ஏற்பட்டன.

மாணவர்கள் தமது எதிர்ப்பு நடவடி கைக்ளில் தீவிரமாக இருந்ததினால் முத வர் தனது கல்விக் கட்டண அதிகரிப்பி சிறிது மாற்றத்தினை ஏற்படுத்தி இருப் தாக நேற்று முன்தினம் செய்தியா மாநாட்டில் அறிவித்துள்ளார்.

கல்விக் கட்டணம் வருடா வருடம் 3 டொலர்கள் வீதம் ஐந்து வருடங்களுக் அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட் ருந்த முடிவினை தற்போது வருடாந்த 254 டொலர்கள் வீதம் ஏழு வருட களுக்கு அதிகரிக்கப்படும் என அறிவி துள்ளார். இவ்வறிவித்தலை இன்று அவ அறிவித்த போது கல்வி அமைச்சரா லின் போச்சாமும் உடனிருந்தார். ப கலைக் கழகங்களின் வசதிகளை அதிகரி பதற்காக பொது மக்களிடம் இருந் அதிக வரியை அறவிடாது இருப்பதற்கா வே தான் கல்விக் கட்டணத்தை அதிகரித் தாகக் காரணம் கூறியுள்ளார். வன்முன களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், நியா மற்ற ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளுக்கு தனது அரசு அடிபணியாது என்றும் முத வர் ஜீன் சரெஸ்ட் முன்னர் சவால் விடு திருந்தார். ஆனால் மாணவர்களின் ஆர் பாட்ட நடவடிக்கை தொடர்ந்து விரி டைந்து கொண்டிருப்பதனால் இன் கல்விக் கட்டணத்தை ஓரளவு குறைப் தாக அறிவித்துள்ளார்.

கனடிய செய்திகள்

டொரண்டோவில் 2020ஆம் ஆண்டிற்குள் 4 லைட் ரெயில் போக்குவரத்து பாதைகள்

ஒன்டாரியோ - ஜி டி ஏ போக்குவரத்து ஆணைக்குழு மெட்ரோலிங்க்ஸ், 2020 ஆம் ஆண்டுக்குள், டொராண்டோவில் 4 லைட் ரெயில் போக்குவரத்து பாதைகள் அமைக்கும் திட்டத்தை ஒருமனதாக அங்கிகரித்துள்ளது.

பழைய மேயர் திரு. டேவிட் மில்லரின் நகரப் போக்குவரத்து திட்டத்தை, சற்றே மாறுதலுடன் இந்தக் குழு வாக்களித்து இருக்கிறது. தற்போதைய மேயருக்கு இந்தச் செய்தி அவ்வளவாக சந்தோஷத்தைக் கொடுக்காது.

அடுத்த கட்ட நடவடிக்கை போக்குவரத்து வழிகளை விரிவுபடுத்த 8.4 பில்லியன் டாலர் வழங்கவிருக்கும் மாகாண அரசாங்கத்திடம் இத்திட்டத்தை முன் வைக்க வேண்டும்.

டொராண்டோ-எக்லிண்டன், ஸ்கார்பரோ, ஷெப்பார்ட், மற்றும் ஃபின்ச் முதலியவை இந்த நான்கு வழிப் பாதைகள் ஆகும். க்வீன்ஸ் பார்க் இந்த திட்டத்தை ஒப்புக்கொண்டு விட்டால், மாகாண நிறுவனத்திற்கு எக்லிண்டன் க்ராஸ்ட்வுன் எல் ஆர் டீ கட்டுமானப் பணிகளை தொடர்ந்து செய்யவும், 2020 ஆம் ஆண்டிற்குள் 4 வழிப் பாதைகளை கட்டி முடிக்கவும் அங்கிகாரம் அளிக்கப்படும்.

மெட்ரோலிங்க்ஸ் நிறுவனம் அரசாங்கத்தின் பண உதவியை உறுதி செய்தவுடன், போக்குவரத்து அமைச்சர் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

டொராண்டோ வாசிகளுக்கு மிகவும் அத்தியாவசியமான போக்குவரத்து திட்டங்களில் கவனம் செலுத்துவதே தங்கள் அரசாங்கத்தின் நோக்கம் என்று அந்த அறிக்கையில் கூறினார்.

தற்போதைய மேயர் திரு. ராப் போர்ட், தான் தேர்ந்தெடுக்கப்பட்ட போது இறந்துபோன திட்டம் என்று வர்ணித்த நகரப் போக்குவரத்து திட்டம்தான் இது.

அவர் கிழக்கு ஷெப்பர்ட் லிருந்து சுரங்க இருப்புப்பாதை நீட்டிப்பை விரும்பினார்.

தனது யோசனைக்கு வாக்குகள் கிடைக்காதபோது தனது கனவு இன்னும் முற்றுப் பெறவில்லை என்றார்.

'இது ஒரு தேர்தல் சம்பந்தப்பட்ட விஷயம். பிரச்சாரம் இப்போதே தொடங்கி விட்டது' என்றார் அவர்.


கிழக்கு ஷெப்பர்ட் எல் ஆர் டீ முதலில் கட்டு முடிக்கப்படும்.

மெட்ரோ லிங்க்ஸ் கட்டுமானப் பணிகளை வரும் தேர்தல் வருடமான 2014 இல் தொடங்கும்.

இதையடுத்து மேற்கு ஃபின்ச் பணிகள் தொடரும்.



ஆப்கானிலிருந்து கனடிய படைகளை வெளியேற்ற வேண்டும் - என்.டி.பி. கட்சித் தலைவர் தோமஸ் மல்கெயார்



2014 வரையிலும் கனடிய ராணுவ வீரர்கள் ஆப்கானிஸ்தானில் தங்கியிருப்பார்கள் என கெடு விதிக்கப்பட்டுள்ளமைக்கு என்.டி.பி கட்சித் தலைவர் தோமஸ் மல்கெயார் கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளார்.

பிற நாடுகள் அனைத்தும் ஆப்கானிஸ்தானிலிருந்து படிப்படியாக வெளியேறத் தொடங்கி விட்டதால் கடந்த வாரம் ப்ருசெல்ஸில் நடைபெற்ற நேட்டோ நாடுகளின் சந்திப்பின் போது கனடா மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளின் ராணுவப் படைகளின் உதவியோடு அமெரிக்கா அங்கேயே நிலைத்திருப்பதற்கான திட்டம் நீட்டியுள்ள விடயம் வெளியாகியுள்ளது எனவும் தோமஸ் மல்கெயார் எச்சரித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் முடிவுக்கு வந்து வி டது.

அங்குள்ள ராணுவப் படையினரு கும் பயிற்சியளித்து முடித்த பின்னரு கூட ஆப்கனில் தொடர்ந்தும் கனடிய படைகள் இருக்க வேண்டிய அவசிய என்ன எனவும் தோமஸ் மல்கெய கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆப்கான் விடயத்தில் ஏற்கனவே 20 2009 மற்றும் 2011 ஆகிய மூன்று ஆண் களில் கனடிய வீரர்கள் அங்கு தொட தும் தங்கி இருப்பதற்கான காலக்செ நீட்டிக்கப்பட்டுள்ளது என்றும் தற்போ அமெரிக்கா விரும்புவது போல் 2 வரையிலும் காலக்கெடுவை நீட்டி பிரதமர் ஹார்ப்பர் விரும்பினால் அதற் என்.டி.பி ஆதரவளிக்காது என தோம மல்கெயார் உறுதிபடக் கூறியுள்ளார்.

சுலபமாக வெற்றியடையும் காதலில் கவர்ச்சியில்லை; தடைகள் தாம், காதலுக்கு அதிக மதிப்பை அளிக்கிறது. - பெஞ்சமின் பிராங்ளின்

தமிழீழம் வேண்டுமா? வேண்டாமா? பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்!

நக்கீரன்

தமிழீழம் வேண்டுமா? வேண்டாமா? என்று வாக்கெடுப்பு நடத்தத் தயாராகும் அய்.நா! என்ற தலைப்புச் செய்தி ஊடகங்களில் உலா வந்து கொண்டிருக்கிறது.

தமிழீழம் என்கிற தனிநாடு வேண்டுமா? வேண்டாமா? என்கிற வாக்கெடுப்பை இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை சொந்த இடமாக கொண்டிருக்கக் கூடிய தமிழர்கள் மத்தியில் நடத்த அய்க்கிய நாடுகள் அவை நடவடிக்கை எடுத்து வருகின்றது என தெரிய வருகின்றது என்றும் உள்நாட்டில் மட்டும் அன்றி வெளிநாடுகளில் வாழ்பவர்களும் இவ்வாக்கெடுப்பில் பங்கேற்கக் கூடிய வகையில் ஏற்பாடுகள் அமையப் பெற்று இருக்கும் என்றும் புலம்பெயர் தமிழர்களுக்கு இதில் காத்திரமான பங்கு இருக்கும் என்றும் அந்தச் செய்தியில் சொல்லப்பட்டுள்ளது.

மேலும் கொசோவோ, தெற்கு சூடான், கிழக்கு தீமோர் ஆகியவை தனிநாடாகப் பிரிவதற்கு கடந்த ஆண்டுகளில் அய்க்கிய நாடுகள் சபையால் வாக்கெடுப்புக்கள் நடத்தப்பட்டன. அது போலவே தமிழீழம் தொடர்பான பொதுவாக்கெடுப்பும் நடத்தப்படும் என்றும் செய்திகள் வெளிவந்தன.

இவற்றில் எந்த உண்மையும் இல்லை என்பது அய்.நா. அவையின் கட்டமைப்பு, யாப்பு மற்றும் அதன் செயற்பாடுகள் பற்றி அறிந்தவர்களைக் கேட்டால் சொல்வார்கள். ஒரு பொதுவாக்கெடுப்பு நடத்துவது என்றால் அது ஒரு தீர்மானமாக அய்.நா. பாதுகாப்பு அவையில் நிறைவேற்றப்பட வேண்டும். பாதுகாப்பு அவையில் உருசியாவும் சீனாவும் இருக்கும் போது அப்படியான தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்படுவது சாத்தியமில்லை.

இந்த பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற வேண்டுகோள் முதலில் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஒபாமாவுக்கான தமிழர்கள் என்ற அமைப்புத்தான் பிள்ளையார் சுழி போட்டது. இதற்கான வேண்டுகோளில் பல்லாயிரக்கணக்கான கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

சூடான் நாட்டில் இடம்பெற்ற பொதுவாக்கெடுப்பைப் போன்று சிறீலங்காவிலும் ஒரு பொது வாக்கெடுப்பை நடத்துமாறு அமெரிக்க ஆட்சித்தலைவர் ஒபாமாவை, ஒபாமாவுக்கான தமிழர்கள் என்ற அமைப்பு கேட்டிருந்தது. 'தென் சூடான் நடத்திய பொதுவாக்கெடுப்பு மூலம் அந்த நாட்டுக்கு இறைமை வழங்கப்பட்டது. அதன் மூலம் தென் சூடானிய மக்களுக்கு அவர்களது தாயகத்தில் பாதுகாப்பும் அமைதியும் கிடைத்தது. எல்லாவற்றுக்கும் மேலாகக் கொடிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. தென் சூடான் மக்களைப் போல இலங்கைத் தமிழர்களும் பல தசாப்த காலமாக நடந்த உள்நாட்டுப் போரில் கொடுமைப் படுத்தப்பட்டு பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டார்கள். அய்.நா. செயலாளர் நாயகம் அவர்களால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு 25-04-2011 இல் சமர்ப்பித்த அறிக்கையில் (1) செல்லடித் தாக்குதல் மூலம் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். (2) மருத்துவமனைகள் மற்றும் மனிதாபிமான இலக்குகள் செல்லடிக்கு உள்ளாகின. (3) மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் மறுக்கப்பட்டன. (4) போரில் இறந்தவர்களும் தப்பியவர்களும் அனுபவித்த மனிதவுரிமை மீறல்கள். (5) மோதல் வலயத்துக்கு அப்பால் ஊடகங்களுக்கும் விமர்சகர்களுக்கும் எதிரான மனிதவுரிமை மீறல்கள் ஆகியவை பற்றி பன்னாட்டு விசாரணை தேவையென்று பரிந்துரை செய்தது. நாங்கள் மேலதிகமாகக் கேட்பது தமிழர் இறைமைபற்றி ஒரு பொதுவாக்கெடுப்பு நடத்துங்கள் என்பதாகும்.'

இதன் பின்னர் மதிமுக பொதுச் செயலர் வைகோ தமிழீழம் வேண்டுமா? வேண்டாமா? என ஒரு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என சென்னையில் சர்.பிடி. தியாகராயர் அரங்கில் நடைபெற்ற பழ.நெடுமாறன் எழுதிய பிரபாகரன் தமிழர் எழுச்சியின் வடிவம் நூல் வெளியீட்டு விழாவில் கேட்டுக் கொண்டார். பாமக தலைவர் மருத்துவர் இராமதாஸ் அவர்களும் தமிழீழம் வேண்டுமா? வேண்டாமா? என்பது பற்றிப் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

நாம் தமிழர் இயக்கம், விடுதலைச் சிறுத்தைகள், தமிழ்த்தேசப் பொதுவுடமைக் கட்சி, தமிழர் தேசிய இயக்கம், தமிழ் தேச விடுதலை இயக்கம் தனித் தமிழீழத்துக்கு ஆதரவான அமைப்புக்கள் என்பது தெரிந்ததே. வேறுமாதரிச் சொன்னால் இந்திய காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சிகள் தவிர ஏனைய கட்சிகள் தனித் தமிழீழக் கோரிக்கையை ஆதரிக்கின்றன.

திமுக தலைவர் கருணாநிதி அவர்களும் தமிழீழம் நிறைவேறாத எனது நீண்ட நாள் கனவு, தமிழீழத்தில் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். அதற்கான காரணங்களையும் சொன்னார்.

தமிழீழத்தில் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக கிழக்கு தைமூர் நாட்டைப் போலவேதான் சேர்பியா - மாண்டி நீக்ரோ கூட்டாட்சியில் இருந்து மாண்டி நீக்ரோ சுதந்திர தனி நாடாகப் பிரிவதற்கான பொது வாக்கெடுப்பு 2006-05-21 அன்று நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 3-6-2006 அன்று மாண்டி நீக்ரோ சுதந்திரப் பிரகடனம் செய்தது. இதே போல் சேர்பியாவிலிருந்து கொசோவோ எனும் தனி நாடு 17-2-2008 அன்றும் சூடான் நாட்டிலிருந்து தெற்கு சூடான் எனும் தனி நாடு 09-07-2011 ஆம் ஆண்டிலும் அய்க்கிய நாடுகள் மன்றத்தின் தலையீட்டின் பேரில் பொது வாக்கெடுப்பு நடைபெற்று உருவாக்கப்பட்டன. அதேபோன்ற ஒரு நடைமுறையைத்தான் தனித் தமிழ் ஈழத்தைப் பொறுத்தவரை பின்பற்ற வேண்டுமென்று நாம் கோருகிறோம். அதற்குத் தான் இந்திய அரசின் ஒத்துழைப்பை நாடுகிறோம் எனக் கூறினார்.

கலைஞர் கருணாநிதியின் கோரிக்கையைக் கண்டித்து தினமலர், தினக்குரல் மற்றும் இந்து நாளேடுகள் ஆசிரிய தலையங்கம் எழுதின. தமிழீழத்தில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனக் கலைஞர் கருணாநிதி கேட்பதற்கு அவருக்கு சுதந்திரம் இல்லை என இந்த நாளேடுகள் மூன்றும் வாதிட்டன. ஆனால் அந்த வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. கலைஞர் கருணாநிதி தமிழீழக் கோரிக்கையை முன்வைக்க அவருக்கு முழுச் சுதந்திரம் உண்டு. அதற்காக அகிம்சை வழியில் போராடப் போவதாகச் சொல்ல அவருக்கு உரிமையும் உண்டு.

தமிழீழம் வேண்டுமா? இல்லையா? என்பதையிட்டு ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற குரல் புலம்பெயர் தமிழர்களாலும் எழுப்பப்பட்டு வருகிறது. இலங்கையில் அரசியல் வெளியும் சுதந்திரமும் இல்லாத காரணத்தால் தமிழீழக் கோரிக்கையை முன்வைக்க முடியாத நிலைமை இருந்து வருகிறது. இது தெரியாத கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வட - கிழக்கில் வாழும் மக்கள் தமிழீழத்தைக் கேட்கவில்லை என்கிறார்.

போர் முடிந்து 3 ஆண்டுகள் கழிந்த பிற்பாடும் இராசபக்சே அரசு எந்த அரசியல் தீர்வைத்தானும் இதுவரை முன்வைக்கவில்லை. போரில் வென்றாகி விட்டது அரசியல் தீர்வு தேவையில்லை என்பதே இராசபக்சேயின் நிலைப்பாடாக உள்ளது. 13 ஆவது சட்ட திருத்தத்தையே அவர் நடைமுறைப்படுத்தத் தயாரில்லை என்பதைப் பலமுறை சொல்லிவிட்டார். சாத்தான் வேதாகாமத்தை மேற்கோள் காட்டுவது போல் திரு தொண்டமான் காணி, காவல்துறை வேண்டாம் என்று விட்டார் என மகிந்த இராசபக்சே அவரை மேற்கோள் காட்டுகிறார்.

ஆனால் மகிந்த இராசபச்சேயை அலரி மாளிகையில் சந்தித்த சுஸ்மா சுவராஜ் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட அரசியல்தீர்வை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தனக்கிருப்பதாக இலங்கை



சனாதிபதி உறுதியளித்ததாகக் கூறியிருந்தார். ஆனால் அப்படி அவர் சொன்னதாக அரசு பக்கத்தில் இருந்து எந்தச் செய்தியும் இல்லை.

இப்போது கிடைக்கும் செய்தியின்படி இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஸ்மா சுவராஜ் அவர்களுக்கு 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தையோ அதற்கு அப்பாற்பட்ட விடயங்களையோ நடைமுறைப்படுத்துவதாக சிறீலங்கா சனாதிபதி மகிந்த இராசபக்சே எந்த வாக்குறுதி கேட்கப்படவும் இல்லை கொடுக்கப்படவும் இல்லை என்று சிறீலங்கா அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பில் இருந்து வெளி வரும் த அய்லாந்து நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. ஏனைய இணைய தளங்களிலும் இந்தச் செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த சனவரி மாதம் சிறீலங்காவுக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா, தமக்கு சிறீலங்கா ஜனாதிபதி 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட அரசியல்தீர்வை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதி கொடுத்திருப்பதாக கூறியிருந்தார். ஆனால் பின்னர் அவ்வாறான வாக்குறுதி கொடுக்கப்படவில்லை என்று மகிந்தா இராசபக்சே தன்னைச் சந்தித்த வெளிநாட்டு ஊடகவியலாளர் மத்தியில் தெரிவித்தார்.

அதே பாணியில் இப்போது சுஸ்மா சுவராஜ் அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியையும் மறுத்துள்ளார். இதன் மூலம் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா மற்றும் இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவி இருவர் முகத்திலும் மகிந்த இராசபக்சே கரி பூசியுள்ளார்.

'பன்னாட்டு சமூகத்தின் தலையீடு யின்றி இராசபக்சே ஒருபோதும் தீர்வு யோசனைகளை முன்வைக்கப் போவதில்லை. ஜெனிவா தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கும் அரசியல் தீர்வை வழங்குவதற்கும் அரசு தவறினால் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் நாடு இரண்டாகப் பிளவுபடும் சூழ்நிலை ஏற்படும் அய்.நா. அமைதிப்படை வடக்கு, கிழக்கிற்குச் சென்று இதனை அரங்கேற்றும்' என்று எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

ஜெனிவாத் தீர்மானத்தை தொடர்ந்து சிறீலங்கா மீதான சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. ஒரு கட்டத்தில் பொறுமை இழக்கும் பன்னாட்டு சமூகம் எமது நாட்டுக்குள் அய்.நா. அமைதிப் படையை அனுப்பி வடக்கு, கிழக்கு மக்களின் வேட்கைகளை அறிவதற்கான பொது வாக்கெடுப்பை நடத்தலாம். அப்போது அந்த மக்கள் வடக்கு, கிழக்கைப் பிரித்துத் தருமாறு கூறுவர். இந்த நிலைமை ஏற்படுவதற்கு முன்னர் அரசு அரசியல் தீர்வை வழங்கவேண்டும் என எதிரணிப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

போர்க் காலத்தில் வி.புலிகளுக்கு இராணுவத் தீர்வு தமிழ்மக்களுக்கு அரசியல் தீர்வு என்று மகிந்தா இராசபக்சே சொன்னாலும் அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்கும் எண்ணம் அவருக்கு இருக்கவில்லை. பன்னாட்டு சமூகத்தை, குறிப்பாக இந்தியாவை ஏமாற்றவே அவர் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசினார்.

மகிந்த இராசபக்சே புரையோடிப் போய்விட்ட இனச் சிக்கலுக்கு தீர்வு காண முன்வருவார் என்ற நம்பிக்கை தமக்கு குறைந்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் சொல்லத் தொடங்கியுள்ளன.

அய்.நா. மனித உரிமை அவையில் கடந்த மார்ச்சு மாதம் 22 ஆம் நாள் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைப் பற்றி மகிந்த இராசபக்சே கவலைப்படுவதாகத் தெரியவில்லை. தன்மீது எந்த நாடும் அழுத்தங்களை பயன்படுத்த முடியாது அதற்கெல்லாம் மசிய மாட்டேன் என்று ஆணவத்தோடு பேசுகிறார். பாடங்கள் எதனையும் கற்க அவர் அணியமாக வில்லை.

இந்த மனப்போக்குக் காரணமாகவே மசூதிகள் அப்புறப்படுத்தப் படுவதும் இந்துக் கோயில்கள் இடிக்கப்படுவதும் முன்னரைவிட இப்போது வேகம் பெற்றுள்ளது.

தம்புல்ல மசூதி பவுத்த தேரர்களாலும் சிங்களக் காடையர்களாலும் தாக்கப்பட்ட போது சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய காவல்துறை வழக்கம் போல கைகட்டி வாய்பொத்தி வேடிக்கை பார்த்தது. சட்டத்தை கையில் எடுத்த தேரர்களையும் காடையர்களையும் காவல்துறை கண்டு கொள்ளவே இல்லை.

தம்புல்ல மசூதி தாக்கப்பட்டதைக் குறிப்பிட்ட முஸ்லிம் அமைச்சர் ஒருவர் ஜெனிவாவில் சிறிலங்கா அரசுக்கு வழங்கிய ஆதரவுக்குக் கைமாறாகக் கிடைத்த பரிசு எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாம்புக்கு பால் ஊத்தி வளர்த்தாலும் அது கடிக்கும் என்பது முஸ்லிம் அமைச்சர் பட்டாளத்துக்குத் தெரியாமல் போனது அதிசயமே! ஒத்துழைப்பு அல்லது இணக்க அரசியல் நடத்தும் அரசியல்வாதிகளுக்கு 60 ஆண்டு பழமைவாய்ந்த தம்புல்ல மசூதி தாக்கப்பட்டது நல்ல பாடமாக அமைய வேண்டும்.

தாயகத்துக்கு வெளியில் உள்ள மக்கள் சூடான், கொசோவோ, மாண்டிநீக்ரோ, கிழக்குத் தீமோரில் நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்புப் போல் அய்.நா. தமிழர்களின் தாயகத்திலும் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திப் போராட வேண்டும். சிங்கள - பவுத்த வெறியரான மகிந்த இராசபக்சே அரசியல் தீர்வொன்றை முன்வைப்பார் என இலவு காத்த கிளியாகத் தமிழினம் போய்விடக் கூடாது.

‘கட்சியை வலுப்படுத்துவதில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும்’: இளைய லிபரல் கட்சி உறுப்பினர்களுக்கு பாப் ரே அறிவுரை



என்.டி.பி கட்சியின் தலைவராக தோமஸ் மல்கெயார் தெரிவு செய்யப் பட்ட பின்னர் அக்கட்சியினர் சிலரும் மக்களும் அதிருப்தியான நிலையிலேயே இருப்பதாகவும் ஆனால் வாக்களிப்பை தவித்து விட்டு கட்சியை மீளக்கட்டி எழுப்புவதில் அக்கறை செலுத்துமாறு லிபரல் ஆதரவாளர்களை மல்கெயார் கேட்டு வருவதாக பாப் ரே குற்றச்சாட்டியுள்ளார்.

தற்போதைய வாக்கு நிலவரங் களின்படி லிபரல் கட்சியினரின் அணுகுமுறை என்.டி.பி கட்சி யைக் காட்டிலும் உறுதியாகவே இருப்பதாகவும் அவர் கூறியுள் ளார்.

மொன்றியல் பல்கலைக்க முகத்தின் இளைய லிபரல் உறுப் பினர்களிடையே உரையாற்றிய பாப் ரே அவர்களுக்கு பல அறிவு ரைகளையும் வழங்கியுள்ளார்.

இருப்பினும் தற்போது நடத் தப்பட்டுள்ள பல கருத்துக் கணிப் புக்களில் கோன்செர்வேற்றிவ், என்.டி.பி கட்சிகளுக்கு அடுத்த நிலையில் லிபரல் கட்சி உள்ளது என்ப தை சுட்டிக்காட்டிய அவர் தொடர்ந்தும் இளைய லிபரல் உறுப்பினர்கள் கடுமை யாக உழைத்தால் கட்சியை மீளக் கட்டி யெழுப்பி முதலிடத்திற்கு கொண்டு வர இயலும் என்ற நம்பிக்கையினையும் இளையோர் மத்தியில் விதைத்துள்ளார்.

இதற்கு முதல்படியாக லிபரல் கட்சி யில் அதிக அளவிலான உறுப்பினர்களைச் சேர்க்க பாடுபட வேண்டும் என்றும் கட்சிக்கு தேவையான நிதிகளை சேகரித்து வளர்ச்சிப் பாதையில் கட்சியை கொண்டு செல்ல இளையோர் முன் வர வேண்டு மெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கனடிய செய்திகள்



மியான்மர் மீதான தடைகள் நீக்கம்: கனடா

குடியரசு நாடாக மாறிய மியான்மர் மீதான தடைகளை, கனடா நீக்கிக் கொண்டது. அந்நாட்டின் மீதுள்ள நல்ல எண்ணத்தால், நல்ல நம்பிக்கையால் தனது தடைகளை விலக்கி கொண்டதாக கனடா அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தைப் பின்பற்றி கனடாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜான் பெயர்டு மியான்மர் மீதுள்ள ஏற்றுமதி, இறக்குமதித் தடை களை நீக்கிவிட்டதாகத் தெரிவித்தார்.

ஆனால் ஆயுத வர்த்தகத் தடை மட்டும் இன்னும் நீக்கப்படவில்லை.

மியான்மரில் சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற துணைத் தேர்தலில், பல ஆண்டுகளாக வீட்டுச் சிறையில் அடைப் பட்டிருந்த ஆங் சாங் சூகி வெற்றி பெற் றதால் மியான்மர் குடியரசு நாடாக மாறி யது.

இதன் பின் சூகியை மியான்மரில் சந்தித்த பெயர்டு, கனடாவின் உதவி எப் பொழுதும் மியான்மருக்கு உண்டு என்று உறுதிபடத் தெரிவித்தார்.

மேலும் மியான்மரில் இந்த நவீன உலகத்திற்கு சிறந்த உதாரணம் என்றார்.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சீர் திருத்தம் மியான்மருக்கு நன்மை அளிப்ப தாகவும், பொருளாதாரச் சிறப்பை மேம் படுத்துவதாகவும் அமையும் என்று பாராட்டிய பெயர்டு சூகியை, சீர்திருத்த உள்ளம் கொண்டவர், குடிமக்களின் தலைமைப் பிரதிநிதி என்றும் பாராட்டி னார்.


ஒட்டாவோ நகரில் தலாய்லாமாவின் பொதுக்கூட்டத்திற்கு பெரும் ஆதரவு

ஒட்டாவோ நகரில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த திபெத் விடுதலை போராட்ட தியாகி தலாய்லாமாவின் பேச்சைக் கேட் பதற்காக ஏறக்குறை 4000 பேர் காத்திருந் தனர். அவருடைய நேர்மறை சிந்தனை, தன்னம்பிக்கையான பேச்சைக் கேட்பதற் காக ஒரு பள்ளிக்குழந்தைகள் போல் ஒட் டாவோ பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்து டன் காத்திருந்தனர்.

இந்த நூற்றாண்டே சமாதானத்திற்கு சிறந்த ஒரு நூற்றாண்டாக இருக்கிறது என்று நான் நினைக்கின்றேன் என்கிற மந் திர வார்த்தையை தலாய் லாமா கூறியவு டன் கூட்டத்தினர் மிகப்பெரிய கரகோ ஷத்தை எழுப்பினர். மேலும் அவர் கூறி யதாவது இந்த நூற்றாண்டில் நாம் மனித குலத்தின் ஒற்றுமையை கருத்தில் கொண்டு ஒரு கருத்தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

தலாய்லாமாவின் இந்த மிகப்பெரிய சரித்திர புகழ்பெற்ற கூட்டம் சனிக்கிழ மை காலை சிவிக் செண்டர் அருகே நடந் தது. இந்த கூட்டத்தை சிறப்பிக்க பெருந் திரளாக பொதுமக்கள் வந்திருந்தனர் என் பது குறிப்பிடத்தக்கது.

அவரது நீண்ட நெடிய உரையாடல் பின்னர் நடந்த கேள்வி பதில் நிகழ்ச்சி முதலியவற்றை பொதுமக்கள் மிகவும் ரசித்து கேட்டனர்.




விதிமுறைகளை மீறினால் கடுமையான நடவடிக்கை: ரொறொண்ரோ போக்குவரத்துக் கழகம் எச்சரிக்கை

விதிமுறைகளை மீறுவதாக கண்டறி யப்படும் ரொறொண்ரோ போக்குவரத் துக் கழக (TTC) ஊழியர்கள் மீது கடு மையான நடவடிக்கைகள் பாய உள்ளதாக ரொறொண்ரோ போக்குவரத்துக் கழக முதன்மை செயல் அலுவலர் ஆண்டி ப்ய்போர்ட் எச்சரித்துள்ளார்.

ரொறொன்ரோ போக்குவரத்துக் கழக ஊழியர்கள் மோசமான வகையில் நடந்து கொள்வதாக பல குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்தும் வந்து கொண்டிருப்பதை தொடர்ந்து இந்த எச் சரிக்கை அடங்கிய கு றி ப் பா னை அனைத்து ஊழியர் களுக்கும் அனுப்பப் பட்டுள்ளது.

ரொறொண்ரோவில் பேருந்து ஓட்டுனர் ஒருவர் வாகனம் ஓட் டும் நேரத்தில் செய்தித் தாள் படித்துக் கொண் டே வாகனத்தை இயக் கியுள்ளார்.

இதனை பயணி ஒரு வர் காமெராவில் படம் பிடித்தது ஊடகங்க ளில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இதற்கு முன்னரும் ரொறொண்ரோ போக்குவரத்துக் கழக கலெக்ட்டர் ஒருவர் பணி நேரத்தில் தூங்கி வழிந்த ஒளிப்படமும், பாதாள ரயில் இயக்கிய ஓட்டுனர் ஒருவர் அலைபேசி மூலம் குறுந்தகவல் அனுப்பிக் கொண் டே ரயிலை இயக்கிய காணொளிகளும் சமூக வலைத்தளங்களில் வெளியாகிய தால் பெரும் அவமானங்களை ரொறொ ன்ரோ போக்கு வரத்துக் கழகம் சந்தித்து வருகிறதென்பது குறிப்பிடத்தக்கது.



சேப்டம்பர் மாதம் நீதிமன்றின் முன்னிலையில் தோன்ற மாநகர முதல்வர் றொப் போர்ட்டுக்கு உத்தரவு

சட்டத்திற்கு புறம்பாக மக்களின் வரிப் பணத்தை வீணடித்த வழக்கின் கீழ் எதிர் வரும் செப்டம்பர் மாதத்தில் ரொறொண்ரோ மாநகர முதல்வர் றொப் போர்ட் நீதிமன்றின் முன்னிலையில் தோன்ற வேண்டும் என உத்திரவிடப்பட்டுள்ளது.

விசாரணைக்குப் பின்னரே மாநகர முதல்வர் பதவியில் போர்ட் தொடர்ந்தும் நீடிப்பாரா உள்ளிட்ட வினாக்களுக்கு விடை தெரிய வரும் என நம்பப்படுகிறது.

ரொறொண்ரோ நீதிமன்றில் நடக்கவிருக் கும் இந்த விசாரணைக்காக ஒட்டாவாவில் உள்ள உச்ச நீதிமன்ற நீதிபதி சார்லஸ் டி. ஹாக்லேன்ட் ரொறொன்ரோ நீதி மன்றத் திற்கு வரவுள்ளார் என சட்டத்தரணி கிளை டன் ரூபி நேற்று ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

பால் மாகதர் என்ற ரொறொண்டோ நகர வாசி மாநகர முதல்வருக்கு எதிரான வழக் கைத் தொடர்ந்துள்ளார்.

இதில் நகராட்சி விதிமுறைகளுக்கு மாறாக மேயர் தன்னுடைய கால்பந்துக் கழ கத்திற்கு பணம் வழங்கியுள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 7 ஆம் திகதி இது தொடர்பாக நகராட்சியில் நடைபெற்ற வாக்குப் பதிவில் நகராட்சியின் பணம் $3,150 ரோப் போர்டின் கால்பந்துக் கழகத்திற்காக செலவழிக்கப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டி உறுப்பினர்கள் விவாதம் நடத்தியதும் வழக் கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது போன்ற முறைகேடுகளில் ஈடுபட்டு வரும் மாநகர முதல்வர் உடனடியாக பதவி யிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பதே மனுதாரின் கோரிக்கை.



"கதிர் ஒளி"யின் திருமண சேவை

தொடர்புகளுக்கு: 647-984-0264

பிள்ளைகளுடைய திருமணம் கைகூடவில்லை என்று யோசனையா?

பொருத்தமான வரன் இன்னும் அமையவில்லை என்ற வருத்தமா?

....கவலையை விடுங்கள்!

"கதிர் ஒளி" திருமண சேவை மூலமாக உங்கள் பிள்ளைகளின் திருமணத்திற்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்.

இந்து சமய மணமகள் தேவை

KO-270 1980-05-24 யாழ் உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட R.B.C Dexia Accountant பணிபுரியும் 7ல் செவ்வாய்யுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-272 1974-03-17 யாழ் புங்குடுதிவை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட மணமகனுக்கு மனமகள் தேவை.

KO-273 1977-10-23 யாழ் வட்டுகோட்டையை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-274 1968-11-13 யாழ் வட்டுகோட்டையை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-277 1979-04-27 யாழ் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட B.c.s and M.s.c படித்து முகாமையாளராக தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. (இலங்கையிலும் விரும்பதக்கது)

KO-280 1976 ஜுன் இரண்டாம் திகதி மானிப்பாயில் பிறந்து கனடாவில் வசிக்கும் சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-284 1979-05-13 யாழ் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட Computer Engineer மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-287 1977-04-12 மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட விவாகரத்தான மணமகனுக்கு மணமகள் தேவை. (இலங்கையிலும் விரும்பதக்கது.)

KO-291 1977-10-24 யாழ் கோப்பாயை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட B.Com., படித்த மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-293 1973-11-15 யாழ் Hospital road பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட 7ல் செவ்வாய்யுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-294 1978-10-25 யாழ் கரம்பனை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட Material handler தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

KO-296 1975-07-28 யாழ் மயிலிட் டியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மணமகனுக்கு மனமகள் தேவை.

KO-300 1971-03-20 ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் கனடாவை-வசிப்பிடமாகவும் கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. (இலங்கையிலும் விரும்பதக்கது)

KO-302 1976 யாழ். நீர்வேலியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட University முடித்து தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை

KO-304 1976-08-15இல் யாழ். அனலைத் தீவில் பிறந்து கனடாவில் "Logistics and Transportation" என்ற சொந்த தொழில் செய்யும் விவாகரத்தான மணமகனுக்கு மணமகள் தேவை.

இந்து சமய மணமகன் தேவை

KO-297 1985-03-06 யாழ் இனுவிலை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செவிலியர் (Nurse) தொழில் செய்யும் மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-264 1974-12-09 யாழ் புங்குடுதீவை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொணட வாய் பேசமுடியாத மணமகளுக்கு மணமகன் தேவை. (வாய் பேசமுடியாதவர்களும் விவாகரத்தானவர் களும் விரும்பத்தக்கது.

KO-267 1977-12-09 யாழ் நவாலியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட Engineer மணமகளுக்கு மணமகன் தேவை (விவாகரத்தானவர் களும் விரும்பத்தக்கது).

KO-271 1981-08-13 சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டு TD S. B யில் Settlement Worker ஆக பணியாற்றும் B.A பட்ட தாரி மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-275 1976-08-12 யாழ் கொக்குவிலை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட Dental assistant தொழில் செய்யும் மணமகளுக்கு மணமகன் தேவை. விவாகரத்தானவர் களும் விரும்பதக்கது.

KO-276 1980-07-07 கரவெட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட B.A படித்த மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-278 1986-05-14 யாழ் சுளிபுரத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட business management accounting major and finance minor படித்து தொழில் செய்யும் செவ்வாய்யுள்ள மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-279 1983-04-20 யாழ் point peterரை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட Computer Engineering (MBA) படித்து Research In Motion தொழில் செய்யும் மணமகளுக்கு மணமகன் தேவை.



KO-281 1981 செப்டம்பர் முதலாம் திகதி நீர்வெளியில் பிறந்து அங்கே வசிக்கின்ற GAQ படித்த மணமகளுக்கு கனடாவில் மணமகன் தேவை.

KO-282 1973 டிசம்பர் 7 யாழ்ப்பாணத்தில் பிறந்து கனடாவில் வசிக்கும் B.Sc., படித்த மணமகளுக்கு மணமகன் தேவை. விவாகரத்தானவர் களும் விரும்பத்தக்கது.

KO-283 1978-02-08 யாழ் வேலணையை பிறப்பிடமாகவும் கனடாவை பிறப்பிடமாகவும் கொண்ட 8ல் செவ்வாய்யுள்ள Doctor மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-285 1977-10-09 யாழ் கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட Financial Analyst (C.G.A) படித்து தொழில் செய்யும் மணமகளுக்கு மணமகன் தேவை (விவாகரத்தானவரும் விரும்பதக்கது)

KO-288 1984-03-04 மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-289 1977-05-29 யாழ் நெல்லியடியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட CIBC Processing தொழில் செய்யும் மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-290 1985-06-28 யாழ் அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாமசியில் தொழில் செய்யும் மணமகளுக்கு மணமகன் தேவை.

KO-292 1976-11-14 யாழ் நவின்டலை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட Computer science படித்து தொழில் செய்யும் மணமகளுக்கு கனடாவில் or இலங்கையில் மணமகன் தேவை.

KO-299 1977-02-15 காரைநகரை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட Doctor மணமகளுக்கு மணமகன் தேவை

KO-301 1986-08-03 யாழ். நெல்லிபளை பிறப்பிடமாகவும் . வசிப்பிடமாகவும் கொண்ட B.O.Science படித்த 7ல் செவ்வாயுள்ள மணமகளுக்கு கனடாவில் மணமகன் தேவை.

KO-303 யாழ். அச்சுவேலியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட 7ல் செவ்வாயுள்ள கண் வைத்தியராக கடமைபுரியும் மணமகளுக்கு மணமகன் தேவை.

Kathiroli's Toll free: 18552927772

காதலே உலகைக் கட்டிக் காக்கிறது; அதுதான் உயிர் இனத்தை உயிரோடு வாழ வைக்கிறது. - பட்லர்

கிறிஸ்தவம்; சிலுவை மற்றும் உலகம்
CHRISTIANITY; CROSS AND THE WORLD

கிறிஸ்தவம் ஒரு மதமா?


கிறிஸ்தவம் ஒரு மதமானால் அது உலகிலுள்ள எல்லா மதங்களில் இதுவும் ஒன்று என்று அர்த்தமுடையதாகிவிடும். முதலாவது கிறிஸ்தவம் ஒரு மதம் அல்ல. அது மதம் அல்ல என்று கிறிஸ்தவர்களுக்கே தெரியுமா என்று தெரியவில்லை! மதம் என்றால் அந்த சொல்லிற்கு என்ன அர்த்தம்? ஒரு கடவுளை அல்லது ஒரு கடவுளின் பெயரை மையமாக வைத்து அதற்கென்று சில வழிபாடு முறைகளை ஏற்படுத்தி அதைப்பின்பற்றும் படியாக மக்களை உற்சாகப்படுத்தி ஊக்குவித்து அதற்கு ஒரு பெயரிட்டு அதை ஒரு மதம் என்று அழைப்பது வழி வழியாக வந்த மரபாகிவிட்டது. ஒரு புதிதான அரசியல் கட்சி என்று துவங்கபடுகிறது என்று வைத்துக் கொள்வோம். இது வரையிலும் அப்படிப்பட்ட ஒரு கட்சி இருந்ததேயில்லை. ஆனாலும் அதப்பின்பற்றும் ஒரு கூட்டத்தைப் பார்க்கிறோம். அதிலே ஒரு சில புதிய கருத்துக்களோ அல்லது வித்தியாசமான வசீகரிக்கக் கூடிய எதாகிலும் இருக்கும். பின்பு படிப்படியாக அது வளரும். முடிவில் ஒரு தேசத்தின் அல்லது மாவட்டத்தின் ஆட்சியையே கைப்பற்றி விடும். அதைப்பின் பற்றுவோர் தொகை அதிகரித்துக் கொண்டே போகும். இதற்கு மேல் நான் உங்களுக்கு விளக்கத் தேவையில்லை. அதைப்போலவே கலாச்சாரம், சூழ்நிலை மற்றும் நம்பிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு புதுப் புது வழிபாடு முறைகளை வகுத்து அவற்றின் மேல் நம்பிக்கையை வளர்த்ததால் தான் இத்தனை விதமான மதங்கள் உருவாகிவிட்டன. புதிதாகத் தோன்றும் ஒரு அரசியல் கட்சியின் மேல் மக்கள் ஏன் நம்பிக்கை வைக்கிறார்கள்? அதன் மூலமாய் ஏதாவது நன்மை கிடைக்கும் எங்களுக்கும் எங்கள் குடும்பத்தினருக்கும் எங்கள் தேசத்திற்கும் இவர்களாவது செய்வார்கள் என்று நம்பி அவர்களுக்கு வாக்களித்து அவாகளைத் தலைவர்களாகவும் மாற்றி விடுகிறார்கள். முடிவில் நடப்பது என்ன? ஏமாற்றம் தான்.

நல்ல வேளை! அவர்களுக்கு கிடைத்தி ருக்கும் காலம் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் தான். பிடிக்காவிட்டாலோ அல்லது திருப்தியடையாவிட்டாலோ அடுத்த தேர்தலில் அவர்ளை நீக்கி விட்டு வேறொரு கட்சியை ஆட்சிக்கு கொண்டு வந்து விடலாம்.. அதில் ஒரு திருப்தி. ஆனால் மதங்கள் அப்டியல்ல. மதங்கள் தோன்றினபின் அதைப் பின் பற்றுகிறவர்கள். பெருகிவிடுவதினால் அவைகள் அழிவதில்லை. இது எங்களுடைய மதம், நாங்கள் இதைப்பின் பற்றுகிறோம். எங்க ளுக்கு இதில் திருப்தியிருக்கிறது. நீங்கள் வேண்டுமானால் எங்களோடு வந்து சேர்ந்து கொள்ளுங்கள் என்று கூறுவது வழக்கமாகி விட்டது. இதற்கு என்ன காரணம் என்று கிறிஸ்தவ சகோதரனே! என்றாவது நீ சிந்தித்து பார்த்திருக் கிறாயா? ஏன் இந்த நிலை? ஜனங்கள் சத்தியத்தை அறியவில்லை என்று தானே அர்த்தம்.

கிறிஸ்தவ சகோதரனே! உன்னிடத்தில் அல்லவா அந்த சத்தியம் இருக்கிறது. உன்னிடத்தில் அல்லவா மனித குலத்தை வழிநடத்தக்கூடிய மெய்யான வழியின் இரகசியம் இருக்கிறது. இயேசுவின் வார்த்தைகளை உங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன் இயேசு சொன் னார், நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 14:6) சத்தியத்தை அறிவீர்கள் (அதாவது சத்தியமாகிய இயேசுக்கிறித்துவை) அறிவீர்கள். சுத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

மதங்கள் உருவானதற்கு வேறு காரணங்கள்

முதலாவது அதி மனிதன் ஒரே மெய் தேவனோடு (அது யார் என்பதை பிறகு விளக்குகிறேன்) கொண்டிருந்த் நேரடி தொடர்பையும் உறவையும் இழந்து போனான் என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது. விவிலிய (*BIBLE*) நூலும் அதைத் தெளிவாக விளக்குகிறது. ஆதி மனிதர்கள் பாவத்தில் விழுந்த உடனே அவன் தன்னை உருவாக்கினவருடன் இருந்த உறவை இழந்து போனான். பாவத்தில் விழுந்தவுடன் கர்த்தர் ஆதாமை நோக்கி நான் உனக்கு விலக்கின அந்த கனியைப் புசித்தாயோ என்று கேட்டவுடன் தேவரீர் எனக்குத்தந்த ஸ்திரியானவள் என்கு கொடுத்தாள் நான் புசித்தேன் என்றான். தன்னை உருவாக்கின கடவுள் மீதே பழியைப் போட்டு விட்டு, குற்றத்தை ஒப்புக்கொள்ள மனதில்லாமல் அதற்கு காரணம் ஏவாள் என்று கூறிவிட்டான். கர்த்தர் ஏவாளிடத்தில் இதை ஏன் செய்தாய் என்று கேட்டவுடன் செய்த குற்றத்தை தானும் ஒப்புக் கொள்ள மனதில்லாமல் அதை சர்ப்பமாகிய சாத்தானின் மேல் போட்டு விடுகிறாள். இதைத்தான் பாவ சுபாவம் என்கிறோம். மனிதன் பாவத்தில் விழுந்த நாள் முதற்கொண்டு இந்த சுபாவத்திலிருந்து ஒருவனும் விடுதலையாகவில்லை. தானாக விடுதலை அடையவும் முடியாது. ஆனால் கடவுளைப் பற்றிய பயமும், தன்னை சிருஷ்டித்த கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற உணர்வும் அவனை





விட்டு நீங்கிப் போய்விடவில்லை. மீண்டும் அவரைத்தேட ஆரம்பித்தான் மதங்கள் உருவாக ஆரம்பித்தன.

இரண்டாவது, மனிதன் தன்னுடைய சக்திக்கு மிஞ்சின அல்லது எட்டாத கிரியைகள் தன்னைச் சுற்றிலும் நடைபெறுவதைக் கண்டு திகைத்தான். அவனால் அதன் காரணங்களை அறிந்து கொள்ள முடியவில்லை. உடனே தனக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இருக்கிறது, அது யாரென்றும் என்னவென்றும் தெரியாததாலே அதற்கு கடவுள் (எல்லாவற்றையும் கடந்தவர் என்ற அர்த்தம் பட) என்று பெயரிட்டு அவரை எப்படி அடையலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டான். மதங்கள் தோன்ற ஆரம்பித்தன.

மூன்றாவது, மனிதனுடைய வாழ்க்கையில் பிரச்சனைகளும், சோதனைகளும், கஷ்டங்களும் பெருக ஆரம்பித்தன, அதிலிருந்து விடுதலை பெறவும், ஆறுதல் பெறவும் ஏதாவது வழி இருக்கிறதா என்று யோசிக்க ஆரம்பித்தான் மதங்கள் உருவாக ஆரம்பித்தன.

நான்காவது, இந்த சூழ்நிலையை பயன்படுத்தி என்று கூறவதைவிட, இந்தச் சூழ்நிலையில் அல்லல்களுக்குள் வாழ்ந்து கொணடிருக்கும் மக்களுக்கு எப்படி உதவலாம் என்ற தூய்மையான நோக்கத்தோடு அநேக முனிவர்கள், யோகிகள், சித்தாகள் தியானம் செய்ய புறப்பட்டு தங்களுக்கு கிடைத்த ஞானம் மற்றும் வெளிப்பாடுகளைக் கொண்டு சில செயல் மற்றும் வழிபாடு முறைகளை வகுத்து அதற்கு ஒரு பெயரையும் சூட்டி அதை மக்களுக்கு அறிவுரையாக போதிக்க ஆரம்பித்தார்கள். மதங்கள் உருவாக ஆரம்பித்தன.

ஐந்தாவது, ஜனங்கள் அதிகமாக பெருக பெருக அவர்கள் மத்தியில் பரிவுகள் உண்டாயின. ஜாதிக ளின் அடிப் படை, மொழிகளின் அடிப்படை. கலாச் சாரத்தின் அடிப்படை, இப்படி பல்வேறு காரணங்களினால் பிரிவுகளும், பரிவினைகளும் உண்டாயின. ஒரு பரிவினர் மற்ற பரிவினர் பின்பற்றும் வழிபாடு முறைகளை ஏற்றுக் கொள்ள மனதில்லாமல் தங்களுக் கென்று ஒரு தனிப் பட்ட வழிபாட்டு முறை தேவை என்கிற அடிப்படையில் மதங் கள் உருவாக ஆரம்பித் தன.

ஆறாவது, மனிதனுடைய அறிவிற்கு எட்டின வகையில், ஆக்கும் கடவுளென்று ஒருவரையும், காக்கும் கடவுள் என்று ஒருவரையும் அழிக்கும் கடவுள் என்று வேறொருவரையும் மையமாக வைத்து அவை ஒவ்வொன்றிக்கும் வெவ்வேறு பெயரையும் சூட்டி வெவ் வேறு மதங்களாக உருவாகிவிட்டது.

ஏழாவது, ஒரு மதத்திலிருந்து பிரிந்த பகுதியினர் தங்களுக்கென்று ஒரு தனிப்பட்ட ஒரு அங்கீகாரம் அல்லது அடையாளம் தேவை என்பதின் அடிப்படையிலும் அநேக மதப் பிரிவுகள் உருவாகிக் கொண்டே போகிறது. இவையெல்லாம் எங்கு எப்பொழுது முடிவடையும் என்று ஒருவரும் அறியார்.

கிறிஸ்தவம் ஒரு மதமில்லை, அது கடவுளை அடைய ஒரே வழி

கடவுள் ஒருவரேயானால் (கிட்டத் தட்ட எல்லா மதங்களுமே அதை ஏற்றுக் கொள்வதாகச் ஒப்புக் கொள்கிறார்கள்) அந்த ஒரே கடவுளை அறிய முயலுவது தானே சரியான முறை. ஒரே மெய் தேவனை அறிய முயற்சி செய்வதற்கு பதி லாக கடவுளை ஒருவரும் கண்டதில்லை ஆகையினாலே பல வழிகளில் அவரை சித்தரிக்கவும், அவருக்கென்று ஒரு உருவத்தையும் ஒரு பெயரையும் நாங்களாக வைத்துக் கொண்டு இவர் தான் கடவுள், அவர்தான் கடவுள் என்று கூறுவது நம்முடைய அறியாமை யைத் தான் வெளிப்படுத்துகிறதே தவிர, அது கடவுளை அறியக் கூடிய சரியான வழி என்று எப்படி கூற முடியும். மனிதனுக்கு தோன்றிக் கொண்டிருந்த கடவுள் ஏன் அவனுக்கு தோற்றமளிக்கக் கூடாமற் போயிற்று. இதனுடைய சரியான காரணத்தை ஆராயாமல் கடவுள் ஒருவருக்கும் தோன்ற மாட்டார் என்று ஒரு நாமே ஒரு முடிவுக்கு வருவது சரியாகுமா? இந்த தவறை ஆதிமுதலாய் தேவனை விட்டு பிரிக்கப் பட்ட காலத்தி லிருந்தே கடவுள் என்று ஒன்று இருந்தபடி யால் கடவுளைத் தொழுது கொண்டு அவருக்க தூபங் காட்டி ஆராதனை செய்து விட்டால் போதும் அவர் எங்கள் மேல் கோபமடைந்து எங்களைத் தண்டிக்கமாட் டார் என்னும் எண்ணம் வந்ததால் அதற்கு என்ன வழி என்று சிந்திக்க ஆரம்பித்தார்கள். ஜீவனுள்ள தேவனை நாமாக அடைய முடியாது என்கிற முடிவுக்கு வந்துவிட்டார்கள். தங்களுடைய பாவத்தினால் எற்பட்ட இந்தப் பிரிவை அவர்கள் உணரவில்லை. ஏசாயா 59:2 எடுத்து வாசியுங்கள் உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறதுளூ உங்கள் பாவங்களே அவர்உங்கக்கு செவி கொடாதபடிக்கு அவர் முகத்தை உங்களுக்கு மறைக்கிறது மெய் தேவனாகிய கர்த்தர் பரிசுத்தரும் நீதிபரரும் கூட. அவருடைய பரிசுத்தத்திற்கு முன் நாங்கள் நிற்க முடியாது. அவருடைய நீதிக்கு முன் எங்களுடைய நீதி கந்தலாயிருக்கிறது. அவரை நாங்கள் எப்படி தரிசிக்க முடியும். அவர் பிரகாசமான ஒளியில் வாசஞ் செய்கிறவரும், அக்கினியின் நடுவே வாசஞ்செய்கிறவராயும் இருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் அவரைக் காண்பவன் உயிரோடு இருப்பதே அரிது என்று வேதம் சொல்லுகிறது. இப்படி தரிசிக்கக் கூடாத ஒளியில் வாசஞ்செய்கிற அவரை உலகிற்கு வெளிப்படுத்தவே இயேசுக்கிறிஸ்து மானிட ரூபமெடுத்து இந்த உலகில வந்து தோன்றினார். நான் பிதாவை வெளிப்படுத்தவே வந்தேன் என்றார். என்னைக்கண்டவன் பிதாவைக் கண்டான் என்று கூறினார். அப்படியாவது இந்த மானிடர்கள் மெய் தேவனை அறிந்து கொள்ளவார்கள் என்று நினைத்தார்.

அது மட்டுமல்ல, அந்த மெய் தேவனுக்கும், மானிடர்களுக்கும் இடையே இருக்கும் தடுப்புச்சுவரை நீக்கும் படிக்கு தன்னையே ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கவே வந்தார். பாவச்சுவரை நீக்கவும் கடவுளோடு எங்களை ஒப்புரவாக்கவுமே வந்தார். இந்த கூற்றை மிகவும் பழமை வாய்ந்த இந்துமத நூளேடுகளிலும் காண முடிகிறது. இதையறியாமல் கிறிஸ்தவமும் எல்லா மதங்களைப் போல ஒரு மதம் என்று நினைக்கிறார்கள். அப்போஸ்தலர் 11:26ல் நாங்கள் இவ்வாறாக வாசிக்கிறோம். முதல் முதல் அந்தியோகியாவில் சீஷர்களுக்கு கிறிஸ்வர்கள் என்ற பெயர் வழங்கிற்று. இயேசுக்கிறிஸ்து கிறிஸ்தவ மதத்தை ஸ்தாபிக்க இந்த உலகில் வந்து தோன்றவில்லை. அவர் அறியப்படாத தேவனை உலகிலுள்ள மானிடருக்கு வெளிப்படுத்தவும், பாவத்தினால் பிரிக்கப் பட்ட மானிடரை ஒன்றான மெய் தேவனோடு ஒப்புரவாக்கவும் வந்தார். இயேசுக்கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடத்தில் கட்டளையிட்டபொழுது நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை (*GOSPEL*- நற்செய்தியை) பிரசங்கியுங்கள் என்று தான் கட்டளையிட்டார். நான் ஒரு புது மதத்தை ஸ்தாபித்திருக்கிறேன் அதற்கு பெயர் கிறிஸ்தவம் (*CHRISTIANITY*) இதை உலகெங்கும் பிரஸ்தாபப் படுத்துங்கள் என்று கட்டளையிட

வில்லை. நற்செய்தியாவது கடவுளை அறிய முடியாத திகைத்துக் கொண்டிருக்கும் மானிடனே உனக்கு கடவுளை அறியவும் அவரை அடையக் கூடிய வழியை காட்டவுமே வந்தார் என்பதுதான்.

எனக்கருமையான கிறிஸ்தவ சகோதரனே! சகோதரியே!! நீ எவ்வளவு பெரிய பொக்கிஷத்தை வைத்திருக்கிறாய்ளு எவ்வளவு பெரிய கடமையை செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறாய் என்று நீ உணருகிறாயா? நான் உலகிலேயே மிகவும் மதிப்பான கிறிஸ்தவ மதத்தை தழுவியுள்ளேன்.. கிறிஸ்தவ பெயரை வைத்துக் கொண்டிருக்கிறேன். ஏன்று பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறாயா? அதினால் ஒரு நன்மையும் ஒரு பிரயோஜனமும். இல்லை. சில கிறிஸ்தவர்களுக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் ஒழுங்காக சபைக்குச் செல்வதில் ஒரு பெருமிதம். அங்கு தன்னை பரிசுத்தவான்களைப் போலவும் சிறந்த ஆவிக்குரியவர்களைப் போலவும் காட்டிக் கொள்வதில் ஒரு பெருமை. சிலருக்கு மற்றவர்கைக் குறை சொல்லுவதும், அவர்கள் மேல் குற்றம் கண்டுபிடிப்பதையும் வாடிக்கையாகக் கொண்டிருக்கிறாகள். சிலர் அதையும் தாண்டி போதகரிடத்தில் என்ன குற்றங்களைக் கண்டுபிடிக்லாம் அவரை எப்படி தங்கள் கட்டுக்குள் வைத்தக் கொள்ளலாம், ஏனென்றால் அப்பொழுது தானே நாங்கள் பெருமை பாராட்டலாம் என்று நினைக்கிறார்கள். சமீபத்தில் ஒரு சபையில் கண்டிறிந்தது என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. போதகருக்கு ஒரு குறிப்பொன்றை எழுதிவிட்டு கீழே வழி காட்டிகள் என்று கையொப்பமிட்டிருந்தனர். போதகர் சயின் மக்களக்கு வழி காட்டுகிறாரோ அல்லது சிலர் கூட்டங் கூடி நாங்கள் போதகருக்கு அல்லது சபைக்கு வழிகாட்டிகள் என்று தங்களை அறிமுகப்படுத்துவதில் அக்கரை காட்டுகிறார்களோ? இயேசுவின் கட்டளையை நிறைவேற்றுவதில் அதாவது அவருடைய கட்டளையை தலைமேற்கொண்டு சுவிசேஷத்தை பிரசிங்கிப்பதில் ஒரு அக்கரையையும் காணமுடியவில்லை. இன்றய சபையின் நிலமையும் சபைகளுக்குச் செல்லும் கிறிஸ்தவர்களடைய நிலமையும் இவ்வளவு சீர்குலைந்து காணப்படுகிறது. கிறிஸ்தவ சகோதரனே! சகோதரியே!! உன்னுடைய மாய்மாலத்திலிருந்து வெளியே வா! சகோதரனைக் குற்றப் படுத்துவதும், கர்த்தருடைய ஊழியக்காரனை குற்றுப்படுத்துவதும் பிசாசினுடைய தந்திரமான செயல் என்று நீ அறிவாயா? நீ பிசாசின் எஜண்டாக செயல்படுவதை விட்டுவிட்டு இயேசுவின் கட்டளையை நிறைவேற்று. அப்பொழுது நீ தேவனுடைய ராஜ்யத்திகுள் பிரவேசிப்பாய். இல்லாவிட்டால் உன் நிலை என்னவோ, நானறியேன்.

இந்த உலகத்தில் எந்த மதத்திலும் இந்த மெய்யான சத்தியத்தை காணமுடியாது. ஆனால் கிறிஸ்தவனே! நீ அறிந்திருக்கும் இந்த மெய்யான் சத்தியத்தை க்குறித்து கவலையற்று மெத்தனமாய் இருப்பதால் உன்னுடைய கடமையில் நீ முற்றிலும் தவறிட்டாய் என்பதை உணர்ந்து உலகிற்கு அதை அறிவிப்பதிலும், சத்தியத்தை அறியாமல் அழிந்து பொகிற ஆத்துமாக்களைக் குறித்து அக்கரையாக செயல்படு. கர்த்தர் உன்னோடு கூட இருந்து உன்னை வழிநடத்தவாராக.

இயேசுக்கிறிஸ்துவைக் குறித்து இன்னும் அதிகமாக அறிய எங்களுடைய சபையின் ஆராதனைகளில் பங்கு பெற உங்களை அன்போடு அழைக்கிறோம்! எங்களுடைய சபையின் விலாசம் *40-50 Weybright court, Midland/Sheppard Ave. Scarborough*. ஞாயிறு காலை ஆராதனை கீதவானி *24* மண்நேர ரேடியோவில் பிற்பகல் *1.30* முதல் *2.30* வரை ஆலய ஆராதனை நேரடியாக ஒலி பரப்பாகிறது. இந்த ஆராதனைகளில் கடைசி கால சத்தியங்கள் தெளிவாகப் போதிக்கப்படும். ஆராதனைகளில் பங்கு பெறுங்கள். ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளுங்கள். போதகரோடு தொடர்பு கொள்ள அழையுங்கள் தொ.பேசி எண் *647-839-8393. E.mail: jeevanadhi@gmail.com*. மீண்டும் சந்திக்கும் வரை உங்களுக்காக ஜெபிக்கும் போதகர் ஜோன் ஆபிரகாம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஸ்காபுறோ பாடசாலை மாணவர்களின் ஆய்வுக் கண்காட்சி!



Heritage Fair என்ற நிறுவனத்தினல் ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்காபுறோ பாடசாலை மாணவர்களின் ஆய்வுக் கண்காட்சி ஸ்காபுறோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை காலை முதல் மாலை வரை நடைபெற்றது.

வரவேற்பு மண்டபத்தில் கனடா தேசியக் கொடியின் வரலாறு, சிபிசி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வரலாறு, நாட்டு நலனில் பெண்களின் பங்கு, ஆப்கானிஸ்த்தான் யுத்தத்தில் கனடாவின் பங்களிப்பு போன்ற பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் படங்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. போட்டோக்களுடன் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்த ஆய்வுக் கட்டுரைகளை பெருந் தொகையான மக்கள் பார்வையிட்டனர். அவற்றைத் தயாரித்த மாணவ, மாணவிகள் அங்கு நின்று தமது ஆய்வு பற்றிய பார்வையாளர்களின் வினாக்களுக்கு விடையளித்து விளக்கிக் கொண்டிருந்தனர்.

அந்தந்த பாட சாலை மாணவர்களினால் தயாரிக் கப்பட்ட ஆய்வு களில் சிறப்பான சில கட்டுரைகள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டு அந் தந்த பாடசாலை களின் சார்பில் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன.

ஸ்காபுறோ மார் கோஸ் வுளுவாட் வீதியிலுள்ள 'சாள்ஸ் கோடன் ' பாடசாலையின் ஏழாம் வகுப்பு மாணவிகளான ஸ்ரீலங்காவைச் சேர்ந்த வர்சா வாசுதேவா, பாகிஸ்த்தானைச் சேர்ந்த மஜீதா கான் ஆகியோர் 'நாட்டு நலனில் பெண்களின் பங்கு' பற்றிய ஆய்வுக் கட்டுரையினை காட்சிக்கு வைத்திருந்தனர்.

முதன் முதலாக நாசா விண்கலத்தில் *1992* ம் ஆண்டு விண்வெளிக்குச் சென்ற கனடா பெண்மணி *Roberta Bondar*, பெண்களின் சம உரிமைக்காக முப்பது வருட காலம் போராடிய *Doris Anderson (1921 – 2007)*, கனடா உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்து கனடா சட்ட திட்டங்களில் முக்கிய பங்களிப்பினைச் செய்தவரும், ஐ.நா.வில் மனித உரிமைக்கான உயர் ஸ்தானிகராகப் பணியாற்றியவருமான *Louise Arbour* போன்ற பல முக்கிய பெண்மணிகளைப் பற்றிய ஆய்வுக் கட்டுரையினை காட்சிக்கு வைத்திருந்தனர். *Louise Arbour* ஐ.நா.வில் பணியாற்றிய போது *2007*ம் ஆண்டு அக்டோபர் மாதம் மனித உரிமை விவகாரம் சம்பந்தமாக ஸ்ரீலங்காவுக்கும் சென்று வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏன் இத்தலைப்பிலான ஆய்வினை மேற்கொண்டீர்கள் என அவர்களிடம் கேட்ட போது ஆண்களே அதிகமாக சகல விடயங்களிலும் முன்னணி வகிக்கின்றனர். ஏன் பெண்களும் அவ்வாறு முன்னணி வகிக்கக் கூடாது என யோசித்தே அதற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இவ்விடயத்தில் நாம் ஆய்வு செய்தோம் என வர்சா வாசுதேவா கூறினார்.

இக்கண்காட்சியினை நடுவர்களும் வந்து பார்வையிட்டு அவற்றை தயாரித்தோரிடம் கேள்விகள் கேட்டு அவற்றுக்கான புள்ளிகளை வழங்கினார்கள். இவற்றுள் சிறந்தவையாக தெரிவு செய்யப் படும் ஆய்வுக் கட்டுரைகளின் கண்காட்சி பின்னர் மாகாணப் போட்டிகளில் பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும் எனத் தெரிய வந்தது.

காதல் எவரும் காணாமல் வருகிறது; அது போகும் போதுதான், அதை உணர முடிகிறது. - ஆஸ்டின் டாப்சன்

இந்த வார ராசி பலன்கள்

01.05.2012 முதல் 07.05.2012 வரை

மேஷம்

சுப நிகழ்ச்சிகள் நடைபெற்று உறவுகள் பலப்படும்.

உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வும் அதிகாரமும் கிடைக்கும். பணவரவில் தடையிராது. கல்விப் பணியில் உள்ளவர்கள் சிறப்பு பெறுவர். திருமண முயற்சிகளில் அலைச்சல் ஏற்படும். வேலை வாய்ப்பிற்காக காத்திருப்போருக்கு சுபசெய்திகள் கிட்டும். நண்பர் உதவி கிட்டும்.

அதிர்ஷ்ட எண்: 3
நிறம்: நீலம், வெண்மை

ரிஷபம்

குடும்பத்தில் குதூகலம் ஏற்படும் வண்ணம் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். சங்கடமான சூழ்நிலையிலுள்ள வீட்டில் நல்ல முறையில் மாற்றம் ஏற்படும். தாமதமான பல வேலைகள் தொய்வின்றி நடைபெறும். சிலர் சுற்றுலா செல்வர். கடின வேலை செய்தாலும் தகுந்த பலன் உடனே கிடைக்கும். பணியிடத்தில் புகழ் பெருகும்.

அதிர்ஷ்ட எண்: 5
நிறம்: வெளிர் பச்சை

மிதுனம்

புதிய உறவுகள் சேர்க்கை ஏற்படும் பிரிந்த உறவுகள் இணையும். மனக் குழப்பங்கள் நீங்கி மகிழ்வான சம்பவங்கள் நடைபெறும்.

புதிய பண வரவு உண்டாகும். தூரத்துச் சொந்தங்களால் நன்மைகள் ஏற்படும். வாகன லாபம் ஏற்படலாம். பிடித்த உணவுகளை உண்டு மகிழ்வார்கள். வெளிநாடு செல்லும் வழி ஏற்படும்.

அதிர்ஷ்ட எண்: 4
நிறம்: கறுப்பு

கடகம்

மங்கள நிகழ்வுகள் நடைபெறும். நண்பர்களுக்கு உதவிகள் செய்து புகழ் பெறுவீர்கள். பொருளாதாரப் பற்றாக்குறை நிவர்த்தியாகும். சில சங்கடங்கள் ஏற்படுவதை தவிர்க்க இயலாது. கணிசமான முறையில் குடும்ப நிர்வாகம் உயரும். நினைத்த காரியத்தை சற்று இழுபறியுடனே நிறைவேற்ற முடியும். நோய் தொந்தரவு நீங்கும்.

அதிர்ஷ்ட எண்: 7, 2
நிறம்: கருஞ்சிவப்பு

சிம்மம்

ஆக்கபூர்வமான சிந்தனைகள் உருவாகும். விரும்பிய செலவுகள் செய்து மகிழ புதிய பண வரவு உண்டு. தொழில் புரிவோர் நல்ல திட்டங்களை வகுத்து வெற்றி காண்பர். உஷ்ண சம்பந்தமான பிணிகள் ஏற்படலாம். நண்பர்கள் ஒத்துழைப்புடன் சுபகாரியங்கள் நடைபெறும். இளைய சகோதரர் உதவி கிட்டும். மனைவி வழி லாபமுண்டு.

அதிர்ஷ்ட எண்: 9
நிறம்: வெண்மை

கன்னி

கணவன் மனைவியிடையே சில கருத்து வேறுபாடுகள் ஏற்படும். எனினும் குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறும். நிதிநிலைமை சீராக இருந்தாலும் செலவுகள் புதிய வழிகளில் வரும்.

இழுபறி நிலையிலுள்ள திருமண முயற்சிகள் சுபமாய் நடைபெறும். உடல்நிலையில் அலைச்சலுடன் முன்னேற்றம் ஏற்படும்.

அதிர்ஷ்ட எண்: 6, 2
நிறம்: பச்சை, நீலம்

துலாம்

பிள்ளைகளால் பெருமை உண்டு. பணியிலுள்ளவர்கள் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்று மகிழ்வர். எண்ணத்தில் மேன்மையும் செயல்களில் உத்வேகமும் உண்டாகும். வரவிற்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. தாய் வழி உறவுகளின் ஆதரவு கிட்டும். வெளிநாட்டினரால் லாபங்கள் உண் டாகும்.

அதிர்ஷ்ட எண்: 5, 1
நிறம்: சிவப்பு

விருச்சிகம்

தகராறுகள் தீர்வு பெறும். பணியிடத்தில் களங்கம் நீங்கி மதிப்பினைப் பெறுவார்கள். வருமானம் சிறப்பாக இருக்கும். புதிய சேமிப்பு வழியும் உண்டாகும். குழந்தைப்பேற்றினை அடையலாம். சிலருக்கு பணியிடத்தில் இடமாற்றம் விரும்பியவாறே அமையும். இறை அனுகூலத்தால் நிம்மதி பெறுவர்.

அதிர்ஷ்ட எண்: 1, 4
நிறம்: பொன்னிறம்

தனுசு

தொழில்துறையில் எதையும் சாதிக்கும் வல்லமை பிறக்கும். புதிய யுக்திகளால் வருமானம் இரு மடங்காகும். எதிர்பாராத மாற்றங்களைத் தவிர்க்க இயலாது. நினைத்த காரியம் தடைகளுடனே நடைபெற்று வரும். பணியாளர்கள் சக ஊழியர்களிடம் நன்மதிப்பைப் பெறுவர். பெண்களால் ஆதாயம் ஏற்படும். பணவரவு சீராகும்.

அதிர்ஷ்ட எண்: 8
நிறம்: சிவப்பு

மகரம்

எதிரிகள் அஞ்சும் வண்ணம் வளர்ச்சி ஏற்படும். நன்மதிப்பு உயரும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். இளைய சகோதரர்களுக்கு திருமண முயற்சிகள் கைகூடும். பணியிட மனஸ்தாபங்களைத் தவிர்க்க பொறுமையுடன் இருக்கவும். கணவன்-மனைவி அன்யோன்யம் பெருகும். தொழில் புரிவோருக்கு முன்னேற்றமுண்டு.

அதிர்ஷ்ட எண்: 7, 3
நிறம்: மஞ்சள்

கும்பம்

எதிர்பார்ப்புகள் தடையின்றி நிறைவேறும். பொருளாதார நிலை பன்மடங்கு உயரும். மனதில் மகிழ்ச்சி குடிகொள்ளும். உறவுகள் பலப்படும். சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். ஆராய்ச்சியாளர்கள் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்வர். மனைவியால் நலன்களைப் பெறுவர். பெண்களுக்கு தாய்வழி ஆதரவுண்டு.

அதிர்ஷ்ட எண்: 9, 1
நிறம்: ஊதா

மீனம்

எதிர்பாராத வாய்ப்புகள் குடிவரும். நிதிநிலையில் ஏற்றம் வரும். மனம் போல மங்கல நிகழ்வுகள் இல்லத்தில் நடைபெறும். மனதில் புடிந்த குறை பயம் நீங்கி, புதிய உற்சாகம் பொங்கும். சகோதர வழி கருத்து வேறுபாடு நீங்கப்பெறும். புதிய வாகன சேர்க்கை நடைபெறும். பொறுமையுடன் செயல்பட்டு வெற்றி பெறுவர்.

அதிர்ஷ்ட எண்: 2
நிறம்: பச்சை

சோதனை வரும் போது, உடையாமல் இருப்பதே உண்மைக் காதல். - டி.எம்.மயர்

‘ஒன்ராறியோவின் முதலாவது பெண் முதல்வராக அன்றியாவை தெரிவு செய்ய வேண்டும்’

தமிழ் வர்த்தக சம்மேளன ஆண்டு விழாவில் நீதன் சான்

(வீரகேசரி மூர்த்தி)

‘அன்றியா ஹோவத் 2004ம் ஆண்டு என்.டி.பி.கட்சியின் ஒன்ராறியோ மாகாணத் தலை வியாக தெரிவு செய்யப் பட்டார். அவர் தலைவியாக வந்ததன் பின்னர் என்.டி.பி.கட்சி மிகவும் பிரவல்ய மாகியது. இளம் தலைமுறையினரி டையே என்.டி.பி.கட்சி பெரும் மாற்றத் தினை ஏற்படுத்தியுள்ளது. அவரை ஒன்ராறியோவின் முதலாவது பெண் முதல் வராக்க வேண்டும் என்பது எமது ஆவலாகும்’.

மார்க்கம் ஹில்ரன் ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற கனடா தமிழ் வர்த்தக சம்மேளனத்தின் 14வது ஆண்டு விருது வழங்கும் வைபவத் தில் கலந்து கொண்டு உரையாற்றிய என்.டி.பி. கட்சியின் ஒன்ராறியோ மாகா ணத் தலைவராக அண்மையில் தெரிவு செய்யப்பட்ட திரு. நீதன் சான் இவ்வாறு கூறினார்.

அன்றியா ஹோவத் உரையாற்றிய போது, ‘ என்.டி.பி.கட்சிக்கு தமிழ் மக்கள் பெருமளவு பங்களிப்பினை செய்துள்ளார் கள். எமது கட்சியை வலுவுள்ளதாகவும் , உயிருள்ளதாகவும் மாற்றியவர்கள் தமிழ் மக்கள். அதன் காரணமாக நாம் நீதன் சானை எமது கட்சியின் ஒன்ரா றியோ மாகாண தலைவராக தெரிவு செய்துள் ளோம். ஒன்ராறியோ மக்கள் தமிழ் மக்க ளின் கடின உழைப்பினை பெரிதும் மதிக் கின்றார்கள். தமிழ் இளைஞர்கள் கல்வி யில் அதிக அக்கறை கொண்டு பல்கலைக் கழகத்துக்குச் சென்று பட்டதாரிகள் ஆகி உயர் பதவிகளை வகிக்கின்றனர். மாண வர்கள், வயோதிபர்கள் ஆகியோருக்கு உதவும் வகையில் நாம் ஒன்ராறியோவின் வரவு செலவுத் திட்டத்தினை மாற்றி அமைத்துள்ளோம். நாமனை வரும் ஒன்றி ணைந்து ஒன்ராறியோ மாகாணத்தை திட மாக வைத்திருக்க கடுமயாகப் பாடு பட வேண்டும்’ என்றார்.

‘ இலங்கையில் தமது சொத்துக்களை எல்லாம் இழந்து கனடாவுக்கு வரும் போது வெறு ங் கைகளுடன் வந்தவர்கள் எமது தமிழ் மக்கள். அவர்கள் தமது விடா முயற்சியினாலும், கடின உழைப்பாலும் தொழில் அதிபர்களாகி விருது வழங்கிக் கௌரவிக்கப்படும் அளவிற்கு முன் னேறி இருப்பது பெரும் மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியது. அந்த வகையில் தமிழிச்சி என்று சொல்லுவதில் நானும பெருமைப்படுகின்றேன். கடந்தாண்டு விருது வழங்கும் விழாவில் பங்கு பற்றிய போது நான் என்.டி.பி.கட்சியின் வேட்பா ளராகக் கலந்து கொண்டேன். இவ் வாண்டு எம்.பி.யாகக் கலந்து கொள்வ தில் பெருமை அடைகின் றேன். என்னை முதலாவது தமிழ் எம்.பி.யாகத் தெரிவு செய்த ஸ்காபுறோ றூஜ் றிவர் தொகுதி யில் வாழும் தமிழ் மக்களுக்கும் ஏனைய இனத்தவர்களுக்கும் நன்றி கூற கடமைப் பட்டுள் ளேன் ’

விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய செல்வி ராதிகா சிற்சபை ஈசன் இவ்வாறு கூறினார். அதனை அடுத்து உரையாற்றிய மார்க்கம் தொகுதி லிபரல் கட்சி எம்.பி.யான ஜோன் மெக்கலம் றாதிகா முதலாவது தமிழ் எம்.பி.யாக தெரிவு செய்யப்பட்ட மைக்கு தானும் தனது பாராட்டினை தெரிவித்துக் கொள்வதாகப் பெருமனது டன் கூறினார்.

கனடா தமிழ் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் திரு மைக் அகிலன் உரையாற் றிய போது, ‘ தமிழ் மக்கள் அதிகளவில் வர்த்தகத் துறையில் ஈடுபட்டு தமது கடின உழைப்பால் தமிழ் சமூகத்துக்கு மாத்திர மன்றி கனடாவிலுள்ள ஏனைய சமூகத்தி னருக்கும், கனடாவின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவி வருகின்றார்கள். அதன் காரணமாக வர்த்தகத்து றையில் துரித வளர்ச்சி அடைந்த தமிழ் பிரமுகர் களை வருடா வருடம் தெரிவு செய்து அவர்களுக்கு எமது சம்மேளனம் விருது வழங்கி கௌரவித்து வருகின்றது. எமது இந்த முயற்சிக்கு றோயல் வங்கி, சி.பி.சி. வங்கி, ரி.டி.வங்கி, நோவஷ்கோசியா வங்கி ஆகியன ஆதரவளித்து வருகின் றன. அவர்களுக்கும் நாம் எமது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கி ன்றோம்’ எனக் கூறினார்.

மின்னியல் பொறியியல் தொழில் அதிபரான ஜோர்ஜ் செல்வநாயகம், பார வண்டி பொறியி யல் துறை தொழி ல் அதிபரான அழகரட்னம் உதயகுமார், கட்டிடத் துறை ஆலோசனைத் துறையைச் சேர்ந்த ‘கன்ரெம் குறூப்’ யசோ சொர்ண லிங்கம், கணணித் துறையைச் சேர் ந்த தொழிலதிபர்களான சான், முத்துலிங்கம், ‘தேவிக் பார்மா இங்’ மருந்தக உரிமையா ளரான பெண் தொழில் அதிபர் றதி பரம சாமி, ‘டைனவோர் எக்ஸ்பிரஸ்’ விநியோ கத் துறையைச் சேர்ந்த அழகரெட்னம் உதயகுமார், புகைப்படத் துறையைச் சேர்ந்த ‘பிறின்ற் பாஸ்ற்’ உரிமையாளர் துரைரட்னம் துஷ்யந்தன், சமூக சேவைத் துறையில் தமிழர் ஐக்கிய சங்கத்தினை உருவாக்கிய குருசாந்தமூர்த்தி யோகராஜா ஆகியோர் இவ்விழா வில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தமிழ் வர்த்தக சம்மேளனத்தின் தலை வர் திரு.மைக் அகிலனின் தலைமையில் நடை பெற்ற இவ்விழாவில் பல்வேறு வங்கிகளின் அதிகாரிகள், பல்வேறு அரசியல் பிரமுகர்கள், தமிழ் வர்த்தகப் பிரமுகர்கள், பல்லின மக்கள், ஊடகவியலாளர்களென பெருந்திர ளான மக்கள் கலந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகள், இராப்போசன விருந்து ஆகியவ ற்றுடன் விழா இனிதே நிறைவுற்றது.







Markham Council Approves Financial Framework and Partnership for Markham Sports, Entertainment and Cultural Centre

Proposal for 20,000 seat arena proceeds to next step

Markham Council approved late today the financial framework, and a proposal from a Private Sector Group, to partner on a world class sports, entertainment & cultural centre (“Centre”), with approximately 20,000 seats (665,000 sq ft), to be located in Markham Centre. The Centre is to be located on an approximate six acre parcel of Markham-owned land, west of the Unionville GO station, and on the north side of 407.

Under the approved financial framework Markham will own the Centre and there will be no property tax impact to Markham residents.

Mayor Frank Scarpitti. “While there are many more steps and public consultations to follow, this is a very exciting development for Markham that promises to bring a world class venue for sports, entertainment and culture. Not only will the Centre provide a state-of-the-art facility for professional events but also one which will incorporate a number of community uses.”


“We are beyond pleased that Markham has decided to continue this partnership and will work with us to finalize an agreement on the construction of this facility,” said W. Graeme Roustan, Chairman and CEO of GTA Sports and Entertainment. “This is a great day for Markham and for the GTA.”

The $325 million Centre will create 600 construction-related jobs and almost 1000 permanent and part-time related jobs once the Centre begins operating. Through the approved financial framework, the Private Sector Group will fund 50% of the construction, and will be responsible for any capital cost overruns, and operating and maintenance costs. Markham’s 50% will be funded through Centre revenues and future development.

“Now that we have an approved financial framework staff will continue our due diligence and negotiations on this unique opportunity,” said Markham CAO Andy Taylor.

காதல் ஆட்கொள்ளும் போது, மனிதன் கயவனாக இருக்க முடியாது. - சார்லஸ்லேம்ப்

நெடுந்தீவைக் கோட்டையாக வைத்திருக்கும் கட்சி மக்களை அடிமைபோல நடத்துகிறது - ரணில்



நெடுந்தீவைத் தனது கோட்டையாக வைத்திருக்கும் கட்சி ஒன்று ஜனநாயக விரோத செயற்பாடுகள் மூலம் மக்களை அடிமைபோல நடத்துகிறது. இந்த அடிமைத் தளையிலிருந்து நெடுந்தீவு மக்களை விடுவிக்க வேண்டும் என நெடுந்தீவு மக்கள், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்க்கட்சிகள் இணைந்து யாழ்ப்பாணத்தில் இந்தமுறை நடத்தவுள்ள மேதின நிகழ்வுகளுக்காக யாழ்ப்பாணம் சென்றுள்ள ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் நேற்று நெடுந்தீவுக்கு சென்றிருந்தனர்.

இதன்போது அங்குள்ள மக்களைச் சந்தித்து அவர்களின் குறை நிறைகள் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க கேட்ட போதே மேற்குறித்த கோரிக்கையை மக்கள் அவரிடம் முன்வைத்தனர்.

ஜனநாயக விரோத செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் கட்சி ஒன்று நெடுந்தீவைத் தனது கோட்டையாக வைத்துக்கொண்டு மக்களை அடிமை போல நடத்தி வருகிறது. இங்கு ஜன நாயகம் என்பது துளியளவும் இல்லை. குறித்த கட்சியின் உத் தரவுகளை மீறுபவர்கள் பழி வாங்கப்படுகிறார்கள்.

இதனால் நெடுந்தீவில் மக்கள் பீதியுடனேயே வாழ்கின்றார்கள். ஜனநாயகச் செயற்பாடுகளுக்காக இங்கு மாற்று அரசியல் கட்சிகள் வருவதைக் கூட அவர்கள் தடை செய்துள்ளனர். அதையும் மீறி வரும் கட்சிகள் மீது கடும் அழுத்தங்களை அவர்கள் மேற்கொள்வார்கள்.

எதிர்க்கட்சித் தலைவரான நீங்கள் பயணிப்பதற்குக் கூட எவரும் வாகனங்களை கொடுக்கக் கூடாது என்று எம்மில் பலர் மிரட்டப்பட்டனர். இவ்வாறு அவர்களின் சொற்படி தலையாட்டும் மந்தைகளாக வே எம்மை நடத்துகிறார்கள். இல்லாவிட்டால் பயங்கரமான விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கும் என்று எச்சரிக்கின்றனர்.

இப்போது இந்த உண்மைகளை உங்களிடம் தெரிவித்ததால் சில வேளைகளில் வெள்ளை வானிலோ அல்லது வெள்ளைப் படகிலோ நாங்கள் கடத்தப்படும் நிலையும் ஏற்படலாம் என மக்கள் ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, வடக்கில் குறிப்பாக நெடுந்தீவில் அரசியல் கட்சி ஒன்று மக்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்து வருவதை நானும் அறிவேன். இங்கு ஜனநாயக விரோத செயற்பாடுகளில் அந்தக் கட்சி இறங்கியுள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் இந்த விடயம் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜெனிவா மாநாட்டிலும் இது பதிவு செய்யப்பட்டுள்ளது. மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலைமையை நீக்க வழி செய்யுமாறு நெடுந்தீவு காவற்துறை அதிகாரியின் கவனத்துக்கு கொண்டுவர வுள்ளேன். நாடாளுமன்றத்திலும் இது பற்றி நான் தொடர்ந்தும் குரலெழுப்பு வேன்.

வடக்கில் அபிவிருத்தி இடம்பெறுகிறது என்று வெற்றுப் பேச்சுக்காக மட்டும் கூறுவதை விடுத்து, உண்மையான அபிவிருத்தி இடம்பெற அரசு செயலாற்ற வேண்டும். தற்போது மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் பல வேறு குறைபாடுகள் காணப்படுகிறன.

எதிர்க்கட்சிகள் மற்றும் மக்களின் ஆலோசனைகளை மதிக்காது மேற் கொண்டதாகலேயே இந்தத் திட்டங்கள் குறைபாடுகளுடன் காணப்படுகின்றன. மக்களை ஒன்றிணைப்பதன் மூலமே உண்மையான அபிவிருத்தியை அடைய முடியும். தென்பகுதி மக்களுக்கு உள்ள சுதந்திரம், உரிமையை வட பகுதி மக்களும் அனுபவிக்கவேண்டும். அதற்காகத் தான் மகிந்த ராஜபக்ஷ என்ற அராஜக அரசுக்கு எதிராக மேதின ஆர்ப்பாட்டத்தை யாழில் நடத்துகின்றோம்.

நான் வடபகுதிக்கு அடிக்கடி வந்து செல்வதால் எனக்கும் பயங்கரவாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாக தென்னிலங்கையில் அரசு கதை கட்டி விடுகிறது. இதன்மூலம் இங்குள்ள மக்கள் அனை


இலங்கை செய்திகள்

வருக்கும் பயங்கரவாதிகள் என்ற சாயத்தை அரசு பூசுவதன் மூலம் தென்பகுதி மக்களிடையே இனத்துவேசத்தை வளர்த்து மீண்டும் ஒரு இனக்கலவரத்தை உருவாக்க அது முனைகிறது. தற்போ துள்ள விலைவாசியேற்றத்தை சமாளிக்கக் கூடிய வகையில் சம்பள உயர்வு, மக்களது வாழ்வாதாரம் உயர்த்தப்பட வேண்டும். இல்லையேல் இன்னும் இரு மாதங்களுக்குள் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவுள்ளன.

சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு என்பது நாடாளுமன்ற தெரிவுக்குழு மூலமே பெறப்பட வேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சிகள் இடம்பெற வேண்டுமாயின் அந்தக் குழுவில் அதற்கான சாதகமான நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் மகிந்த அரசு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேசியே இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டமுடியும். என எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நெடுந்தீவுப் பயணத்தில் ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க, திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தீர்வு வேண்டுமாயின் தெரிவுக்குழுவிற்கு வாருங்கள்! கூட்டமைப்பை அழைக்கும் நிமல்!



பேச்சுவார்த்தை மூலம் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புமாயின் உடனடியாக அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு தங்கள் கட்சியின் பிரதிநிதிகளை பெயரிட வேண்டும். என்று அரசாங்க பேச்சுவார்த்தை குழுவின் முக்கிய ஸ்தரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாங்கள் அரசாங்கத்துடன் பேச்சு நடத்த தயாராகவே இருக்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கடந்த வாரம் தெரிவித்திருந்தமை குறித்து விபரிக்கையிலேயே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் இந்த விடயம் குறித்து மேலும் கூறியதாவது, பேச்சுவார்த்தை மூலம் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விருப்பம் அல்லது தயார் எனின் அவர்கள் முதலில் செய்யவேண்டியது அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு தங்கள் கட்சியின் பிரதிநிதிகளின் பெயர்களை வழங்குவதாகும்.

சபாநாயகரைத் தொடர்புகொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலில் இதனை செய்யவேண்டும். அதாவது கூட்டங்களில் கலந்துகொண்டு இவ்வாறு பேச்சு மூலம் தீர்வுகாண நாங்கள் தயார் என்று கூட்டமைப்பு கூறுவதில் அர்த்தம் இல்லை.

இந்நிலையில் பாராளுமன்ற தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெறாத நிலையில் ஆளும் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேச்சு நடத்துவதில் அர்த்தம் இல்லை என்றே கருதுகின்றோம்.

அதாவது ஆளும் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனித்து பேச்சு நடத்துவதில் அர்த்தம் இல்லை. மாறாக அனைத்துக் கட்சிகளும் இணைந்து பேச்சு நடத்தி அரசியல் தீர்வைக் காண முன்வரவேண்டும்.

இது இவ்வாறு இருக்க இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற் கொண்டிருந்த இந்திய எதிர்க்கட்சி தலைவி சுஷ்மாவும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெற வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார் என்றார்.

இதேவேளை பாராளுமன்றத்தில் எதிர் வரும் மூன்றாம் திகதி நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை காண்பதற்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவில் பங்கெடுக்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு அரசாங்க தரப்பில் மீண்டும் கோரிக்கை விடுக்கப்படும் என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அரசியலில் இருந்து விலகுவேன்: மேர்வின் சில்வா

தன் மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டு ஒன்று உள்ளது என யாராவது நிரூபிப்பார்களானால், ஒரு லட்சத்து ஐம்பத்து இரண்டு வாக்குகளை பெற்ற தான், பொதுமக்களிடம் கூறிவிட்டு அமைச்சு பதவி மற்றும் அரசிய லில் இருந்துவிலகப் போவதாக மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் மர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மக்கள் தொடர்பு மற்றும் பொது செயற்பாடுகளுக்கான அமைச்சின் ஊடான சேவையை கிராமத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் ஆரம்பிக் கப்பட்ட 'ஜனசெத்தட ஜனஹமுவ' என்ற வேலைத்திட்டத்தின் கம்பஹா மாவட்டத்தின் இறுதி நடமாடும் சேவை நீர்கொழும்பு நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றிய அவர், தாம் ஊடகங்கள் மீது மிகுந்த அன்புடன் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டார். இலங்கையில் உள்ள ஊடகங்கள் சர்வ தேசத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக திகழ் வதாக மர்வின் சில்வா தெரிவித்தார்.

இருந்த போதும், சில ஊடகங்கள் துரோகமிழைக்கும் வகையில் செயற்படுவதாக அவர் குற்றம் சுமத்தினார். தம்மீது சேறுபூசும் வகையில் ஒரு பத்திரிகையில் செய்தி வெளியானதாகவும், அதில் தாம் ஊழல் மோசடிகள் குறித்து விசாரிக்கப்படுவதாக வும் குறிப்பிடப்பட்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்

மிகக் குறைந்த வேதனத்திற்காக தொழிலை மாற்றிக் கொண்ட அந்த பத்திரிகையின் ஆசிரியர் தன்னிடம் நேர் காணல் ஒன்றை நடத்துவதற்கு கோரிக் கைவிடுத்ததாகவும், மூன்று நேரமும் சோறு சாப்பிடும் தமக்கு அவ்வாறான விடயங்களில் கலந்து கொள்வதற்கு நேரமோ, இணக்கமோ இல்லை என் றும் அமைச்சர் மேர்வின் சில்வா குறிப் பிட்டார்.

தமது சொத்து விபரங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காகவே ஊழல் மற்றும் மோசடிகள் தடுப்பு திணைக் களத்திற்கு சென்றதாக குறிப் பிட்ட அவர், தன்மீது எதற்காக தேசிய நாளிதழ்கள் இவ்வாறு சேறு பூசுகின்றன என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

சிரேஷ்ட உறுப்பினர்களை ஜனாதிபதி உதாசீனப்படுத்தினால் விபரீதத்தை எதிர்கொள்ள நேரிடும்! ஜயரத்ன ஹேரத்

இலங்கை சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை மகிந்த ராஜபக்ச தொடர்ந்தும் உதாசீனப்படுத்தினால் அதற்கான விபரீதத்தை விரைவில் எதிர் கொள்ள நேரிடும் என அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பிரதியமைச்சருமான ஜயரத்ன ஹேரத் தெரிவித்துள்ளார்.

குருணாலில் நடைபெற்ற இரகசிய சந்திப்பொன்றின்போது பிரதியமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்தச் சந்திப்பில் இலங்கை சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர் பலர் கலந்து கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசாங்கத்திற்கு தாவிய உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி அனைத்து சலுகைகளையும் வழங்குகிறார். இலங்கை சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை உதாசீனம் செய்து வருகிறார். இந்த நிலை தொடர்ந்தால் அதற்கான விளைவுகளை ஜனாதிபதி விரைவில் சந்திக்க நேரிடும். இதனை தவிர்க்க முடியாது என பிரதியமைச்சர் இதன்போது எச்சரித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசாங்கத்திற்கு தாவிய ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கு ஜனாதிபதி ஏராள மான சலுகைகளை வழங்கியுள்ளமையே பிரதியமைச்சருக்கு ஆத்திரத்தை ஏற் படுத்த அடிப்படைக் காரணமாக உள்ள தென இந்த இரகசியக் கூட்டத்தில் பங்கேற்றிருந்த அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.


குருணாகல் பிரதேசத்தைச் சேர்ந்த ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ, ஜனாதிபதியின் ஆதரவுடன் அந்தப் பிரதேசத்தில் தான்தோன்றித்தனமான பல நடவடிக் கைகளை முன்னெடுத்து வருவதாகவும், இதனால் குருணாகல் தொகுதியிலுள்ள இலங்கை சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அதிருப்தியடைந்துள்ளதாகவும் இதுகுறித்து தொடர்ந்து இவ்வாறு பார்த் துக் கொண்டிருக்க முடியாது எனவும் இந்தக் கூட்டத்தின்போத கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

பிரதியமைச்சர் ஜயரத்ன ஹேரத்திற்கு மேலதிகமாக, அநுர பிரியதர்சன யாப்பா, சாலிந்த திஸாநாயக்க, எஸ்.பீ. நாவின்ன, டி.பீ.ஏக்கநாயக்க உள்ளிட்ட குருணாகல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத் தும் ஸ்ரீ.ல.சு.கட்சியின் பல உறுப்பினர் களும் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னா ண்டோ மீது அதிருப்திகொண்டுள்ளனர்.

கடுமையான பாதையை எளிதில் கடக்க, துணையாக அமைந்திருப்பது காதல். - ஷெல்லி

புங்குடுதீவிலுள்ள 12 வட்டாரத்தைச் சார்ந்த சமூகங்கள் கலந்து சிறப்பித்துப் பெருமைப்படுத்திய 'புங்குடுதீவு மான்மியம்' வரலாற்று நூல் வெளியீட்டு விழா



















புங்குடுதீவின் சமூகம் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியே கடந்த 22.4.12 அன்று ஸ்காபரோ ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலய கலாச்சார மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்ற 'புங்குடுதீவு மான்மியம்' எனும் வரலாற்று நூல் வெளியீட்டு விழா.

புங்குடுதீவு மட்டுமின்றி தாயகத்தின் பிற பகுதிகளைச் சார்ந்த தமிழ் சமூகங்கள், இங்குள்ள அனைத்து துறை சார்ந்த பிரபலங்கள், ஊடகவியலாளர்கள் மத்தியில் நடைபெற்ற இச்சிறப்பு வைபவத்திற்கு கலாநிதி திரு யோகநாதன் அவர்கள் பிரதம விருந்தினராகக கலந்துகொண்டுச் சிறப்பித்தார். ஆய்வுரை, சிறப்புரை மற்றும் வாழ்த்துரை வழங்கி உரையாற்றிய பிரபலங்களான கலாநிதி ஈ.பாலசுந்தரம், திரு பாலசிவகடாட்சம், குருசாமி நாகலிங்கம் சுப்ரமணியம், சிந்தனைப்பூக்கள் பத்மநாதன், புலவர் ஈழத்து சிவானந்தன், ஆசிரியை திருமதி மகேஸ்வரி ராமச்சந்திரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரையாற்றிச் சிறப்பித்தார்கள்.

இந்நூல் வெளிவர முக்கிய காரணகர்த்தாவான திரு கருணாகரன் அவர்கள் விழா தொடக்கத்தில் முன்னுரை ஆற்றி, விழா பிரமுகர்களை அறிமுகப்படுத்தி அனைத்து நிகழ்ச்சிகளையும் ஆரம்பம் முதல் இறுதி வரை தொகுத்து வழங்கியது மிகவும் பாராட்டுதலுக்குரியதாகும்.

வழமைபோல் நமது கலாச்சார மரபுகளுக்கேற்ப வீடு விற்பனை முகவர் திரு-குலசிங்கம் தம்பதியர், பாலபாஸ் உரிமையயாளர் திரு மகாத்மன் தம்பதியர் மங்கள விளக்கேற்றிட நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியது. தமிழ்த்தாய் வாழ்த்து, கனடா கீதம் மற்றும் புங்குடுதீவு கீதம் ஆகியவற்றை திருமதி சுமங்களா சண்முகநாதனோடு செல்வி தாமிரா அவர்களும் பாடிய விதம் உண்மையிலேயே அவர்களின் குரலினிமையால் அனைவரையும் இன்புற வைத்தது. தொடர்ந்து மிஸிஸாகா ஸ்ரீ கணேச துர்க்கா ஆலய ஸ்தாபகர் சிவஸ்ரீ கிருஷ்ணராஜ பஞ்சாட்சரக் குருக்கள் அவர்கள் ஆசியுரை வழங்கியதற்குப் பின் இச்சங்கத்தின் பொருளாளரும பிரபல வீடு விற்பனை முகவருமான திரு திருவானந்த செல்வன் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

தொடர்ந்து தலைமையுரை ஆற்றிய இவ்வமைப்பின் தலைவர் திரு கருணாகரன் அவர்கள் இந்த வரலாற்று நூலைப் பற்றிய விபரங்களைக் கூறி, இந்நூல் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது என்பதோடு நாளைய இளைய தலைமுறை நமது வரலாற்றை அறிந்துகொண்டு பேணி பாது காக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறத்தினார். மேலும் இந்நூல் இரண்டு ஆண்டுகளில் ஆங்கில மொழியிலும் வெளியிட இருப்பதையும் கூறி, இந்த வரலாற்று நூல் வெளியிடுவதற்கு பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்ற திரு துரை ரவிந்தரன், திரு கருணாகரன், திரு தர்மபாலன் மற்றும் அவருடன் இணைந்து அனைத்து வகைகளிலும் பூர்த்தி செய்து வெளியிட முற்பட்டவர்களை வெகுவாகப் பாராட்டி தனது உரையை நிறைவு செய்தார்.

பிரதம விருந்தினர் கலாநிதி திரு யோகநாதன் அவர்கள் தனது உரையை ஆங்கிலத்தில் வழங்கினார். அன்று வெளியிடப்படும் புங்குடுதீவின் மான்மியம் எனும் வரலாற்று நூல் உண்மையிலேயே தாயகத்து உறவுகளுக்கு புகழ் சேர்ப்பதோடு, அதனை செயல்படுத்திய பதிப்பாசிரியக் குழு அனைவரையும் பாராட்டி உரையாற்றினார்.

அடுத்து நூல் அறிமுகவுரை ஆற்றிய திரு ந.தர்மபாலன் அவர்கள் பொதுவாகவே ஒரு நூலை எழுதி வெளியிடுவது என்பது எளிதானதல்ல. அதிலும் ஒரு வரலாற்று நூலை தயாரித்து வெளியிடும்போது, அதற்கான கால அவகாசம், அதில் வெளிவரவேண்டிய அனைத்து தரவுகள் மற்றும் அதில் அவ்வரலாற்றுப் பகுதியைச் சேர்ந்த அத்தனைபேர்களின் பங்களிப்பு என்பது இன்றயமையாததாகும். காரணம் ஏதேனும் ஒரு பகுதி விட்டுப்போய் விட்டாலும் அது புலம் பெயர்ந்து பல நாடுகளில் வாழும் புங்குடுதீவைச் சார்ந்த வருங்கால இளைய தலைமுறையினருக்கு அறிய முடியாமற் போய்விடும். அந்த அளவிற்கு தங்களின் பிறந்த மண்ணைப் பற்றிய ஒவ்வொரு தகவலும் முக்கியத்துவம் பெற்றதாய் அனைத்து விடயங்களையும் கொண்டதாய் ஆவணப்படுத்துவதே வரலாற்று நூலுக்கு முழுமை பெறச் செய்யும். அந்த வகையில் இந்நூல் தயாரிப்புக் குழுவின் தலைவர் திரு ரவி அவர்களும், திரு கருணாகரன் அவர்களும் இரவு பகல் என்று பாராமல், உண்ணவும், உறங்கவும் நேரமின்றி, கடந்த இரு மாதங்களாக புங்குடுதிவு பிரபலங்கள் உலகில் எந்த எந்த நாட்டில் வாழ்கின்றார்களோ அவர்களை எல்லாம் தொடர்புகொண்டும், இலங்கையில் உள்ள அனைத்துத் துறை சார்ந்த அறிவுசால் சான்றோர் பெருமக்களையும் தொடர்பு கொண்டும், நூல் வெளியீடு செய்யும் நாள் வரை தரவுகள் தொடர்ந்து வந்துகொண்டிருந்த நிலையில், ஏற்கனவே 07.4.12 அன்று வெளியிட இருந்த இந்நூல் வெளியீட்டு விழா 22.4.12 வெளியிட வேண்டும் என்ற ஆதங்கத்தில் நடைபெற்றாலும், இந்நூல் முழு வடிவம் பெற முடியவில்லை. மீண்டும் ஒரு புதிய பதிப்பில் அனைத்துத் தரவுகளும் சேர்க்கப்பட்டு இந்நூல் முழு வடிவம் பெறும் என்பதோடு, பிற மொழிகளிலும் இது வெளியிடப்படும் என்று கூறியது அனைலரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்தது.

நூல் உருவாக்கத்தில் ஏற்பட்ட சிரமங்கள் பற்றி இச்சங்கத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்த திரு சோம சச்சிதானந்தம் அவர்கள் இந்நூலினை உருவாக்கிட உழைத்த அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் தனது பாராட்டுக்களை நன்றி மேலிட தனது உரையில் குறிப்பிட்டார்.

நூலின் அவசியம் பற்றி பேசிய புலவர் திரு ஈழத்து சிவானந்தம் தனது உரையில் என்னுடைய தந்தை நாடு இறந்துவிட்டது. அதனை அவர்கள் நெருப்பிலே போட்டு எறித்துவிட்டார்கள். நான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என ஒரு ஜெர்மன் கவிஞனின் வார்த்தைகளை மேற்கோள் காட்டி புங்குடுதீவு மான்மியம் என்ற இந்நூலில் நம்முடைய நாடு, மக்கள், மொழி, சமயம், பண்பாடு நாகரீகம் அத்தனையும் வாழ்ந்துகொண்டிருக்கிறது, இன்னும் தொடர்ந்து வாழும் என்றார். மேலும் புங்குடுதீவின் சிறப்புகளை பல்வேறு விதங்களில் பல மேற்கோள்களுடன் எடுத்துரைத்து இது முன்னுதராணமான நூல், உண்மையான வெளிப்பாடு எனக்கூறி, சிறப்பு, மகிமை என்றும் மான்மியம் என்றால் சிறப்பு மகிமை என்பதாகும் என்றார்.

வள்ளுவர் கூறியதுபோல் இது ஒரு மாண்புடமையான நூல் என்று, அதனை விவரிக்கும்போது எங்கள் ஊரில் வாழ்வு, வளம், புலமை, திறமை, ஆற்றல் போன்றவை இருக்கின்றன என தனது நினைவலைகளை பகிர்ந்து கொண்டார்.

தொடர்ந்து ஊடகவியலாளர் சார்பில் உரையாற்றிய உதயன் பிரதம ஆசிரியர் திரு ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது வாழ்த்துரையில் தான் ஒரு பார்வையாளனாகவே வருகை புரிந்திருந்தாகக்கூறி, தனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி , இந்நூல் தயாராகிக்கொண்டிருக்கும் போது அதனைப் பற்றிய தகவல்களைப் பெற முடிந்ததையும், ஒரு பாரிய நூலினை தயாரிப்பதற்கு எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்கள் என்பதை ஒவ்வொரு வாரமும் தனது பத்திரகையை கொண்டு வர எவ்வளவு தூரம் கஷ்டபடவேண்டியிருக்கிறது என்பதோடு ஒப்பிட்டு, அதனை இன்று மீண்டும் உணர்ந்து கொண்டேன் என்றார். பத்திரிகைக்கும் புங்குடுதீவிற்கும் உள்ள தொடர்பையும், சப்ததீவினைச் சார்ந்தவர்களும் அன்றைய நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருப்பதை பாராட்டியும், புங்குடுதீவு சாப்பாட்டுக்கடை பெருமையையும் நினைவு கூர்ந்து யாழ்பாணத்து வீட்டு சமையலை மீண்டும் கொழும்பிலே கொண்டு வந்து தந்தது என்றும், தனது பத்திரிகையிலே வரும் மரண அறிவித்தலில் அதிகமானோர் புங்குடுதீவைச் சார்ந்தவர்கள் என்பதோடு புங்கடுதிவு மக்கள் தான் தங்கள் உறவினர்களை மதித்து நினைவுப்படுத்திக் கொள்வது என்பது ஒரு சிறப்பான விடயம் என குறிப்பிட்டார். மேலும் மான்மியம் என்ற சொல் கூட தனக்கு மாண்புமிகு என்ற சொல்லையே நினைவுபடுத்தியது என்றும் புங்குடுதீவு ஒரு மாண்புமிகு கிராமம் என பெருமைப்படுத்தி அதனை ஒரு வரலாற்று நூலாக கொண்டு வந்துள்ள புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தையும், விழா அமைப்பாளர்களையும் வாழ்த்தி தனது உரையை நிறைவு செய்தார்.

நூல் ஆய்வுரை வழங்கிய கலாநிதி ஈ.பாலசுந்தரம் அவர்கள் இந்நூலின் ஆறு பகுதிகளின் சிறப்புகளைப் பற்றி பல்வேறு மேற்கோள்களுடன் ஒப்பிட்டு, விளக்கமளித்த விதம் உண்மையிலேயே ஒரு சரித்திர ஆய்வாளரின் கண்ணோட்டமாக அமைந்து, நூலினை படிப்பதற்கான ஆவலை ஏற்படுத்தியது என்பதே நிதர்சனம். அந்த அளவிற்கு

கலாநிதி பால சிவாகடாட்சம், அனலைதீவு குருசாமி நாகலிங்கம் சுப்ரமணியம், அரசாங்க முன்னாள் உதவி அதிபர் திரு ஆறுமுகம் செந்தில் வடிவேல், நெடுந்தீவு மக்கள் சார்பில் வீடு விற்பனை அதிபர் கவிஞர் திரு விவேகானந்தன், நூல் ஆலோசகர் திரு என்.கே. மகாலிங்கம், ஆசிரியரும் பிரபல திரைப்படத்தயாரிப்பாளருமாகிய திரு .எஸ்.எம்.தனபாலன், ஆசிரியை திருமதி இராமச்சந்திரன் மகேஸ்வரி மற்றும் திரு சிவசாமி திருச்செல்வம் ஆகியோர் தங்களது உரையில் புங்குடுதிவின் வரலாற்று சிறப்பு மிக்க 15 பாடசாலைகள், ஆலயங்கள், வர்த்தகங்கள், வணிகர்கள் போன்ற பல துறை சார்ந்த விடயங்களைப் பற்றி சுருக்கமாய் விவரித்து, புங்குடுதீவின் பெருமைகளை பிரதிபலிக்கும் வகையில் வெளிவந்துள்ள இந்த வரலாற்று நூலில் உள்ள அனைத்துக கட்டுரைகளும், புகைப்படங்களும் நீங்கா நினைவாக அனைவரின் மனதிலும் என்றும் நிலைத்து நிற்கும் எனக் கூறி இதனை வெளியிட முன்னின்று உழைத்து ஆதரவு தந்த அத்துணை நல் உள்ளங்களையும் பாராட்டிச் சிறப்பித்தார்கள்.

நூல் ஆய்வுரை வழங்கிய கலாநிதி ஈ.பாலசுந்திரம் அவர்கள் இந்நூல் வெளியிட முற்பட்டபோது, அதற்கான கட்டுரைகள், புகைப்படங்கள் மற்றும் புங்குடுதீவு பற்றிய முழு விபரங்களையும் சேகரித்து பிரசவிக்கச் செய்த நூலின் பதிப்பாசிரியர்கள் எதிர்கொண்ட சவால்கள், முயற்சிகள் அனைத்தையும் வெகுவாகப் பாராட்டினார். புங்குடுதீவு எனும் பெயரே ஒரு காலத்தில் புங்கை மரங்கள் அதிகமாக காண்ப்பட்ட பகுதியாக விளங்கியிருந்தது என்றும், சங்க காலத்தை ஆண்ட மன்னர்கள் இயற்கையின் பெயரையே தாங்கள் வாழ்ந்த பகுதிக்கு சூடியிருந்ததையும் மேற்கொள் காட்டினார். தவிர இவ்வரலாற்று நூலில் அமைந்துள்ள ஆறு பகுதிகளின் சிறப்பினை தொகுத்து வழங்கியதோடு, அதில் உள்ள நிறைகுறைகளையும் சுட்டிக்காட்டி இந்நூல் உண்மையிலேயே நம் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை என்று கூறி தனது வாழ்த்துக்களைக் கூறி ஆய்வுரையை நிறைவு செய்தார். அடுத்து அன்றைய விழாவின் முக்கிய நிகழ்வான நூல் வெளியீட்டினை தலைவர் வெளியிட

முதற் பிரதிகளை 12 வட்டாரங்களையும் சார்ந்த 12 பிரமுகர்கள் அக மகிழ்வுடன் பெற்றுக்கொண்டார்கள். தொடர்ந்து மலர் ஆலோசனைக்குழு உறுப்பினர்களான புலவர் திரு ஈழத்து சிவானந்தன், கு.சிவநாயக சிங்கம், என்.கே.மகாலிங்கம், அதிபர் என.தனபாலன் மற்றும் கிராபிக் லேண்ட் பதிப்பக அதிபர் திரு கிருஷ்ணா ஆகியோரும் மற்றும் திரு துரை ரவீந்திரன், திரு மனோகரன் ஆகியோருக்கு விழாக்குழுவினர் நினைவுக் கேடயங்களை வழங்கி கௌரவித்தார்கள்.

மிகவும் அக்கறையுடன் தங்கள் பங்களிப்பை வழங்கி இவ்விழாவின் வெற்றி மகுடத்தில் நமது தாயக உறுவுகளின் ஒற்றுமையுணர்வோடு மிகவும் ஈடுபாட்டுடன் ஒரு வரலாற்று நூலாக ஆவணப்படுத்தியுள்ள புங்குடுதீவைச் சார்ந்தவர்களின் அரும் பெரும் முயற்சி என்பது புங்குடுதீவின் பெருமைக்கு ஒரு தனி முத்திரை பதித்துள்ளது என்று அதற்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி கூறி திரு துரை ரவீந்திரன் அவர்கள் அன்றைய விழாவை நிறைவடையச் செய்தார்.

கனேடிய மண்ணில் மிகவும் சிறப்பாக பல்வேறு சமூகப் பணிகளையும் அதே சமயததில் தாயகத்தில் ஏற்பட்ட அவலங்களை நீக்குவதற்காக பல விதங்களில் பெரும் உதவிகளையும், பங்களிப்பினையும் தொடர்ந்து ஒற்றுமையுணர்வோடு ஆற்றி வரும் தாயகத் தமிழ் சமூகங்களின் செயல்பாடுகளை பெரிதும் பாராட்டுதலுக்கரியதாகும் குறிப்பாக முதன் முதலாக புங்குடுதீவு மான்மியம் எனும் ஒரு அரும்பெரும் வரலாற்று நூலை கனடாவில் வெளியிட்டுள்ளது தமிழினம் அனைத்திற்கும் பெருமை சேர்ப்பது குறித்து ஊடகத்துறை சார்பில் வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறோம்.

வாழ்க தமிழ்!
வாழ்க தமிழினம்

- புதுவை இராமன்

உள்ளத்தில் உண்மையுடையவர்கள், ஒருபோதும் தோல்வி அடைய மாட்டார்கள். - ஷிண்டே

TBC Toronto Business College

SECOND CAREER

- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்று உங்கள் எதிர் காலம் மிளிர்வதைக் காணுங்கள்.

Tuition Fees, Books, Living Expenses, Daycare, & Transportation up to $28,000 Free Funding.

ODSP, WSIB Recepients & New Immigrants Welcome

ACCOUNTING & PAYROLL ADMINISTRATOR

NEW

35 WEEKS



JOB OPPORTUNITIES
- Payroll Clerk
- Pay Clerk
- Payroll & Benefit Clerk
- Accounts Assistant
- Accounting & Payroll Clerk

COMPUTERIZED ACCOUNTING DIPLOMA

26 WEEKS

JOB OPPORTUNITIES
- Accounts Clerk
- Accounts Receivable
- Accounts Payable
- Bookkeeper
- Accounts Assistant



MEDICAL OFFICE ADMINISTRATOR DIPLOMA

32 WEEKS



JOB OPPORTUNITIES
- Medical Secretary
- Medical Office Assistant
- Hospital Ward Clerk
- Medical Office Administrator
- Medical Record Clerk

PERSONAL SUPPORT WORKER DIPLOMA

26 WEEKS

JOB OPPORTUNITIES
- Patient Care Aide
- Hospital Attendant
- Long Term Care Aide
- Nurse Aide
- Personal Support Worker



CERTIFICATE COURSES

• Windows	• Access	• Simply Accounting
• Excel	• PowerPoint	• Accpac
• Word	• Quickbooks	• Photoshop

4465 Sheppard Avenue East, Suite 208
Toronto (Sheppard & Brimley)
info@tbcollege.com www.tbcollege.com

416-291-5155



கல்வாரி பூரண சுவிசேஷ ஐக்கியசபை

(மிட்லண்டு - ஷெப்பர்டு சந்திப்பின் அருகில்)

CALVARY FULL GOSPEL FELLOWSHIP

UNIT 840 - 50 WEYBRIGHT COURT
SCARBOROUGH ON M1S 5A8

ஞாயிறு காலை ஆராதனை

11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை

கல்வாரி ஐக்கிய சபையின் விசேட நிகழ்ச்சிகள்



- விடுதலை பெற விசேஷ ஜெபங்கள்
- சபைக்கு அழைத்துவர வாகன வசதிகள் உண்டு.

டாக்டர். ஜோன் ஆபிரகாம், பாஸ்டர்

வேதபாட கலாநிதி: வானொலி செய்தியாளர்

கேட்கத் தவறாதீர்கள்:
கீதவாணி 24 மணிநேர வானொலியில்

இடிமுழக்கம்

வானொலி நிகழ்ச்சிகள்

பிரதி ஞாயிற்றுக்கிழமை
நண்பகல் 1.30 மணிமுதல் 2.30 மணிவரை
தெய்வீக ஆராதனை நிகழ்ச்சி

647-839-8393 & 647-669-2948

Visit : www.secondtrumpet.org

JAFFNA SUPER STORE

INTERNATIONAL FOOD SUPER STORE

Specialists in Asian & West Indian Food Products & Spices

New M&S Convenience

We Sell Sri Lankan Groceries

We sell & Rent Singhala & Tamil teledramas & movies
We also rent English movies

2169 Victoria Park Ave
Scarborough Ont
M1R 1V5

Phone :- (416) 444 - 8202
Fax:- (416) 444 - 8202

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய
30 டொலர் மட்டுமே
அழையுங்கள்
1 855 292 7772

வசந்தம் ஒரே நாளில் மலர்ந்து விடுவதில்லை. அதேபோல வாழ்வில் உயர்வும் ஒரே நாளில் கிட்டிவிடாது. - அரிஸ்டாட்டில்



விரைவில் எனக்கு திருமணம்: ஸ்ரேயா

நான் விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகின்றேன், பெற்றோர் எனக்கு மாப்பிள்ளை பார்க்கின்றனர் என நடிகை ஸ்ரேயா கூறியுள்ளார்.

திருமணம் குறித்து ஸ்ரேயா அளித்த பேட்டியில், எல்லாம் அந்தந்த வயதில் நடக்க வேண்டும். பெற்றோருக்கும் திரு மணம் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். எனவே நான் திருமணத் துக்கு சம்மதம் தெரிவித்து விட்டேன்.

பெற்றோர் பார்க்கும் மாப்பிள்ளையே திருமணம் செய்து கொள்வேன். திரும ணத்துக்கு நான் சம்மதித்து விட்டதால் ஸ்ரேயாவுக்கு சினிமா வாய்ப்பு போய் விட்டது. அதனால்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார் என்று வதந் திகள் பரவக்கூடும்.

சினிமாவுக்கும், திருமணத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தயவு செய்து இதனை புரிந்து கொள்ளவேண்டும். மன துக்கு பிடித்தவர் கிடைத்தால் காதலிக்க லாம் என்று நினைத்து இருந்தேன். ஆனால் அப்படி யாரையும் இதுவரை நான் சந்திக்கவில்லை. எனவேதான் பெற்றோர் பார்க்கிறார்கள்.

எனக்கு கணவராக வருபவர் ஆரோக்கி யமானவராக இருக்க வேண்டும். சினிமா வை பற்றி நன்றாக புரிந்து தெளிவடைந் தவராக இருக்க வேண்டும். எனக்கு நல்ல நண்பராக இருக்க வேண்டும். எல்லா விஷயங்களையும் ஒளிவு மறைவு இல்லாமல் என்னோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

திருமணத்துக்கு பிறகு நிறைய பேர் விவாகரத்து செய்து பிரிகிறார்கள். அப்படி விவாகரத்து செய்வது எனக்கு பிடிக்காது. திருமணத்துக்கு முன்பு கணவராக வரப் போகிறவர் எப்படிப்பட்டவர் என்று முழு மையாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அவரது குணநலன், பழக்க வழக்கங் கள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு பிறகு கழுத்தை நீட்ட வேண்டும். திரு மணமானபின் எக்காரணத்தை கொண்டும் விவாகரத்து செய்யக்கூடாது என்று தெரிவித்துள்ளார்.

வெங்கட்பிரபுவுடன் இணையும் கார்த்தி

சென்னை 600 028, சரோஜா, கோவா, மங்கத்தா ஆகிய வெற்றிப்படங்களை இயக்கிய வெங்கட் பிரபு, 'மங்காத்தா' படத்திற்கு பிறகு நீண்ட இடைவெளி விட்டுள்ளார்.

இந்நிலையில் சூர்யாவை வைத்து ஒரு படத்தை இயக்குவதாக இருந்தது.

ஆனால் சூர்யா தற் போது சிங்கம் படத் தின் 2-ம் பாகத்தில் நடிப்பதற்காக சென்று விட்டதால் அந்த வாய்ப்பு அவரது தம்பி கார்த்தி-க்கு வந் துள்ளது.

ஆம், தற்போது வெங்கட் பிரபு இயக் கத்தில் கார்த்தி நடிப் பது உறுதியாகியுள் ளது. இதற்காக, வெளிநாடுகளில் பயணம் மேற்கொண்டு ஒரு கதையை உருவாக்கி வந்துள்ளாராம் இயக்குநர் வெங்கட் பிரபு. விரைவில் படப்பிடிப்பு வேலை கள் துவங்கவிருப்பதாகவும் சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கார்த்தி-யின் நடிப்பில் தற்போது உரு வாகியுள்ள 'சகுனி' படம், படப்பிடிப்பு கள் முடிந்த நிலையில், ரிலீசுக்கு தயாராக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கதிர் ஒளி திரை ஒளி

வித்யா வேடத்தில் நடிக்க அனுஷ்கா ஷெட்டி ஆர்வம்

சில்க் வேடத்தில் நடிக்க மறுத்த அனுஷ்கா ஷெட்டி வித்யா பாலன் நடித்த வேடத்தில் நடிக்கிறார். சில்க் ஸ்மிதா வாழ்க்கையை மைய மாக வைத்து உருவான இந்தி படம் 'தி டர்ட்டி பிக்சர்ஸ்'.

இதில் சில்க் வேடத்தில் வித்யா பாலன் நடித்திருந்தார். இப்படம் தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழியில் ரீமேக் செய்ய திட்ட மிடப்பட்டது.

இதில் நடிக்க அனுஷ்கா ஷெட் டியிடம் கால்ஷீட் கேட்டபோது மறுத்துவிட்டார். 'வேறு நல்ல கதை அம்சமுள்ள படத்தை ரீமேக் செய்தால் அதில் நடிப்பேன்' என்று கூறினார்.



இந்நிலையில் வித்யாபாலன் நடித்த 'கஹானி' என்ற படம் பாலி வுட்டில் வெளியாகி ஹிட்டானது.

கர்ப்பிணி ஒருத்தி கொல்கத்தா வில் காணாமல்போன தனது கண வனை தேடி கண்டுபிடிப்பதே கதை. இப்படத்தை அனுஷ்கா ஷெட்டி பார்த்தார்.

பின்னர் அவர் கூறும்போது, 'வித்யா பாலன் நடித்த இக்கதாபாத்திரம் சவாலா னது. இப்படத்தை தென்னிந்திய மொழி யில் ரீமேக் செய்தால் நடிக்க தயார். எந்த நேரத்திலும் இதற்கு கால்ஷீட் தருவேன்' என்று கூறினார். இதையடுத்து இப்படத் துக்கு மவுசு கூடியது. தெலுங்கு, தமிழில் இப்படத்தின் உரிமையை வாங்க பிரபல நிறுவனங்கள் போட்டியில் இறங்கி உள்ளன.

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார் – எபிரேயர் 13 :8



இயேசு மாறாதவர் திருச்சபை

புதிய ஆலய திறப்பு விழா அழைப்பிதழ் !

இடம்: 3500 மெக்கனிக்கல் அவென்னியோ
யூனிட் 08 ஸ்கார்பொரோ.
(மார்க்கம் / மெக்கனிக்கல் சந்திப்பில்)

நாள்: 13 -5 -2012 ஞாயிறு
மாலை 5 :30 மணிக்கு





பிரதிஷ்டை செய்பவர்
பேராயர் அருட்திரு. கிலேண்டன் லோயேட்
அவர்கள்

சிறப்புச்செய்தியளிப்பவர்
அருட்திரு டாக்டர். ஜான் ஆபிரகாம்
அவர்கள்

துதி ஆராதனை செய்பவர்
பாஸ்டர். ராஜ்குமார்
அவர்கள்

வரவேற்பாளர்
சுவி. பிராங்க்ளின் ஜான்
அவர்கள்

செவிக்கினிய பாடல்கள், சுகமளிக்கும் வல்லமையான ஜெபங்கள், ஆன்மாவைத் தொடும் ஆன்மீகச் செய்திகள், ஆராதனையின் இறுதியில் ராப்போஜன விருந்து இவை அனைத்திலும் பங்கு பற்றி தேவாசீர் பெற உங்கள் அனைவரையும் குடும்பம், நண்பர்கள் சூழ வருக! வருக! என வரவேற்கிறோம்.

அன்புடன் அழைக்கும்:
போதகர்களும், விசுவாசிகளும்,

இந்த ஆலயத்தில் வழக்கமாக நடைபெறப்போகின்ற ஆராதனை நேரங்கள்:
பிரதி ஞாயிறு காலை 10.30 மணிக்கு ஓய்வு நாள் ஆராதனை, பிரதி ஞாயிறு மாலை 5 மணிக்கு தெய்வீக சுகமளிக்கும் ஆராதனை.
புதன் கிழமை மாலை 6 .30 மணிக்கு பரிசுத்த வேதாகம தியானம், வெள்ளி கிழமை மாலை 6 .30 மணிக்கு அற்புத ஆராதனை.
சனி கிழமை காலை 10 .30 மணிக்கு உபவாசஜெபம், பிரதி மாதம் முதல் வெள்ளிக்கிழமை முழு இரவு ஜெபம்.

உங்கள் அனைத்து ஜெப தேவைகளுக்கும், குடும்ப ஆலோசனை பெறவும், ஊழியர்கள் உங்கள் இல்லங்களில் வந்து ஜெபிக்க வேண்டுமானாலும், நீங்கள் திருச்சபையோடு இணைந்து மருத்துவமனை ஊழியம், சிறைச்சாலை ஊழியம், வீடு சந்திப்பு ஊழியம், தனியாள் ஊழியம் செயய விரும்பினாலும் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

அருட்திரு பவுல்ராஜ்
(647) 766 - 7333
ஆலய அலுவலகம்: (416) [illegible] - 7772
Rev.Paulraj@yahoo.ca

பணம் சம்பாதிப்பவர்கள் ஒருபோதும் சோம்பலாய் இருப்பதில்லை; சோம்பலாக இருப்பவன் ஒருபோதும் பணம் பண்ணுவதில்லை. - லா பூரூயர்

வெற்றித் திருமகள் மெலனி டேவிட்டுக்குப் பாராட்டு!











1ம் பக்கத் தொடர்ச்சி

திரு.லிங்கன் நடராஜா விழா நிகழ்ச்சித் தொகுப் பாளராகப் பணிபுரிந்தார்.

கலாநிதி பாலசுந்தரம் அவர்கள் பாராட்டுரை நிகழ்த்திய போது, 'புலம் பெயர்ந்த நாடான கனடா வில் தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பினை திருமதி மெலனி டேவிட் நிறைவேற்றியுள்ளார். அவரொரு சமூக சேவகர் என்பதோடு விளையாட்டுத் துறையில் நம்மினத்தவர்களை ஊக்குவிக் கும் வகையில் 'சொர்க்கம்' உள்ளிட விளையாட்டு அரங்கு ஒன்றினையும் அமைத்துக் கொடுத்துள்ளார். யாழ்ப் பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் ஒரு கட்டிடம் கட்டவும் நிதி உதவி செய்துள் ளார். அக்கட்டிடத்தினை அவரது தந்தை யார் அண்மையில் யாழ் ப்பாணம் சென்று திறந்து வைத்தார். அவரது சேவை அளப் பரியது. அவருக்கு கதிர் ஒளி பத்திரிகை பாராட்டு விழா எடுத் தது வரவேற்கத்தக்கது' என்றார்.

திரு.ஈழவேந்தன் பாராட்டுரை வழங்கிய போது 'மன்னார், வவுனியா, மலை யகம் போன்ற இடங்களில் குடும்ப உறவு வைத்த தன் மூலம் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ள திருமதி மெலனி டேவிட் நமது தமிழ்ப் பாரம்பரியத் தினை எதிர்காலச் சந்ததியினரும் தொடர்ந்து முன்னெடுக்க ஆவன செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் ' எனக் கேட்டுக் கொண் டார்.

திரு சாமி அப்பாத்துரை பாராட் டிப் பேசிய போது, ' கனடாவுக்குப் புலம் பெயாந்து வருவோர் பல சவால்களை சமாளித்து முன்னேற வேண்டி இருந்தது. அதற்கு தமிழி னமும் உள்ளாகியது. மெலனி டேவிட் போன்ற திறமை சாலிகள் முன்வந்து தமிழினத்தை தலை நிமிர வைத்துள்ளார்கள். கனேடிய பெரு நீரோட்டத்துடன் கலந்து நமது பெயரை தக்க வைப்பது அவசியம்' எனக் கூறினார்.

திருமதி கோதை அமுதன் உரையாற்று கையில், ' ரொறண்டோ மாநகரின் பிரபல பத்திரிகையான 'ரொறண்டோ ஸ்ரார்' பத்திரிகை தமிழ்ப் பெண்மணணியான மெலனி டேவிட் சிறந்த பிரஜைகளுள் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என செய்தி வெளியிட்டதே பெருமைக் குரிய விடயம். திருமதி மெலனி டேவிட் சரிகா என்ற சிறுமிக்கு உதவி செய்து அவரை 'சுப்பர் சிங்கர்' ஆக் கியவர் எனப் பாராட்டிப் பேசினார்.

தன்னை சிறந்த பிரஜையாகத் தெரிவு செய்வதற்கு வாக்களித்த சகலருக்கும், உடனடியாக தன க்கு பாராட்டு விழா ஏற்பாடு செய்து கௌரவித்த 'கதிர் ஒளி' பத்திரிகைக்கும் திருமதி மெலனி டேவிட் நன்றி தெரிவித்தார். இராப் போசன விருந் துடன் பாராட்டு விழா நிறைவெய்தியது.





















பயமும், தயக்கமும் உள்ளவனை, தோல்வி தொடர்ந்து கொண்டே இருக்கும். - ஆலிவர் வெண்டல்

BAD CREDIT, GOOD CREDIT, NO CREDIT, BANKRUPT, CASH INCOME, SELF EMPLOYED?

NO PROBLEM! 100% APPROVED!!



TORONTO AUTO GROUP.CA



We have 5 Branches in Ontario!

Used Car Superstore & Indoor Showroom

We Finance

SUPER SUMMER SALE ON!!!

Over 500 Vehicles to choose from

Theva Emmanuel
Sales Consultant

Cell: 416-843-7258 / 416-899-7700
Office: 416-285-6363

தேவா மனுவேல்பிள்ளை
Sales Consultant
Direct: 416-843-7258
416-899-7700
Office: 416-285-6363
Email: emmanuel@torontoautogroup.ca

500ற்கும் மேற்பட்ட வாகனங்களிற்குள் தரமான புதிய, பாவித்த வாகனங்களை நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் வாங்கிட அழையுங்கள். உங்கள் Credit பிரச்சினைகளால் ஒரு Car வாங்கிட முடியாமல் கவலைப்படுகிறீர்களா? கவலையை மறந்து Car வாங்கிட அழையுங்கள்

4.9 % Financing O.A.C

All Credit Applications Accepted

5 Stores in Ontario - 400 cars to choose from



Toyota Corella



Honda Civic Nissan cars

2004 Mitsubishi Endeavor Limited Sport Utility

2005 Nissan X-Trail 4dr LE AWD Auto

2007 Toyota Sienna CE Minivan

Van Passenger - Toronto

2005 Honda Odyssey EX-L Minivan

2005 Toyota Sienna LE

2005 Toyota Sienna CE Minivan




416-843-7258 / 416-899-7700

2380, Lawrence Ave.E.
(At Kennedy) Scarborough

நேரத்தை தாமதப்படுத்தாதே... தாமதங்கள் தீமையான முடிவைத் தந்து விடும். - பர்க்

புதிய சுவை

பனீர் பாசுந்தி



தேவையான பொருட்கள்:

பால்- ஒரு லிட்டர்
துருவிய பனீர்- ஒரு கோப்பை
கன்டன்ஸ்ட் மில்க்- அரை டின்
சர்க்கரை-கால் கோப்பை
குங்குமப் பூ -சிறிது
பாதாம்-ஒரு மேசைக்கரண்டி
பிஸ்தா-ஒரு மேசைக்கரண்டி
முந்திரி-ஒரு மேசைக்கரண்டி
ஏலப்பொடி-சிறிது

செய்முறை:

குங்குமப் பூவை சிறிது பாலில் ஊறவிடவும். பாதாம், பிஸ்தா, முந்திரிப் பருப்புகளை ஒன்றும் பாதியுமாக நொறுக்கி வைக்கவும். அடி கனமான பாத்திரத்தில் பாலை ஊற்றிக் காய்ச்சவும். பால் முக்கால் பாகமாக குறைந்ததும் ஆடை நீக்கிய பாலை (கன்டன்ஸ்ட் மில்க்) ஊற்றிக் கொதிக்கவிடவும். பின்பு அதில் துருவிய பன்னீரை பாதியளவு போட்டு சர்க்கரையையும் போட்டு நன்கு கலக்கி பாலுடன் தொடர்ந்து கொதிக்கவிடவும். பின்பு மீதியுள்ள பன்னீர மற்றும் விருப்பமான பருப்புகளைப் போட்டு அடுப்பின் அனலைக் குறைத்து சிம்மில் வைக்கவும். தேவையான கெட்டி பதம் வந்ததும் குங்குமப்பூவைக் கரைத்து ஊற்றி ஏலப்பொடியைத் தூவி சூடாக அல்லது குளிர்வித்து பரிமாறவும்.

காய்கறி ஆம்லெட்

தேவையான பொருட்கள்:

கேரட் துருவல்,பீட்ரூட்,முட்டை கோஸ் துருவல்-அரை கப்
குடை மிளகாய் (விருப்பப்பட்ட நிறம்)
வெங்காயம்,தக்காளி,ப.மிளகாய்-த லா 1-பொடியாக நறுக்கவும்.
கொத்தமல்லி தழை-பொடியாக அரிந்தது-சிறிதளவு.
கடலை மா-1 கப்
மஞ்சள் தூள்-1 தேக்கரண்டி
மிளகாய் தூள்-1 மேசைக்கரண்டி
உப்பு-சிறிதளவு.
எண்ணெய்-தேவையான அளவு.

செய்முறை:



முதலில் நறுக்க வேண்டிய காய்கறிகளை நறுக்கிக் கொள்ளவும். கடலை மாவுடன் மஞ்சள் தூள், மிளகாய் தூள், உப்பு சேர்த்து பஜ்ஜி மா பதத்திற்கு கட்டியில்லாமல் கையால் கரைத்து தனியே வைத்துக் கொள்ளவும். அடுப்பில் நொன் -ஸ்டிக் தவாவை சூடுபடுத்திக்கொண்டு ஸிம்மில் வைத்துக் கொள்ளவும்.ஒரு டீஸ்பூன் எண்ணெய் விட்டு தேய்த்துக் கொள்ளவும். இப்பொழுது மாக் கரைசலை ஒரு குழிவான கரண்டியால் கல்லில் ஊற்றவும்.(தோசை மாவைப் போல் தேய்க்கக் கூடாது).முதலில் அதன் மீது பொடியாக அரிந்த வெங்காயம்,தக்காளி வைத்து அதன் மீது கேரட்,பீட்ரூட்,முட்டை கோஸ் துருவல்களை தூவவும்.பின் கொத்தமல்லி தூவவும்.மெலிதான கரண்டியால் இக்கலவையை லேசாக அமுத்தவும்.இப்பொழுது தீயை சற்று கூட்டிக் கொள்ளலாம்.சுற்றிலும் எண்ணெய் விட்டு இருபுறமும் திருப்பி போட்டு வேக விட வேண்டும். இதே போல் எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.சூடாக பறிமாறவும்.



கீரை சாதம்

தேவையான பொருட்கள்:

கீரை-ஒரு கட்டு
அரிசி-ஒன்றரை கோப்பை
வெங்காயம்-ஒன்று
கடலைப் பருப்பு- ஒரு தேக்கரண்டி
உளுத்தம் பருப்பு-ஒரு தேக்கரண்டி
காய்ந்த மிளகாய்-இரண்டு
தனியா-ஒரு தேக்கரண்டி
பூண்டு-இரண்டு பற்கள்
கறிவேப்பிலை-ஒரு கொத்து
கடுகு-ஒரு தேக்கரண்டி
உப்பு-தேவைகேற்ப
எண்ணெய்-ஒரு மேசைக்கரண்டி
நெய்-ஒரு தேக்கரண்டி

செய்முறை:

கடலைப் பருப்பு உளுத்தம் பருப்பு தனியா காய்ந்த மிளகாய் ஆகியவற்றை சிவக்க வறுத்து கரகரப்பாக பொடிக்கவும். சாதத்தை உதிரி உதிரியாக வேகவைத்து வடிக்கவும். கீரையைச் சுத்தம் செய்து பொடியாக நறுக்கி வைக்கவும். கடாயில் எண் ணெயைக் காயவைத்து கடுகு கறிவேப்பிலைப் போட்டு வெங்காயத்தைப் போட்டு வதக்கவும். பின்பு கீரை மற்றும் பூண்டைப் போட்டு கீரை வேகும் வரை வதக்கவும். பின்பு சாதத்தைக் கொட்டி, உப்பு, வறுத்து அரைத்த பொடியைப் போட்டு அதன் மேலாக நெய்யை விட்டுக் கிளறவும்.

உள்ளத்திலே அன்பு இருந்தால் மட்டும் போதாது. அது, செயலில் பயன்படவும் வேண்டும். - [illegible]


தமிழீழத் தேசிய
துக்க நாள் – மே 18
ஈழத்தமிழ் இன அழிப்பின் உச்சக் கட்ட நாளை, உலகத் தமிழினம் உறைந்து போன நாளை
மூன்றாம் ஆண்டாக நினைவில் ஏந்துவோம்
உரமாகிப் போன எம் உறவுகளுக்காக எம் கண்ணீரை மீண்டும் காணிக்கை ஆக்குவோம்.
தமிழர்களாகிய நாங்கள் வழமைபோல்
ரொறன்ரோ மாநகரில் குவீன்ஸ் பார்க்கில் கூடி
தீச்சுடர் ஏந்தி எம் சோகத்தைப் பகிர்ந்து கொள்வோம்.
போர்க்குற்றவாளிகளை அனைத்துலக விசாரணைக்கு முன் நிறுத்துவோம்
வெள்ளிக்கிழமை
மே 18
2012
5:00pm - 8:00pm
குவீன்ஸ் பார்க்
QUEEN'S
PARK
தமிழ் கனடியர்கள்
தொடர்புகளுக்கு 416-877-8409, 647-209-4100

ஈழத்தமிழரின்

முடிந்த முள்ளி வாய்க்காலும், தொடரும் போராட்டமும்

பணியாளன்

எஸ்.ஜே.இம்மானுவேல்



சிங்களப் படையெடுப்பை நியாயப்படுத்திய ஜனாதிபதியின் கூற்று

நீண்ட ரிவிரச நடவடிக்கைக்கு சிறிது முன்பாக 1995 ஒக்டோபர் 12-13ம் இரவு 10.00 மணியளவில் சிறிலங்கா யுத்த விமானங்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்ட இரண்டு வகையான துண்டுப் பிரசுரங்களை மக்கள் மத்தியில் வீச முயற்சித்தன. ஆனால் பருவக் காற்றில் அகப்பட்டு இவைகளில் பெரும்பாலானவை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளேயே வீழ்ந்து போயின. அவற்றில் சில கிளிநொச்சி வயல் பிரதேசத்தில் அமைந்திருந்த அகதி முகாம்களுக்கருகாமையிலும் வீழ்ந்தன. அந்த துண்டுப் பிரசுரங்களின் உள்ளடக்கம் யாது? இவற்றினது நோக்கம் என்ன?

1995 ஏப்ரல் பேச்சு வார்த்தை முறிந்த பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகள் ஏவிவிடப்பட்டன. 1995 ஆகஸ்ட் 3ம் நாள், ஜனாதிபதி சந்திரிகா ஒரு தலைப்பட்சமாக தீர்வுத் திட்டமொன்றை சிங்களவர்களுக்கும் பன்னாட்டு ஊடகங்களுக்கும் அறிமுகப்படுத்தி தனது இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்த முயன்றார். அத்தீர்வுத் திட்டங்கள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கோ அல்லது தமிழ் மொழியில் தமிழ் மக்களுக்கு அனுப்பி வைக்கவோ, அறியத்தரவோ இல்லை. ஆனால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு முந்திய நாட்களில் தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை நியாயப்படுத்த ஒரு வேடிக்கையான முயற்சியைக் கையாண்டார். அதாவது யுத்த விமானங்கள் ஊடாக இருவகைத் துண்டுப் பிரசுரங்களை மக்கள் மத்தியில் வீசி தனது அமைதித் திட்டம் பற்றி சுருக்கமாக விளக்க முயன்றார். ஆனால் தமது உயிர்ப் பாதுகாப்பைத் தேடி ஓடிக்கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு வீசப்பட்ட பிரசுரங்கள் எட்டவுமில்லை எட்டினாலும் அந்நேரத்தில் அவரது தீர்வுத் திட்டம் தாக்குதல்களினால் நடுங்கி ஒடுங்கியிருந்த தமிழர்களுக்கு அர்த்தமற்ற கேலிக்கூத்தாகவே இருந்தது.

இதில் இன்னொரு வேடிக்கை - சற்றுப் பெரிதான துண்டுப் பிரசுரம் ஜனாதிபதியின் வர்ணப் படத்துடன் அவரது செய்தியையும் தாங்கியிருந்தது. அது விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்துவத்துக்கு அல்ல, யாழ்ப்பாணக் குடிமக்களுக்கு என விசேடமாக முகவரியிடப்பட்டிருந்தது. இது சிலந்தி தன் வலைக்குள் சிறு பூச்சியை சிக்க வரவழைப்பது போன்று தமிழ் மக்களை இராணுவ பிடிக்குள் வரவழைப்பதாக இருந்தது. தமிழ் மக்களைக் காத்து, பாதுகாப்பளிக்கும் விடுதலைப் புலிகளிடமிருந்து பிரித்து தனது நாசகார யுத்தத்திற்குள் அவர்களை இட்டுச் செல்லும் நோக்கமாகவே அம்மாவின் அழைப்பு இருந்தது. அம்மடல், முகவரியிடப்பட்ட தமிழ் மக்களுக்கு தனது ஆட்சி ஆரம்பத்தில் சமாதானம்! இனி யுத்தம் என்றுமே இல்லை! என்று வாக்குறுதி அளித்துவிட்டு இப்பொழுது அதை நம்பியவர்கள் மீது குண்டுகளை வீசுகிறார் அம்மையார்.

இங்கேயும் கூட அவர் இந்த நாசகார யுத்தத்தை சமாதானத்திற்கான யுத்தம் என்று கூற முனைவதுடன் தன்மீது திணிக்கப்பட்ட யுத்தம் ஒன்று என்று சர்வதேசத்தின் அரங்கில் தம்மை நியாயப் படுத்த முயன்றார். அப்பிரசுர முடிவில் ஏற்கனவே நடுங்கிப் பயந்து ஏங்கும் தமிழ் மக்களை நோக்கி அவர் கூறுவது, இந்த யுத்தம் தமிழர்களுக்கு எதிரானது அல்ல, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மட்டும் எதிரானது என்பதே. இது ஜனாதிபதி அம்மையார் தனது மனச்சாட்சியை அமைதிப்படுத்த கடைசி நிமிடத்தில் எடுத்த முயற்சியாக எமக்குத் தோன்றியது.

சமாதானத்திற்கான வாக்குறுதியை அளித்துவிட்டு இப்போது தனது நாசகாரச் செயல்களையும் அட்டூழியங்களையும் மூடி மறைக்க எடுத்த முயற்சியாகவே அத் துண்டுப் பிரசுரங்கள் அமைந்தன. அதே போல் அவரது தனிப்பட்ட 1995 ஆவணி 3 சமாதானத் திட்டமும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய நாசகாரச் செயலை மூடி மறைக்கும் முயற்சியாக அமைந்தது.

இலங்கையின் இரண்டாவது பெரிய நகரான யாழ்ப்பாணத்தில் எவ்வாறு மக்கள் அடர்த்தியாக வாழ்ந்தார்கள் என்பது பாரிசில் கல்விகற்ற அம்மையாருக்கு நன்றாகத் தெரியும். அலைஅலையாக இடம்பெற்ற இடப்பெயர்வுகள் இன்னும் மக்களை எப்படி நெருக்கடி நிலைக்கு உட்படித்தியது என்பதும் அவவுக்குத் தெரியும். நகர்ப்பகுதியின் சகல பொதுக் கட்டடங்களின் ஓரங்களிலும் மக்கள் தேங்கியுள்ளார்கள் என்பதும், அந் நகரம் ஓர் இருண்ட சிறைக்கூடம் போன்று மின்சாரம், போக்குவரத்துச் சாதனங்கள், தொடர்பு சாதனங்கள் இன்றி மக்கள் அவலமுறுவதையும் அவர் நன்கு அறிந்திருந்தார். 1983 தொடங்கி 12 ஆண்டுகளாகத் தொடரும் அரசின் கொடுமையான யுத்தத்தின் அவலங்களையும் வேதனைகளையும் எதிர்கொண்டு பரிதாபகரமான வாழ்க்கைச் சூழலில் அழிவுகள் மரணங்கள் மத்தியில் விதவைகளும் அனாதைகளும் தவித்து நின்றார்கள். இவை எல்லாவற்றையும் அறிந்து கொண்டும், அவவின் தீர்மானங்கள் எப்படி எடுக்கப்பட்டன? தனது அதிகார மோகத்திற்கும் சிங்கள பேரினவாத சக்திகளின் வேட்கைகளுக்கும் அடி பணிந்து தமிழினத்தின் வேதனைகளை மூழ்கடித்துவிட்டு, தமிழர்களின் யதார்த்தமான தலைமைத்துவத்தை ஒழித்துக் கட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தார்.

யாழ்ப்பாணத்தின் இறுதி நாட்கள்

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் இறுதியான நடவடிக்கை ஒபரேசன் ரிவிரச 1995 ஒக்டோபர் 17ல் ஆரம்பமாகியது. அன்று கருமேகம் குவிந்த கால நிலை, கடுமழை கொட்டும் அறிகுறிகள். இரவும் பகலும் இடியும் மின்னலும், உறக்கமற்ற மக்கள் பதட்டத்துடன் நடுநடுங்கினர். அடுத்த நிமிடம் என்ன நடக்குமோவென்று தெரியாது ஏங்கினார்கள். இருளுக்குள் முடங்கிக் கிடக்கும் மக்கள் மீது, பலாலி முகாமில் இருந்து அடிக்கடி ஏவப்பட்ட பிரகாசமான தேடுதல் வெளிச்சம் மக்களை மேலும் திடுக்கிட செய்தது. யாழ்ப்பாணக் குடாநாடு முழுமையாக அதிர்ந்து ஆடியது. இரவு பகலாக இடம்பெற்ற வான்வெளிக் குண்டு வீச்சுக்கள் தமிழ் மக்களை விரட்டித் துரத்தி வெளியேற்றி, முன்னேறும் படையினருக்கு இடம் ஏற்படுத்திக் கொடுத்தது. வீசிய குண்டுகள், போராட்ட முன்னரங்க நிலைகளைத் தாண்டி, அச்சுவேலி, நீர்வேலி, கோப்பாய் போன்ற மக்கள் செறிந்த பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன.

இவ்வாறு வான்வெளித் தாக்குதல்களுடனும் எறிகணை வீச்சுக்களுடனும், ஆட்டிலரி தாக்குதலுடனும் வந்துகொண்டிருக்கும் சிங்கள மீட்சியாளர்களிடமிருந்து நிரபராதிகளாக நின்ற தமிழ் மக்கள் எப்படி தப்பிப் பிழைக்க முடியும் என்று ஏங்கினர். இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளிடம் படித்த பாடங்களிலிருந்து சிறிலங்கா அரசபடைகள் புதிய அணுகுமுறைகளை அறிந்து, பல வாரங்களாக இராணுவ ஆய்வுசெய்து, திட்டமிட்டு அதன் பின்தான் தமது இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது தெட்டத் தெளிவாயிற்று.

தொடர்ச்சியாக அண்மித்துவரும் குண்டுகளின் சத்தமும் இடையிடையே வான் இடியோசையும் யாழ் குடா நாட்டு மக்களுக்கு திகைப்புறும் செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருந்தன. ஒரு புறம் நகரத்திலிருந்து இடம்பெயரும் மக்கள் வெள்ளம் அதிகரித்துக் கொண்டிருக்க மறுபுறம் அயல் கிராமங்களில் இருந்த மக்களும் அலை அலையாக வெளியேறிக் கொண்டிருந்தனர். ஈழத் தமிழருக்கு சிறிலங்கா அரசாங்கத்தின் இனத் துவேசக் கொள்கையும் அதன் இராணுவத்தின் இரக்கமற்ற செயற்பாடுகளின் நோக்கமும் தெட்டத் தெளிவாயிற்று. அதாவது தமிழர் தலை நகரமான யாழ்ப்பாணத்திலிருந்து 2000 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த தமிழரை துரத்தி விட்டு நகரத்தை சிங்களப் படைகள் கைப்பற்றுவதே அவர்களின் நோக்கம்.

நவீன யுத்தக் கருவிகளுடனும் தாங்கிகளுடனும் நாற்பதினாயிரம் சிங்களப் படையினர், தம்மைச் சூழ்ந்து கொண்டிருப்பதைக் கண்ட தமிழர்கள் நம்பிக்கையற்ற நிலையில் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்திற்கு தள்ளப்பட்டார்கள். தம்மிடமுள்ள சகல சக்திகளையும் திரட்டியவர்களாக வெளியேறிக் கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நிகழ்வு அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தரையில் மாத்திரம் ஒரு நேருக்கு நேர் நிற்கும் மரபுச் சமராக இருந்திருந்தால் மக்கள் ஓரளவு நம்பிக்கையுடன் குடாநாட்டில் தங்கியிருப்பர். ஆனால், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கில், பல மைல்களுக்கப்பால் இருந்து மேற்கொள்ளப்பட்ட வான், தரை, குண்டுவீச்சுக்கள் மக்களை வெகுவாக அச்சுறுத்தின. சிறிலங்கா அரசபடைகள் முன்னேறி யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து மீட்க வருகிறார்கள் எனக் கூறப்பட்ட திட்டம் யாழ்ப்பாண மக்களுக்கு ஏதோ இன்பமான சுதுநெலும்- (வெண்தாமரை) வாழ்வு வழங்கும் திட்டமல்ல. மாறாக குண்டு மழை பொழிந்து கொண்டு, அழிவும் அக்கிரமும் நிறைந்த ஆக்கிரமிப்பையே நோக்கமாகக் கொண்டிருந்தது. அழிவு ஆயுதங்களைப் பாவித்து மக்களை விடுவிக்க முடியும் என்ற தப்புத் தாளங்களை சிறிலங்காப் படைகளிடமிருந்தே உலகம் தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் தலைமைத்துவத்தின் உரிய நேரத்துடனான எச்சரிக்கை

சிறிலங்கா அரசு தனது பொய்யான பரப்புரைகளால் தனது யுத்தம் அமைதிக்கான ஒரு முயற்சி என்றும் இது தமிழ் மக்களுக்கு எதிரான போரல்ல எனவும் கூறி உலகநாடுகளை ஒரு வகையில் நம்பச் செய்திருக்கலாம். ஆனால், அரச படைகளின் கடந்த 40 ஆண்டுகால கொலைவெறியாட்டங்களாலும் அழிவுகளாலும் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை நன்கு அறிந்த வடபகுதி மக்கள் இவ்வாறன அரசின் பொய் பரப்புரைகளுக்கு எடுபடப் போவதில்லை.

ரிவிரச (Riviresa) என்ற குறியீட்டுப் பெயருடன் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் முன்னேற்றத்தை விடுதலைப் புலிகள் நாளுக்கு நாள் அவதானித்து ஆராய்ந்து வந்தனர். அதன் விளைவாக 1995 ஒக்டோபர் 30ம் நாள் தமிழ் மக்களுக்கு ஓர் இறுதி எச்சரிக்கையை உரிய நேரத்தில் வெளியிட்டனர். அதில் குறிப்பிட்டதாவது: அரச படைகள் யாழ்ப்பாண நகரை அண்மித்துக் கொண்டிருக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் இதனை முழுச் சக்தி கொண்டு எதிர்த்துப் போராடுவார்கள். ஆகையால் மக்கள் தமது பாதுகாப்புக் கருதி தென்மராட்சி, வடமராட்சி, வன்னிக்கு இடம்பெயருமாறு வேண்டுகிறோம்.

இவ் எச்சரிக்கை, மக்களை ஒரு மிகப் பெரிய இடப்பெயர்வுக்கு வழி வகுத்தது. சிங்கள இனவாத ஊடகவியலாளர்களும், வடகிழக்கிற்கு வெளியில் கொழும்பில் மறைந்து வாழும் சில விடுதலைப் புலி எதிரிகளும், புலிகளின் இப் பொறுப்பான ஒரு உரிய கால அறிவித்தலை திரித்து, பொய்களை பரப்புரை செய்தனர். உண்மையில் மக்களைப் பொறுத்த மட்டில் மக்கள் வலிந்தோ அல்லது பயமுறுத்தியோ புலிகளால் வெளியேற்றப்படவில்லை. அரச படைகளின் அகோர நடவடிக்கைளின் பொருட்டே வெளியேறினர். உண்மையைத் திரித்து தமது சுயநலனிற்காக வெளியுலகிற்கு தவறான செய்திகளைக் கொடுத்துப் பிழைப்புத் தேடும் யூதாசுகள் பலர் தமிழ் இனத்திற்கு எதிராக துரோகம் செய்கின்றனர்.

சந்திரிகாவால் வாடகைக்கு அமர்த்தப்பட்டு கூலிக்கு அரசியல் பிழைப்பு நடாத்தும் தமிழ் அரசியல்வாதிகள் இம்மாபெரும் இடப்பெயர்வைக் கண்டு ஆச்சரியமடைந்தவர்கள் போன்று தமிழ் மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் துப்பாக்கி முனையிலையே மக்களை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றுகின்றார்கள் என்று முதலில் கூறினார்கள். ஆனால் அவர்களின் சொந்தக் கூற்று உண்மைக்கு புறம்பானதாலும் மக்களிடம் எடுபடாததினாலும் அவர்கள் அரசுக்குச் சார்பாக மாறி அரசபடைகள் மதிநுட்பத்துடன் உரிய காலத்தில் மக்களை யுத்த பிரதேசத்தை விட்டு விலகுமாறு கேட்டுக் கொண்டதன் பேரில் மக்கள் வெளியேறுகின்றார்கள் எனக் கூறினார்கள். உண்மையாக யாழ்ப்பாணத்திலிருந்து வெகு துாரத்தில் வாழும் இவர்கள் குண்டுச் சத்தத்தைக் கேட்டதோ அழிவைப் பார்த்ததோ கிடையாது. ஆனால் இவர்கள் யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் விடுதலைப் புலிகள் நிற்பதையே தங்கள் கூலி-அரசியல் பார்வையில் காண்கிறார்கள். அவர்கள் மனச்சாட்சியில் பொய்களை உலகிற்குக் கூறுகிறோம் என அறிந்திருப்பினும் விடுதலைப்புலிகளுக்கு அவப்பெயர் ஏற்படுத்துவதையே தமது கூலிப்பணியாகச் செய்பவர்கள்.

எப்போது மக்களுக்கு உயிராபத்து ஏற்படவுள்ளதோ, அப்போது அதன் அபாயங்களை எடுத்துக்காட்டி, எச்சரித்து, பயங்கரமான சூழலிருந்து வெளியே உதவி புரிவதே பொறுப்பு வாய்ந்த தலைவர்களின் கடமையாகும். இதைத்தான், தமிழீழ விடுதலைப் புலிகள் 1995 ஒக்டோபர் 30ல் பொறுப்புணர்வுடன் செய்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் ஒலிபெருக்கி மூலம் உயிர் ஆபத்தை எடுத்துக்கூறி மக்கள் வெளியேற போக்குவரத்து வசதிகள் வழங்கி, வயதானவர்கள், நோயாளர்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர உதவி வழங்கினார்கள். இவைகளை நாம் நேராகக் கண்டறிந்தோம்.

இவ்வாறு உடனடியாக இரவிரவாக பொருந்தொகை மக்கள் ஒரு மாபெரும் இடப்பெயர்வுக்கு உள்ளாவது மிகவும் கடினமானதும் சிக்கலானதுமான நிகழ்வாகும். குறிப்பாக வயதானவர்கள், நோயாளிகள் மற்றும் வயது குறைந்தவர்கள், தத்தமது அத்தியாவசிய உடமைகளை எடுத்துச் செல்வது மிக வேதனைக்குரியதாகும். இவையெல்லாவற்றையும் விட உயிரைக் காப்பதே அவர்களது முதற் கடமையாயிருந்தது. இதற்குத்தான் முன்னுரிமை கொடுத்து விடுதலைப் புலிகள் மக்களுக்கு உதவினார்கள். தமிழீழ விடுதலைப் புலி போராளிகள் வெற்றிகரமாக முன்னேறும் இராணுவத்தை கோப்பாயில் தடுத்து நிறுத்தினர். அந்த இடை வேளையில் வயதானவர்கள், நோயாளர்கள் வாகனங்கள் மூலம் பயணிக்கவும், அத்தியாவசிய தேவைகளுக்குரியவற்றை திரும்பி வந்து எடுத்துச் செல்லவும் உதவினார்கள். நவம்பர் முதல் வாரம் வரை அனேகர் தமது இல்லிடங்களுக்கு இரகசியமாக இரவிரவாக திரும்பி தமக்கு அதி தேவையான பொருட்களை எடுத்துச் சென்றார்கள்.

- தொடரும்

நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால், உன்னுடைய பலவீனங்களைத் தெரிந்து கொள். - பால் ரிச்சர்ட்

SONYயின் கதை

வாரம் ஒரு வி.ஐ.பி.

இரண்டாம் உலகப்போரினால் உருத்தெரியாமல் சிதைந்துபோன ஒரு தேசம் ஜப்பான். உலக நாடுகளில் அது புரிந்த அட்டூழியங்களுக்கு அமெரிக்கா அணுகுண்டுகள் மூலம் பதிலடி கொடுத்த போது இனி பல தலைமுறைகளுக்கு அந்த தேசம் தலையெடுக்க முடியாது என்றுதான் உலகம் எண்ணியது. ஆனால் போரில் தோற்றாலும் பொருளாதாரத்தில் தோற்க விரும்பாத ஜப்பானியர்கள் தன்னம்பிக்கையையும் உழைப்பையும் உரமாக விதைத்தனர் ஜப்பானிய மண்ணில். ஒருசில தலைவர்கள் மட்டுமல்ல, ஒரு தேசமே தன்னம்பிக்கையோடு எழுந்து நின்று போர் முனையில் காட்டிய வேகத்தை நாட்டை மறுசீரமைப்பதிலும் காட்டினார்கள். விளைவு... 30 ஆண்டுகளுக்குள் அமெரிக்காவுக்கு நிகரான பொருளியல் வல்லரசாக உருவெடுத்தது ஜப்பான்.

அந்த அதிசயத்துக்கு வித்திட்டவர்கள் பலர் இருந்தாலும் ஒருவரின் பெயரை ஜப்பானிய வரலாறு மட்டுமல்ல உலக வரலாறும் என்றென்றும் போற்றும். *Made in japan* என்ற வாசகத்தை தாங்கி வரும் எந்தப் பொருளையும் கண்ணை மூடிக்கொண்டு வாங்கும் அளவுக்கு உலக மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு முழுமுதற் காரணம் அந்த தொழில் பிரம்மா. அவர்தான் தரக் கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தையும் *SONY* என்ற புகழ்பெற்ற நிறுவனத்தையும் உலகுக்கு தந்த ஜப்பானிய தொழில் முனைவர் அக்யோ மொரிட்டா.

1921 ஆம் ஆண்டு ஜனவரி 26ந்தேதி ஜப்பானின் மெஹோயா நகரில் குடும்பத்தின் மூத்த பிள்ளையாக பிறந்தார் மொரிட்டா. 400 ஆண்டுகளுக்கு மேலாக சாக்கே எனப்படும் ஜப்பானிய மதுபானம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தது அவரது குடும்பம். மொரிட்டாவும் அதே தொழிலை செய்ய வேண்டும் என விரும்பினார் அவரது தந்தை. அதனால் பள்ளியில் படித்தபோதே மொரிட்டாவை நிறுவன கூட்டங்களில் கலந்துகொள்ளச் செய்தார். சிறுவயது முதலே மின்னியல் பொருள்களை அக்கு வேறு ஆணி வேறாகக் கழற்றி மீண்டும் பொருத்திப் பார்ப்பதில் அலாதிப் பிரியம் மொரிட்டாவுக்கு. பள்ளியில் கணிதமும் இயற்பியலும் அவருக்கு மிக பிடித்த பாடங்களாக இருந்தன.

பள்ளிப்படிப்பை முடித்ததும் ஒசாக்கா இன்டீரியல் பல்கலைகழகத்தில் சேர்ந்து இயற்பியலில் பட்டம் பெற்றார். அதன் பிறகு ஜப்பானிய கடற்படையில் அதிகாரியாகப் பணியாற்றினார். அந்த சமயத்தில் மசார் இபுக்கா என்ற பொருளியல் வல்லுநருடன் நட்பு ஏற்பட்டது. இரண்டாம் உலகப்போர் முடிந்ததும் என்ன செய்யலாம் என்று யோசித்தார் மொரிட்டா. 14 தலைமுறையாக செய்யப்பட்டு வந்த தன் குடும்பத் தொழிலையே செய்து சௌகரியமான பிரச்சினையில்லாத வாழ்க்கையை அவர் தேர்ந்தெடுத்திருக்க முடியும். ஆனால் பரம்பரைத் தொழில் என்றாலும் வளர்ச்சிக்கு இடமில்லாத தொழிலைச் செய்ய அவருக்கு விருப்பமில்லை. மாறாக உலகத்தையே தன் பக்கமும் ஜப்பான் பக்கமும் திரும்ப வைக்க வேண்டும் என்ற நெருப்பு அவருக்குள் கனன்று கொண்டிருந்தது.

1946ஆம் ஆண்டு மே 7ந்தேதி தனது கடற்படை நண்பர் இபுக்காவுடன் சேர்ந்து வெறும் 190 ஆயிரம் யென் அதாவது சுமார் 375 டாலர் மூலதனத்தில் 20 ஊழியர்களைக் கொண்டு 'டோக்கியோ டெலிகம்யூனிகேஷன்ஸ் கோர்ப்பரேஷன்' என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது 25 தான். குண்டுகள் துளைத்திருந்த ஒரு பாழடைந்த பகுதிக் கடைதான் அவர்களின் தொழில் முகவரி. முதல் நாளிலிருந்தே தொழிநுட்ப ஆய்விலும் புதிய பொருள் உருவாக்கத்திலும் இபுக்கா கவனம் செலுத்த, விற்பனை உலகமயமாதல், நிதி, மனிதவளம் ஆகியவற்றில் கவனம் செலுத்தினார் மொரிட்டா.


அந்த நிறுவனம் விரைவாக டேப் ரெக்கோர்டர் எனப்படும் முதல் ஒலிப் பதிவு கருவியை உருவாக்கியது. ஆனால் அது மிகப்பெரியதாக இருந்ததால் அதை எவரும் வாங்கமாட்டார்கள் என்பது மொரிட்டாவுக்கு புரிந்தது. போருக்கு பிந்திய காலம் என்பதால் அதிகம் பணம் கொடுத்து வாங்கும் நிலையிலும் ஜப்பானியர்கள் இல்லை. உடனே மொரிட்டாவின் மூளை வேலை செய்தது. அமெரிக்காவின் பெல் லேபஸ் நிறுவனத்திடமிருந்து டிரான்ஸிஸ்டருக்கான உரிமம் பெற்று சட்டைப்பையில் வைக்கக் கூடிய அளவிலான சிறியதாக வானொலியை உருவாக்கினார். அமெரிக்காவிடமிருந்து பெற்ற தொழில்நுட்பத்தை கொண்டு புதிய பொருளை உருவாக்கி அமெரிக்கர்களுக்கே விற்பனை செய்யும் அந்த திட்டம் கைமேல் பலன் தந்தது.

சட்டைப்பை வானொலி அமோக வரவேற்பை பெற்றது. அதற்கு காரணம் தரக்கட்டுப்பாடுக்கு மொரிட்டா கொடுத்த முக்கியத்துவமும் தரக்கட்டுப்பாடுக்கென்றே ஒரு தனித்துறையை உருவாக்கியதும்தான். மேலும் தங்கள் பொருள்களுக்கு ஜப்பான் மட்டுமல்ல, உலகமே சந்தையாக வேண்டும் என விரும்பினார். அதனால் ஊழியர்களுடன் சேர்ந்து அனைவரும் எளிதில் சொல்லக் கூடிய ஒரு புதிய சொல்லை தேடி அகராதிகளை புரட்டினார்கள். அப்போது அவர்களுக்கு கிடைத்த சொல்தான் சோனஸ். இலத்தீன் மொழியில் சோனஸ் என்றால் ஒலி என்று பொருள் அந்த சொல்லையும் அப்போது அமெரிக்காவில் புகழ் பெற்றிருந்த 'சோனி போயஸ்' என்ற இசைக் குழுவின் பெயரையும் இணைத்து 1958ல் நிறுவனத்தின் பெயரை சோனி (*SONY*) கோர்ப்பரேஷன் என்று மாற்றினார் மொரிட்டா.

இரண்டு ஆண்டுகள் கழித்து அமெரிக்காவிலும் நிறுவனக் கிளையை தொடங்கி தன் குடும்பத்துடன் அங்கு குடிபெயர்ந்தார். அதன்பிறகு வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்காத வித்தியாசமான மின்னியல் பொருட்களை செய்வதில் மொரிட்டா கவனம் செலுத்தினார். அவரது புத்தாக்க சிந்தனைகள் புதிய கலாச்சாரங்களையும் புதிய வாழ்க்கை முறைகளையும் உருவாக்கின. உதாரணத்திற்கு, தன் பிள்ளைகளோடு சுற்றுலா செல்லும்போது அவர்கள் பெரிய டேப் ரெக்கோர்டர் கொண்டு வருவதை கவனித்தார். அதன் அசௌகரியம் அவரது சிந்தனையைத் தூண்டியது. போகும் இடத்திற்கெல்லாம் எடுத்துச் செல்லும்படியாக அளவை சுருக்கினால் என்ன என்று சிந்தித்தார். அவரது சிந்தனையில் வோக்மேன் உதித்தது.

அந்த முயற்சியில் அவர் ஈடுபட்டிருந்த போது அவருக்கு அணுக்கமானவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? ஒலி வாங்கியை எவன் காதில் மாட்டிக் கொண்டு நடப்பான்? உலகம் பைத்தியம் என்று சொல்லும். எனவே அது விற்பனையாகாது என்று ஆரூடம் கூறினர். ஆனால் எதிர்காலத்தையே உருவாக்கும் தைரியம் கொண்ட ஒரு மனிதனை வெறும் ஆரூடங்கள் என்ன செய்துவிட முடியும்?

1976ஆம் ஆண்டு வோக்மேன் சந்தைக்கு வந்தது. உலகம் முழுவதும் இளைஞர்களின் மனங்களை அது கொள்ளை கொண்டது. பிறகு மொரிட்டாவின் சாம்ராஜ்யம் அசுர வேகத்தில் வளரத் தொடங்கியது. தொலைக்காட்சி, வீடியோ ரெக்கோர்டர் எனப் பல மின்னியல் பொருட்களை உருவாக்கி உலகுக்கு அறிமுகம் செய்தது சோனி நிறுவனம். மொரிட்டாவின் தலைமையில் 1970ஆம் ஆண்டில் நியூயோர்க் பங்குச் சந்தையில் இடம்பெற்ற முதல் ஜப்பானிய நிறுவனம் என்ற புகழைப் பெற்றது சோனி. அதன்பிறகு சோனி நிறுவனம் பல்வேறு தொழில்களில் கால்பதித்தது. 2000ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி அமெரிக்கர்கள் கொக்கோ-கோலாவை விட சோனியைத்தான் தங்களுக்கு மிகப் பிடித்த சின்னமாகத் தேர்ந்தெடுத்தனர். அமெரிக்காவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் *SONY* என்ற பெயர் பிரபலமானது.



நேரத்தை பொன்போல் கருதி கடுமையாக உழைத்த மொரிட்டா எப்போதுமே சுறுசுறுப்பாக இருப்பார். அவருக்கு 60 வயதானபோது நீர்ச்சறுக்கு, ஸ்கூபா முக்குளிப்பு, டென்னிஸ் ஆகிய விளையாட்டுகளைக் கற்றுக்கொண்டார். ஓவியத்தையும் இசையையும் அதிகம் நேசித்தார். மொரிட்டாவுக்கு 72 வயதானபோது ஒருநாள் காலை டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தபோது வாதம் ஏற்பட்டது. உடல்நலம் பாதிக்கப்பட்ட அவர் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் விலகினார்.


மொரிட்டாவுக்கு அடுத்து சோனி நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர் யார் தெரியுமா? மொரிட்டாவின் நிறுவனம் முதன்முதலில் தயாரித்து வெளியிட்ட டேப் ரெக்கோர்டர் தரம் குறைவாக உள்ளது என்று குறைகூறி கடிதம் எழுதிய நொரியோ ஓஹா என்பவர். குறை கண்டவரிடமே நிறை கண்டு அவரை உடனடியாக தன் நிறுவனத்தில் சேர்த்து கொண்டு பாதுகாத்து வளர்த்து பின்னர் அவரிடமே தன் தலைமை நிறுவனப் பொறுப்பை ஒப்படைத்தார் தொலைநோக்கு கொண்ட மொரிட்டா.

தரம்தான் நிரந்தரம் என்பதை உலகுக்கு உணர்த்திய அக்யோ மொரிட்டா 1999ஆம் ஆண்டு அக்டோபர் 3ந்தேதி தனது 78 ஆவது வயதில் டோக்கியோவில் காலமானார். அவர் இறந்தபோது ஃபொக்ஸ் சஞ்சிகையில் உலகப் பணக்காரர் பட்டியலில் அவருக்கு 386ஆவது இடம் கிடைத்தது. அப்போது அவரின் சொத்தின் மதிப்பு 1300 மில்லியன் டொலர். டைம் சஞ்சிகை வெளியிட்ட 20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த தொழில் முனைவரின் பட்டியலில் அமெரிக்கர் அல்லாத ஒரே ஒருவர் அக்யோ மொரிட்டாதான்.

உலகமய தொழில்துறைக்கு அவர் ஆற்றிய பங்கை அங்கீகரிக்கும் வகையில் இங்கிலாந்தின் மிக உயரிய ஆல்பர்ட் விருது, ஃப்ரான்ஸின் ஆக உயரிய லெஜெண்ட் ஒஃப் ஹொனர் விருது, ஜப்பானிய மன்னரின் ஃபர்ஸ்ட் க்ளாஸ் ஓர்டர் ஆகிய விருதுகளும் இன்னும் பல எண்ணிலடங்கா விருதுகளும் அவரை நாடி வந்திருக்கின்றன.


1966ஆம் ஆண்டில் அவர் *Never & mind School Records* என்ற புகழ்பெற்ற நூலையும் எழுதினார். அதில் வாழ்க்கையிலும் தொழிலிலும் வெற்றிபெற பள்ளியில் வாங்கும் மதிப்பெண்கள் முக்கியம் அல்ல என்று வாதிடுகிறார். அதாவது ஆர்வம்தான் படைப்புத் திறனுக்கான திறவுகோல் என்பது மொரிட்டா நமக்கு விட்டு சென்றிருக்கும் உன்னதமான பொன்மொழி. எதையுமே ஆர்வத்துடனும் நம்பிக்கையுடனும் தொலைநோக்குடனும் செய்ததால்தான் அக்யோ மொரிட்டாவுக்கு அந்த வானம் வசப்பட்டது.





வெளியே வருவதற்கு வழியைத் தெரிந்து கொண்ட பிறகு, உள்ளே நுழைய முயற்சி செய். - ஆவ்பரி

கோவா, உத்தரகண்ட், ராஜஸ்தானுக்கு புதிய கவர்னர்கள் நியமனம்



கோவா, ராஜஸ்தான் மற்றும் உத்தர கண்ட் ஆகிய மாநிலங்களுக்கு புதிய கவர்னர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். காங் கிரஸ் கட்சியின் உயர்மட்டக்குழு கூட்டம் நேற்று முன்தினம் டில்லியில் நடந்தது.

பிரதமர் மன்மோகன் சிங், கட்சித் தலைவர் சோனியா உள்ளிட்டோர் பங் கேற்ற இந்தக் கூட்டத்தில், நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் மற்றும் மாநில கவர்னர்கள் நியமனம் குறித்து விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த விவாதத்தின் அடிப்படையில், சிலரை கவர்னர்களாக நியமிக்க முடிவு செய்யப்பட்டது.

அதன் விவரம் வருமாறு: சிறப்பு பாதுகாப்பு படையின் முன்னாள் தலை வர் வாஞ்சு, கோவா மாநில கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்தியப் பிரதேச முன்னாள் அமைச் சரும், முன்னாள் எம்.பி.,யுமான அஜிஸ் குரேஷி, உத்தரகண்ட் மாநில கவர்னராக வும், உத்தரகண்ட் கவர்னராக உள்ள மார்க் கரேட் ஆல்வா, ராஜஸ்தான் கவர்னராக வும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திரா மற்றும் மகாராஷ்டிராவில் முறையே கவர்னர்களாக உள்ள நரசிம் மன் மற்றும் சங்கரநாராயணன் ஆகியோர் அம்மாநிலங்களிலேயே தொடர்ந்து கவர்னர்களாகப் பதவி வகிப்பர்.

இத்தகவலை ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒடிசா எம்.எல்.ஏ பதவி ராஜினாமாவா?



பதவியை ராஜினாமா செய்வது பற்றிய கேள்வி களுக்கு மாவோயிஸ்டுகள் வெளியிடும் ஆடியோ சி.டியில் பதில் கிடைக்கும் என்று ஒடிசா எம்.எல்.ஏ ஜினா ஹிகாகா கூறினார். ஒடிசாவில் மாவோயிஸ்டு கள் பிடியில் ஒரு மாதமாக பணய கைதியாக இருந்த பிஜு ஜனதா தள எம்.எல்.ஏ ஜினா ஹிகாகா கடந்த 24ம் தேதி விடுதலை செய்யப் பட்டார்.

அப்போது, 15 நாளில் எம்.எல்.ஏ பதவி யை ராஜினாமா செய்ய வேண்டும் என்று மாவோயிஸ்டுகள் நிபந்தனை விதித்திருந் தனர். மாவோயிஸ்ட் நிபந்தனைபடி ராஜி னாமா செய்வீர்களா என்று நிருபர்கள் கேட்ட போதெல்லாம் பதிலளிக்காமல் ஜினா ஹிகாகா மழுப்பி வந்தார். இந்த நிலையில், நேற்று கோராபுட்டில் நிருபர் களுக்கு நேற்று பேட்டி அளித்த ஜினா ஹிகாகா கூறியதாவது:

எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய் வது தொடர்பாக மாவோயிஸ்டுகள் விரை வில் ஆடியோ சி.டி ஒன்றை வெளியிடு வார்கள். அதில், ராஜினாமா தொடர்பான குழப்பங்களுக்கு விடை கிடைக்கும். எல்லா விஷயமும் சி.டி வெளியானதும் தெளிவாகிவிடும். அடுத்த கட்ட நடவடிக் கை குறித்து தொகுதி மக்களுடன் ஆலோ சனை நடத்தி வருகிறேன்.


விரைவில், தலைநகர் புவனேஸ் வருக்கு செல்ல உள்ளேன். அங்கு அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி அறிவிப்பேன். இவ்வாறு ஜினா ஹிகாகா கூறினார்.

இந்தியச் செய்திகள்

ஜெகன் மோகன் ரெட்டி
சொத்துக்களை முடக்க சிபிஐ முடிவு

சொத்துக் குவிப்பு வழக்கில் சிக்கி யுள்ள ஜெகன் மோகன் ரெட்டியின் சொத் துக்களை விசாரணை முடியும் வரை முடக்கி வைக்க சிபிஐ திட்டமிட்டுள்ளது. இதற்கான அனுமதி வழங்க ஆந்திர அரசும் ஒப்புக்கொண்டுள்ளது.

ஆந்திர ஐகோர்ட் உத்தரவுப்படி கடப்பா தொகுதி எம்பி ஜெகன் மோகன் ரெட்டி மீது சிபிஐ சொத்து குவிப்பு வழக்கு பதிவு செய்துள்ளது. இந்த வழக் கில் ஜெகனின் நெருங்கிய கூட்டாளியும், அவரது நிறுவனங்களின் ஆடிட்டருமான விஜய்சாய் ரெட்டி கைது செய்யப்பட்டுள் ளார். இவருக்கு சிபிஐ கோர்ட் வழங்கிய ஜாமீனை கடந்த வாரம் ஐகோர்ட் ரத்து செய்தது. இந்த வழக்கில் இதுவரை இரண்டு குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. முதல் குற்றப்பத் திரிகையில் முதல் குற்றவாளியாக ஜெகன் மோகன் ரெட்டி சேர்க்கப்பட்டுள்ளார். 2-வது குற்றப்பத்திரிகையில் ஜெகன் மீது மோசடி குற்றச்சாட்டுகள் வைக்கப்பட் டுள்ளன. இன்னும் 5 குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்ய சிபிஐ திட்டமிட்டுள்ளது.



இதற்கிடையில் ஜெகன் மோகன் ரெட்டி ஊழலில் சம்பாதித்ததாக கூறப்ப டும் சொத்துக்களை முடக்க சிபிஐ திட்ட மிட்டுள்ளது. குறிப்பாக அவருக்கு சொந்த மான ஜகதி குருப் ஆப் பப்ளிகேஷன்ஸ் நிறுவன சொத்துக்களை முடக்கி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர் பாக ஆந்திர அரசுடன் சிபிஐ அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். சிபிஐயின் திட் டத்துக்கு ஆந்திர அரசு பச்சைக்கொடி காட்டிவிட்டதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக கோர்ட்டின் அனுமதி பெற மனு தயார் செய்யப்பட்டு வருவதாக சிபிஐ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆந்திராவில் 18 சட்டமன்ற தொகுதி களுக்கு ஜூன் 12ம் தேதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் அட்டவணை அறிவிப்புக்கு முன்னதாக சொத்துக்களை முடக்கி வைக் கும் பணி முடிந்துவிடும் என சிபிஐ வட் டாரங்கள் தெரிவித்தன.

பா.ஜ.க மூத்த தலைவர் பங்காருவுக்கு 4 வருடம் சிறை தண்டனை



லஞ்சம் வாங்கிய வழக்கில் பா.ஜ.க மூத்த தலைவர் பங்காரு லட்சுமணனுக்கு 4 வருட சிறை தண்டனை மற்றும் ரூ.1 லட்சம் அபராதம் விதித்து டெல்லி புல னாய்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2001ம் ஆண்டு பா.ஜ.க சார்பில் மத்திய அமைச்சராக பங்காரு லட்சுமண் (வயது 72) பதவியில் இருந்தார்.

அப்போது டெகல்ஹா என்ற ஊடக இணையதளத்தைச் சேர்ந்த சிலர், தங்களை பிரிட்டனின் ஆயுதத் தயாரிப்பு நிறுவனமான, 'வெஸ்ட் என்ட் இன்டர்நே ஷனல்' நிறுவனத்தின் பிரதிநிதிகள் எனக் கூறி பங்காரு லட்சுமணை அணுகினர்.


டெல்லியில் உள்ள பா.ஜ.க தலைமை அலுவலகத்தில், பங்காருவை சந்தித்த இவர்கள், எங்கள் நிறுவனம் அதிநவீன பைனாக்குலர்களை தயாரிக்கிறது.

இவற்றை இந்திய இராணுவப் பயன் பாட்டுக்கு வாங்கும்படி, ராணுவ அமைச் சகத்துக்கு பரிந்துரைக்க வேண்டும் என்று தெரிவித்தனர். இதை நம்பிய பங்காரு லட்சுமண், இதற்காக அவர்களிடம் இருந்து ரூ.1 லட்சம் லஞ்சமாக வாங்கி னார். இந்த சம்பவம் கமெராவில் பதிவாக அதை டெஹல்கா வெளியிட்டது.

இந்த விவகாரம் அப்போது நாடாளு மன்றத்தில் எரிமலை போல் வெடித்தன. இதையடுத்து பங்காருவை லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு பிரிவின் கீழ் மத்திய புலனாய்வுத்துறை கைது செய்து செய்து விசாரணை நடத்தி வழக்கை பதிவும் செய்தது. இந்த வழக்கில் டெல்லி புலனாய்வு நீதிமன்றம் நேற்று பங்காரு லட்சுமணனை குற்றவாளி என தீர்ப்பளித் தது. இந்நிலையில் நீதிபதி சன்வால் ஷீட் ஆரோரா இவருக்கான தண்டனை விவரத் தை 28.04.2012 மதியம் 2.30 மணிக்கு அறிவித்தார்.

பங்காரு லட்சுமணனுக்கு 4 ஆண்டு சிறை தண்டனையும் ஒரு இலட்சம் ரூபாய் அபராதமும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இவ்விவகாரம் குறித்து டெஹல்கா நிருபர் கூறியதாவது: யாரையும் களங்கப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இதை நாங்கள் செய்ய வில்லை. சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ் தில் இருப்பவர்களின் நிலை பற்றி மக் களுக்கு எடுத்தக்காட்ட விரும்பினோம். ஆகவே இப்படிப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டோம் என்று தெரிவித்துள்ளார்.

சச்சினுக்கு எம்.பி. பதவி: காங்கிரஸ் மீது பால் தாக்கரே பாய்ச்சல்



சத்தீஸ்கர் மாநிலம், ராய்ப்பூரிலி ருந்து வெளிவரும் 'கார்ட்டூன் வாச்' என்னும் இதழ் சார்பில் விருது வழங்கும் விழா மும்பையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிவசேனா தலைவர் பால் தாக்கரேவுக்கு வாழ்நாள் சாதனை யாளர் விருது வழங்கப்பட்டது.


விருது பெற்ற பின்னர் பேசிய பால்தாக்கரே, ராஜ்ய சபா எம்.பி. பதவிக்கு கிரிக்கெட் வீரர் சச்சின் தெண்டுல்கர் பெயரை பரிந்துரை செய்தது காங்கிரஸ் கட்சியின் 'இழி வான நாடகம்' எனவும், இதுதான் உண்மையான 'டர்ட்டி பிக்சர்' எனவும் விமர்சனம் செய்துள்ளார்.

மேலும், சிவசேனா ஆதரவு இதழான 'சாமனா'வில் ராஜ்ய சபா எம்.பி. பதவிக்கு சச்சின் பெயரை காங்கிரஸ் கட்சி பரிந்துரை செய்த தில் நிச்சயம் ஏதோ உள்நோக்கம் இருக்க வேண்டும் என பால் தாக் கரே நேற்று கருத்து கூறியிருந்தார்.

சச்சினை 'பாரத ரத்னா சச்சின்' என அழைப்பதையே அவரது கோடிக்க ணக்கான ரசிகர்கள் விரும்புவார்கள் என வும், காங்கிரசின் இந்த நாடகத்தால் இப் போது அவர் வெறும் 'சச்சின் எம்.பி' ஆகிவிட்டார் எனவும் தாக்கரே கூறி யுள்ளார்.

மகாராஷ்டிரா, கர்நாடகா, சைபர் கிரைமில் முன்னிலை: கபில்சிபல்

நாட்டிலேயே மகாராஷ்டிரா, கர் நாடகா மாநிலங்களில் தான் சைபர் கிரைம் குற்றங்கள் அதிகரித்து காணப் படுவதாக தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் கபில்சிபல் தெரிவித்துள்ளார்.



அனைத்து துறைகளுக்கும் தேவை யான தகவல்களை பெறுவதற்கு தக வல்தொழில் நுட்படம் வளர்ச்சியடைந் துள்ள நிலையில் அதற்கு எதிர்மறையான குற்ற நடவடிக்கைகளும் அதிகரித்துள் ளது. சைபர் கிரைம் என்றழைக்கப்படும் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் நாட்டிலேயே மகாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களில் முதன்மையாக திகழ்கிறது . மகாராஷ்டிராவில் சைபர் கிரைம் வழக் குகளின் எண்ணிக்கை 246ஆகும் அதே போல் கர்நாடகத்தில் இதன் எண்ணிக்கை 176 ஆகும் என தெரிவித்துள்ளார்.

வளரும் தொழில்நுட்பம்



சூரிய சக்தியில் இயங்கும் ஓட்டோ

சூழல் மாசடைதல் என்பது உலகம் எதிர்நோக்கியிருக்கின்ற மிகப்பெரிய பிரச்சினை. அதிகரித்து வரும் சனத் தொகை, இதனால் அதிகரித்து செல் கின்ற வாகனங்கள் என பல பிரச்சினை களுக்கு உலகம் முகம்கொடுத்து வரு கிறது. எதிர்பார்க்காதளவு உற்பத்தியாகி யிருக்கும் வாகனங்களினால் வெளி யிடப்படுகின்ற புகை - சூழலை மாசு படுத்தி வருகிறது. இதனை எவ்வாறு தடுப்பதென்பது பற்றி விஞ்ஞானிகள் தலையைப் பிய்த்துக்கொண்டு ஆராய்ச்சி களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்நிலையில்தான் இந்தியாவில் புதுடெல்லியில் சூழலுக்கு மாசு ஏற்படு த்தாத, சூரிய சக்தியில் இயங்கக்கூடிய ஓட்டோ ரிக்ஷாவை கண்டுபிடித்திருக் கிறார்கள். இலங்கை, இந்தியாவைப் பொறுத்தமட்டில் ஓட்டோ வண்டிகளி னால் வெளியிடப்படுகின்ற புகைகள் சூழலை அதிகளவாக மாசுபடுத்தி வரு கின்றன. இப்படியான நிலையில் சூழலை மாசுபடுத்தாத ஓட்டோ வண்டி யின் கண்டுபிடிப்பு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது.

இந்தியாவின் தொழிற்றுறை மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி மத்திய நிலையத் துடன் இணைந்து மத்திய இயந்திர பொறியியல் ஆராய்ச்சி நிறுவகம் இந்த அரியவகை ஓட்டோவினை கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த வடிவத்திற்கு 'சொலெக்ஷோவ்ஸ்' என பெயரிட்டி ருக்கிறார்கள். முச்சக்கர வண்களை ஆங்கிலத்தில் 'ட்ரைஷோ' என அழைப் பார்கள். அதனைப்போலவே சூரிய சக்தியில் இயங்குகின்ற முச்சக்கர வண்டி என்பதால் 'சொலெக்ஷோவ்ஸ்' என பெயரிட்டுள்ளார்கள்.

இக்கண்டுபிடிப்புக்கு மத்திய அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது. முதற்கட்ட மாக டெல்லியின் குறிப்பிட்ட சில நகரங்களில் 1000 ஓட்டோக்களை அறி முகம் செய்யவிருக்கிறார்கள். ஆராய்ச்சி யின் இறுதிக்கட்டத்திலிருக்கும் 'சொலெக்ஷோவ்ஸ்' எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து பாவனைக்கு வரவிருக் கிறது.

மணித்தியாலத்திற்கு 25 கிலோமீற்றர் என்ற வேகத்தில் செல்லக்கூடிய இந்த முச்சக்கர வண்டிகள் மூன்று வடிவங் களில் வெளிவரவிருக்கின்றன. இந்திய ரூபாய்களில் 45 ஆயிரம், 75 ஆயிரம் மற்றும் 85 ஆயிரம் ரூபாய் பெறுமதி களில் இந்த ஓட்டோக்கள் தயாரிக்கப் பட்டிருக்கின்றன.

★★★★★★★★★★★★★★★★★★★★

திரையில்லா கடிகாரம்

கடிகாரம் என்பது அத்தியாவசிய மானதொன்று. அவசரமான உலகின் வேகத்தை அளவிடுகின்ற அற்புத கருவி யாக கடிகாரம் விளங்குகிறது என்றால் அது மிகையல்ல. தற்போது அதன் உபயோகத்திற்காக மட்டுமன்றி, அதன் வடிவத்திற்காகவும் கடிகாரங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

ஜப்பானின் 'டோக்கியோ பிளாஸ்' என்னும் கடிகார வடிவமைப்பு நிறுவனம் அண்மையில் புதியவகை கடிகாரம் ஒன்றினை அறிமுகப்படுத்தி யிருக்கிறது. பார்ப்பதற்கு கைச்சங்கிலி போலிருக்கும். கையினை அழகுபடுத்து கின்ற கைச்சங்கிலி என்றே பார்ப்பவர் கள் நினைப்பார்கள். ஆனால் அது கடிகாரமாகவும் செயற்படும். அந்த கைச்சங்கிலியில் இரண்டு பொத்தான் கள் இருக்கின்றன. அதில் ஒரு பொத் தானை ஒருதடவை அழுத்தினால் நேரத் தினை காட்டும். இன்னொருமுறை அழுத்தினால் மாதத்தினையும் திகதியினையும் காண்பிக்கும்.

சங்கிலிக் கோர்வையின் இடையில் பொருத்தப்பட்டிருக்கின்ற சிறிய ஃஊ திரைகளிலேயே இந்த நேரம் தென்படும் விதத்தில் வடிவமைத்திருக்கிறார்கள்.

130 அமெரிக்க டொலர்கள் (சுமார் 17 ஆயிரம் ரூபாய்) பெறுமதியில் இந்த கடிகாரங்கள் சந்தைப்படுத்தப்பட்டிருக் கின்றன.



★★★★★★★★★★★★★

பறக்கும் மோட்டார் சைக்கிள்

தினமும் வேலைக்குச் செல்பவர்கள் வாகன நெரிசலில் சிக்கி வாழ்க்கை வெறுத்துப்போய் மீண்டும் வீடு திரும்புவது வழமை யாகிவிட்டது. வெயிலில் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது மேலும் வாழ்க்கை வெறுக்கும். பறந்து போகக்கூடிய மோட்டார் சைக் கிள் இருந்தால் எப்படி இருக்குமென அடிக்கடி தோனுவதுண்டு. அந்த கனவு இப்பொழுது நிஜமாகியிருக்கிறது.

அவுஸ்திரேலியாவை சேர்ந்த கிறிஸ் மல்லோய் என்னும் பொறியியலாளர் பறக்கும் மோட்டார் சைக்கிள் ஒன்றினை உருவாக்கியிருக்கிறார். ஹூவர்கிறாப் படகின் தொழில்நுட்பத்தை பயன்படுத் தியே இந்த ஹூவர் மோட்டார் சைக் கிளை அவர் உருவாக்கியிருக்கிறார்.

'ஸ்டார் வோர்' திரைப்படங்களில் அதிக நாட்டம்கொண்ட கிறிஸ், அதில் வருகின்ற பறக்கும் மோட்டார் சைக்கிள் போன்றதொன்னை நிஜத்தில் உருவாக்க விரும்பினார். அந்த நினைப்பில் உருவா கியதுதான் இந்த பறக்கும் மோட்டார் சைக்கிள். '

இந்த கண்டுபிடிப்பு பற்றி கிறிஸ் குறிப்பிடுகையில்... 'இந்த ஹூவர் மோட்டார் சைக்கிளை 10 ஆயிரம் அடி உயரத்தில் மணிக்கு சுமார் 270 கிலோ மீற்றர்கள் என்ற வேகத்தில் செலுத்த முடியும். என்னுடைய கண்டுபிடிப்பான இந்த பறக்கும் மோட்டார் சைக்கிள் வெறும் 110 கிலோகிறாம் நிறையி னையே கொண்டதுடன் 1170 சிசி இயந்திர வலுவினையும் கொண்டது..' என்று குறிப்பிட்டார்.

கிறிஸின் இந்த அற்புத கண்டுபிடிப்பு க்கு முதலீடு செய்ய யாராவது முன் வருவார்களேயானால் தன்னால் மேலும் அரிய படைப்புகளை வழங்க முடியு மெனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த பறக்கும் மோட்டர் சைக்கிள் சுமார் 40 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் (சுமார் 43 லட்சத்தி 80 ஆயிரம் ரூபாய்) பெறுமதி வாய்ந்தமை என கணிக்கப்பட்டிருக் கிறது.



★★★★★★★★★★★★★★★★★★★★

உணவுப்பொருட்கள் மூலம் எரிபொருள்

பேஸ்ரிகள், பீஸ் போன்ற உணவுப் பொருட்களை பயன்படுத்தி வாகனங் களுக்கான எரிபொருளை தயாரிப்பதற்கு விஞ்ஞானிகள் தீர்மானித்துள்ளனர்.

பிரிட்டனின் லின்கன்ஷயர் பிராந்தியத்திலுள்ள கிறீன் கிறே நிறுவனத்தின் விஞ்ஞானிகளே இத்திட் டத்தை அறிவித்துள்ளனர்.

வீணாக்கப்படும் உணவுப் பொருட் களைக் கொண்டு உயிரியல் எரிபொருட்களை தயாரிக்கவுள்ளதாக இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

பொதுவாக குப்பைக் கிடங்குகளில் கொட்டப்படும் மீதமாகிப்போன மற்றும் பழுதடைந்த பேஸ்ரிகள், பொரி யல் வகைகள், பீஸ் போன்றவற்றின் எண்ணெயை பயன்படுத்தி தயாரிக்கப் படும் உணவுப்பொருட்கள் லின்கன்ஷ யரிலுள்ள தொழிற்சாலையொன்றுக்கு கொண்டு செல்லப்பட்டு எரிபொருள் தயாரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த உணவுப் பொருட்களிலுள்ள சமையல் எண்ணெயை பிரித்தெடுத்து, அவற்றை மேலும் பதப்படுத்தி டீசலு டன் கலந்து வாகனங்களின் இயந்திரங் களை இயக்குவதற்கு பயன்படுத்த முடி யும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ள னர்.

இத்திட்டத்திற்காக 50 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் முதலீடு செய்யப் பட்டுள்ளது.



★★★★★★★★★★★★★★★★★★★★

உலகின் மிகச்சிறிய கமெரா

விரல்முனை அளவிலான, உலகில் மிகவும் சிறிய டிஜிற்றல் கமெரா ஒன்றை அமெரிக்காவின் மாச்சர் ஷ்லெம்மர் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. முற்று முழுதாக இயங்கும் உலகின் மிகச் சிறிய டிஜிற்றல் கமெரா இது.

இக்குட்டி கமெரா ஒரு அங்குலத்தை விட சற்றே நீளமானது. நிறை அரை 14 கிராம்தான். விரலால் கமெராவை கிளிக் செய்தால் சாதாரண அளவிலான படத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மாச்சர் ஷ்லெம்மர் நிறுவனத்தின் முகாமையாளர் பிரெட் பேர்ன்ஸ் 'இது குறித்து தெரிவிக்கையில் 'இது மாபிளை விட சற்றே பெரிதான, உலகின் மிகச் சிறிய கமெராவாக உள்ள போதிலும் பெரிய கமெராக்கள் மூலம் பதிவு செய்யும் காட்சிகளின் தரத்திலேயே புகைப்படங்களையும் வீடியோக்களை யும் எடுக்கக் கூடியது' எனத் தெரிவித் தார்.



மட்டக்களப்பு தமிழகத்தின் முதுபெரும் அறிஞர் கலாநிதி வித்துவான் சா.இ.கமலநாதன் காலமானார்!

கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களில் ஒருவரான கலாநிதி வித்துவான் சா.இ.கமலநாதன் காலமானார். மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற கமலநாதன் அவர்கள் தமிழ் துறையில் வித்துவான் பட்டம் பெற்றவராவார்.

இவர் தமிழ் இலக்கிய ஆய்வுத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பிற்காக கிழக்கு பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்திருந்தது. மட்டக்களப்பின் பூர்வீக வரலாற்றை தேடும் பணியில் இறங்கிய கமலநாதன் அவர்கள் பழைய ஏட்டுச்சுவடிகளை தேடி அதனை அச்சுவடிவில் கொண்டுவந்த பெருமையை பெற்றார். ஓலைச்சுவடிகளில் இருந்த வரலாற்று தடயங்களை தொகுக்கும் மிகப்பெரிய பணியில் இறங்கிய வித்துவான் கமலநாதன் அவர்களும் அவரது துணைவியார் கமலா கமலநாதன் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக உருவானதே மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்ற நூலாகும்.

இந்த நூலை தொகுப்பதற்கு டி.சிவராம் அவர்களும் பெரிதும் உதவினார். மட்டக்களப்பில் மகாவித்துவான் எவ்.எக்ஸ்.சி.நடராசா அவர்களுக்கு பின்னர் இருந்த நடமாடும் தமிழ் நூலகம் கமலநாதன் அவர்களாகும். ஆதனால்தான் கிழக்கு பல்கலைக்கழகம் அந்த வித்துவான்கள் இருவருக்கும் இலக்கிய கலாநிதி பட்டங்களை வழங்கி கௌரவித்திருந்தது.

மட்டக்களப்பு வரலாற்றைப்பற்றி பேசுவோர் எஸ்.ஓ.கனகரத்தினம் எழுதிய *The Monograph of Batticaloa* என்ற ஆங்கில நூலையும் அவரது மருமகனான எவ்.எக்ஸ்.சி. நடராசா அவர்களின் மட்டக்களப்பு மான்மியத்தையுமே எடுத்துக்கொள்வர். அதன் பின்னர் சரித்திரத்தை ஆதாரங்களுடன் பேசும் நூலாக வெளிவந்ததுதான் சா.கமலநாதன், கமலா கமலநாதன் ஆகியோர் ஏட்டுச் சுவடிகளிலிருந்து தொகுத்த மட்டக்களப்பின் பூர்வ சரித்திரமாகும்.

இந்த நூலுக்கு வரலாற்று அறிமுக குறிப்புரை எழுதிய டி.சிவராம் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

எமது மண்ணின் வரலாற்றை புரிந்து கொள்வதற்கு கமலநாதன் அவர்களும், அவரின் துணைவியார் கமலா கமலநாதன் அவர்களும் எடுத்துக்கொண்ட அரிய முயற்சி ஈழத்தமிழர்களுக்கு இன்றியமையாத கொடையாகும் என சிவராம் அந்த நூலில் தெரிவித்திருக்கிறார்.

கலாநிதி வித்துவான் சா.இ.கமலநாதன் என்ற தமிழ் கடல் பற்றி அவரின் கல்விப்பணி, இலக்கிய பணி, ஆராய்ச்சி பணி, என அவர் பதித்த தடங்கள் பல. அவர் தொகுத்த ஏட்டுச்சுவடிகளின் வரலாற்று தொகுப்பை முதல் முதலில் விடிவானம் பத்திரிகையில் தொடராக எழுதி வந்தார். அதற்காக அவர் வாராவாரம் எமது அலுவலகத்திற்கு வந்து எம்முடன் சில மணி நேரம் பேசி விட்டு செல்லும் அந்த நினைவுகள் மறக்க முடியாதவை. தமிழ் இலக்கண இலக்கிய விடயங்களில் சந்தேகம் ஏற்படும் போதெல்லாம் நாம் நாடிச்செல்லும் இருவர் மட்டக்களப்பில் இருந்தனர். ஒருவர் மட்டக்களப்பு மத்திய வீதியில் இருந்த வித்துவான் எவ்.எக்ஸ்.சி.நடராசா, மற்றவர் மட்டக்களப்பு புகையிரத நிலைய வீதியில் இருந்த சா.இ.கமலநாதன். அந்த இருவரையும் இன்று மட்டக்களப்பு மண் இழந்து விட்டது.

கமலநாதன் ஐயாவின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினர், நண்பர்கள், அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

மட்டக்களப்பு தமிழகம் இன்று தன்னுடைய மற்றொரு அருந்தவ புதல்வனை இழந்து நிற்கிறது.

எதிர்ப்பு அரசியலின் எதிர்காலம்

எழுத்தாளர் யமுனா ராஜேந்திரன் அவர்களின் உரையும், கலந்துரையாடலும்


சோவியத் யூனியன் வீழ்ந்த 1989 ஆம் ஆண்டு, நியூயார்க் இரட்டைக் கோபுரம் சரிந்த 2001 ஆம் ஆண்டு என்பன நம் காலத்தின் இரு முக்கியமான நிகழ்வுகள். விடுதலைப் போராட்டங்களின் ஆதர்ஷமான 'இலத்தீனமெரிக்காவில் ஆயுத விடுதலைப் போராட்டம் என்பது கடந்த காலம், இனி அதற்கு இங்கு இடமில்லை' எனப் பிடல் காஸ்ட்ரோவும், வெனிசுலா ஜனாதிபதி சாவோசும் 2007 ஆம் ஆண்டு அறிவித்தார்கள்.

இன்று நாம் பின் சோவியத், பின்-செப்டம்பர், பின்-புரட்சிகர உலகம் குறித்துத்தான் பேச வேண்டியிருக்கிறது. ஈழப்போராட்டம் உக்கிரமடைந்த போது காணப்பட்ட எழுதுபவர்களின் அரசியலும் கருத்தியலும் நாற்பது ஆண்டுகளின் பின் தலைகீழாக மாறியிருக்கிறது. இந்தச் சூழலில் 'எதிர்ப்பு அரசியலின் எதிர்காலம்' என்பது எவ்வாறாக இருக்கப் போகிறது? அதனது இலக்கும், வழிமுறையும், வடிவங்களும் எத்தகையதாக இருக்கப் போகிறது?

இடம் - சண் சிற்றி பிளாசாவில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் ஆலய மண்டபம் *(2761 Markham Road)*, நாள்: 13.05.2012 ஞாயிறு, மாலை : 4.00 மணி.

தொடர்புகளுக்கு: *(647) 237-3619*

குறுக்கெழுத்து போட்டி: 220



இடமிருந்து வலம்

1. தென்மராட்சி பிரதேசத்தில் புகழ்பெற்ற அம்மன் கோவில் அமைந்துள்ள இடம் 6. மிருகங்களில் ஒட்டியிருந்து இரத்தத்தை குடித்து வாழும் ஒரு சிறிய உயிரினம் (திரும்பியுள்ளது) 7. மீன் பிடிப்பதற்கு பயன்படும் ஓர் உபகரணம் 9. ... கறுக்கிறது மழை வரப்பார்க்கிது வீசியடிக்குது காற்று 10. (நெய்) ... சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று 11. கள்ளச்சாராயம் (குழம்பியுள்ளது) 13. ... நேரப் பூங்குயில் கவிதை பாடப் போகுது கலைந்து போகும் மேகங்கள் கவனமாகக் கேட்குது (குழம்பியுள்ளது) 14. ... வந்திடப் பத்தும் பறந்து போகும் 16. சிறுவர் முதல் பெரியோர் வரை எந்த நேரத்திலும் உண்ணக்கூடிய சுவையானதும் சத்துள்ளதுமான பழம் (குழம்பியுள்ளது) 18. மக்கள் மட்டும் செல்லக்கூடிய ஒடுங்கிய வாசல் (குழம்பியுள்ளது) 19. ஆசை ... அறியாது (குழம்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

1. ஐப்பெருங்காப்பியங்களில் ஒன்று (சீழ்த்தலைச் சாத்தனார் இயற்றியது) 2. பொருட்காட்சி (குழம்பியுள்ளது) 3. பல்லி இனப் பிராணி (சிலர் இதை உண்பார்கள்) (குழம்பியுள்ளது) 4. வானம்/பறவை/காற்று/திசை என்று பொருள்படும் 5. வெறும்வாயை மெல்லுபவனுக்கு ... கிடைத்தமாதிரி (தலைகீழாகவுள்ளது) 8. வெட்டி வேருவாசம் . . புள்ளை நேசம் (குழம்பியுள்ளது) 12. இதை விரும்பி உண்ணாத சிறுவர்கள் இல்லையென்றே சொல்லலாம் (குழம்பியுள்ளது) 15. சிறு பயறை இப்படியும் அழைப்பார்கள் (தலைகீழாகவுள்ளது) 16. மரத்தாண் (குழம்பியுள்ளது) 17. ஆபரணம் செய்யப் பயன்படும் ஓர் உலோகம் (தலைகீழாகவுள்ளது) 18. ஆண் ஆடு/ஆண் எருமை

- மார்க்கம் சந்திரன்

அனுப்ப வேண்டிய முகவரி

குறுக்கெழுத்துப் போட்டி, ஆசிரியர் - கதிரொளி

2353 Eglinton Ave - East, (Low Level), Scarborough, On. M1K 2M5

என் உயிர் நீதானே...

கனகரத்தினம் குழந்தைவேலின்...
என் உயிர் நீதானே!
சென்ற வாரத் தொடர்ச்சி

ஏற்கனவே கதைத்ததின்படி ரதீசும் ரன்ஜிதாவும் *Family Friend* வீட்டுக்கு போகின்றனர். *Calling Bell* யை சுழற்றுகின்றாள் ரன்ஜிதா. *Family Friend* கதவைத் திறக்கின்றார்.

ஹலோ *Good Luck* உன்னை கண்டதிலே ரொம்ப மகிழ்ச்சி அடைகின்றேன். வாங்க... தம்பி... வாங்க *take your seat please.*

Thanking you என்றவாறு கதிரையில் அமர்கின்றான் ரதீஸ். இருவருக்கும் இவரின் மனைவி தேனீர் கொண்டு கொடுக்கின்றாள். *Thank you* என்றவாறு குடிக்கின்றனர்.

Mr. உங்களுடைய பெயர் என்ன?

எனது பெயர் ரதீஸ்

ரதீஸ் உங்களைப் பற்றி எனக்கு எல்லா விபரங்களையும் சொல்லி இருக்கின்றாள். உங்களின் முகத்தைப் பார்த்தால் இவளின் பெற்றோர்கள் விருமபும் *I mean* ரன்ஜிதாவை திருமணஞ் செய்து கொற்வதற்கு தகுந்தவர் மாதிரி இருக்கின்றீர்கள். ஏற்கனவே இவளது திருமணப் பேச்சுக்கள் பேசப்பட்டு மாப்பிள்ளையின் செய்கைகள் கூடாத தினால் திருமணம் குழம்பிவிட்டது.

இத்திருமணத்தை ரன்ஜிதாவின் *Daddy* தான் ஒழுங்கு செய்திருந்தார். இந்த விஷயத்தில் பிரச்சினை ஏற்பட்டிருந்ததால் இனிமேல் ரன்ஜிதாவின் வாழ்க்கைக்கு ஏற்ற மணாலனை ரன்ஜிதாவிடமே ஒப்படைத்து விட்டார்.

உங்களை காதலனாக ஏற்றுக்கொண்ட ரன்ஜிதா தகப்பனிடம் அல்லவு முடியாமல்... மெல்லவு முடியாமல் பயத்தின் காரணமாக மௌனமாக இருந்துவிட்டால் இருப்பினும் விட்டகுறை தொட்டக்குறையை போல மீண்டும் உயிருக்கு உயிராக காதலித்த நீங்களும் உங்களின் விருப்பப்படி இணையப் போவது நிச்சயம்.

கௌரவம்... அந்தஸ்துக்கு தன்னையே அடிமையாக்கிக் கொண்ட ரன்ஜிதாவின் தந்தையார் தனது குறிக்கோளை உதறி, தள்ளிவிட்டு ரன்ஜிதாவின் திருமண பந்தத்தை இணைத்துக் கொள்ளட்டும் என்று முடிவெடுத்திருக்கின்றார் என்றால் தன் மகளின் எதிர்கால வாழ்க்கை எப்படி எல்லாம் நடைபெற வேண்டும் என்று உங்களின் மாமனார் எப்படி நினைத்திருப்பார் என்பதை நீங்கள் நினைத்துப் பாருங்கள்.

இருப்பினும், திருமணம் என்பது ஆயிரங்காலத்து பயிர். வாழ்க்கை என்பது தேன்கூடு அதை கட்டுவதென்றால் பெரும்பாடு என்ற பாடலின் வரிகளை போன்று இருவரும் புரிந்துணர்வுடன் இருவரின் மனமும்

தொடர்கதை

கோணாதபடி விட்டுக் கொடுத்து இலட்சியத்தம்பதிகளாக வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இதற்கு ரதீஸ் உங்களின் வாழ்த்துக்களை போன்று இருவரும் தேனும் பாலை போன்று சிரஞ்ஜீவியாக வாழ்வோம். ஆமாம், உங்களின் ஆசிகள் இருக்கும்வரை நாமிருவரும் என்றென்றும் எந்தவித பிரச்சினைகளும் வராதபடி புரிந்துணர்வுடன் நடந்துக்கொள்வோம்.

இனியும் காலத்தை வீணடிக்காது உங்களின் திருமணத்தை பற்றி இன்றே ரன்ஜிதாவின் தந்தையுடன் கதைக்கின்றேன். இவ்வேளை குடும்ப நண்பரின் மனைவி திருமணத்திற்கு முன்னதாக எமது இந்து கலாச்சார விழுமியங்களோடு இணைந்திருக்கும் சில முறைகள் இருக்கின்றது. அதன்படி இருவீட்டாரும் சம்மந்தம் கலக்க வேண்டும்.

பிறகு ஜாதகக்குறிப்பை பார்க்க வேண்டும் இதன் பின்னர் நிச்சயத்தார்த்தத்தினை செய்ய வேண்டும். இவைகள் அன்றாடம் நம்மரபு வழியில் வந்த தாட்பரியங்கள் எல்லாம் முறைப்படி நடக்கும் இருப்பினும் பெற்றவர்கள் என்ற முறையில் பெற்றோர்களின் சம்மதத்தினையும் பெற வேண்டும்.

நான் சொன்னால் எதையும் ரன்ஜிதாவின் தந்தை உதாசினப்படுத்துவதில்லை... மறுப்புத் தெரிவிக்க மாட்டார் என்கின்ற நம்பிக்கை பரிபூரணமாக எனக்கு இருக்கிறது. ரன்ஜிதாவின் தந்தையர் இதனை கேள்விப்பட்டால் மிகவும் சந்தோஷமடைவார்.

இதைவிட சந்தோஷம் நாங்கள் அடைகின்றோம். காரணம் ரன்ஜிதா பிறந்த அன்றிலிருந்து இன்றுவரை அவர்களின் குடும்பத்தோடு உறவாடிக் கொண்டிருக்கின்றோம்.

காரணம் எனக்கு எல்லாச் செல்வங்களையும் கொடுத்த ஆண்டவன் பிள்ளைச் செல்வத்தை கொடுக்கவில்லை. இருப்பினும், பிள்ளை இல்லாத குறை... குறையாகத் தெரியவில்லை. ரன்ஜிதாவை தோலின் மேல் வைத்து நானும் என் மனைவியும் தாலாட்டி சீராட்டி இருக்கின்றோம்.

ரன்ஜிதாவின்... வாழ்வுதான் எங்களின் வாழ்வு என குடும்ப நண்பரின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பொல பொலவென வடிகிறது. ரன்ஜிதா ஓடிப் போய் கண்ணீரை துடைக்கின்றாள்.

நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். உங்களையும் என் பெற்றேரைப் போன்று தான் நினைக்கிறேன். இதில் எந்தவித சந்தேகமில்லை. இவ்வேளை ரதீஸ் ஆமாம், ரன்ஜிதாவின் பெற்றோர்களைப் போல என்றும் உங்களையும் எங்களின் மனதில் நினைத்துக் கொண்டே இருப்போம்.

சரி... சரி... வாங்க சாப்பிடுவோம் என்றவாறு சாப்பிடுகின்றனர்.

தொடரும்

'யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் கிராமங்களை ஐ.எம்.எச்.ஓ. மீளக் கட்டி எழுப்பி வருகின்றது'

அமைச்சர் எரிக் ஹொஸ்கின் பாராட்டு



(வீரகேசரி மூர்த்தி)

'ஸ்ரீலங்காவில் நடைபெற்ற யுத்தம் தமிழ் குடும்பத்தினருக்கு எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்தி உள்ளது என்பதனை நாமறிவோம். மிகப் பயங்கரமான அனுபவம். அதற்காக நான் மனம் வருந் துவதோடு எனது அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன். யுத்தத்தினால் பாதிப்படைந்த தமிழ் கிராமங்களை மீளக் கட்டி எழுப்புவதில் சர்வதேச வைத்திய சுகாதார நிறுவனம் முக்கிய பங்களிப்பினை செய்து வருகின்றமை சிறந்த சேவையாகும். விதவைப் பெண்களுக்கு தையல் இயந்திரங்களையும், வேலை வாய்ப்பின்றி இருக்கும் ஆண்களுக்கு ஓட்டோ றிக்சோக்களையும் வழஙகி அவர்களுக்கு வாழ் வாதாரத்தினை வழங்கி வருவது பாராட்டுக்குரியது'.



மார்க்கம் ஜஸ்மின் ஹோல் மண்டபத்தில் நேற்று மாலை ஆரம்பமாகிய சர்வதேச வைத் திய சுகா தார நிறுவனத்தின் (ஐ.எம்.எச்.ஓ.) ஒன்பதாவது வருடாந்த இரு நாள் மாநாட்டில் பிரதம அதிதியா க் கலந்து கொண்டு உரையாற்றிய ஒன்ராறியோ மாகாண அமைச்சர் எரிக் ஹொஸ்கின் இவ் வாறு கூறினார். இம்மாநாட்டிற்கு அமெரிக்கா, ஐரோப்பா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலுள்ள ஐ.எம். எச்.ஓ. உறுப்பினர்களான டாக்டர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி அமைப்பின் ஆரம்ப காலத் தலைவரான டாக்டர் லம்போதரன் வரவேற்புரை நிகழ்த்தினார். கனடா வர்த்தக சம்மேளனத் தலைவர் திரு. மயில்வாகனம் அகிலன் உரை யாற்றுகையில் வெளி நாடுகளுக்கு புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் தமது கடும் முயற்சியினால் முன்னேறியுள்ளனர். அவர்களது உதவியுடன் ஐ.எம்.எச்.ஓ. இலங்கையிலுள்ள வறிய மக்களுக்கும் நோயாளிகளுக்கும் பெரும் சேவை ஆற்றி வருகின்றது. அதற்கு நாமும் எம்மாலியன்றளவு ஆதரவு வழங்கி வருகின்றோம். தொடர்ந்தும் ஆதரவளிப்போம் எனக் கூறினார்.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் பணியாற்றும் டாக்கடர் ஏ.பார்த்திபன் உரையாற்று கையில் நோயாளிகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித் திருப்பதாகவும் ஆனால் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு வைத்தியசாலையில் போதிய இடவசதியோ, உபகரணங்களோ, வாகனங்களோ இல்லை. 418 மார்பு புற்று நோயாளிகள் உள்ளனர். அவர் களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான ஒளிக்கதிர் சிகிச்சை உபகரணம் இல்லை எனக் கூறினார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த மனநோய் வைத்தியர் டாக்டர் சிவயோகம் உரையாற்றிய போது யாழ்ப்பாண மக்கள் தங்கள் சுய அடையாளத்தையும் நம்பிக்கையையும் இழந்து விரபக்தியோடு வாழ்கின்றனர். யாழ் மக்களுக்கு உதவுவதில் ஐ.எம்.எச்.ஓ ஆற்றி வரும் சேவை மகத்தானது எனக் கூறினார்.

கனடாவிலுள்ள டாக்டர் ரவிராஜ் உடனடித் தேவையாக எவ்வளவு பணம் தேவைப்படு கின்றது எனக் கேட்டார்.

அதற்குப் பதில் அளித்துப் பேசிய டாக்டர் சிவயோகம், தற்போது யாழ்ப் பாணத்தில் அநாத ரவான பத்துப் பேர் உள்ளனர். அவர்களுக்கு உதவுவதற்கு ஒரு நபருக்கான மாதாந்த செலவு 8000 ரூபாய். மற்றும் அநேகர் வேலை வாய்ப்பின்றி இருக்கின்றார்கள்.

அத்துடன் முக்கிய உணவான பாணுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. எனவே பாண் தயாரி க்கும் மெசின் வாங்குவதற்கு பண உதவி அவசியம். அதனை வாங்க முடிந்தால் வேலை வாய்ப்பு அற்றோருக்கு வேலை வழங்குவதோடு பாணை உற்பத்தி செய்து தட்டுப்பாட்டை யும் நீக்கலாம்.

அத்துடன் வைத்தியசாலையில் சலவை இயந்திரம் இல்லை. அதனையும் வாங்கித் தந்தால் வைத்தியசாலை துணிகளை சலவை செய்வதோடு அதிலும் சிலருக்கு வெலை வாய்ப்பினை ஏற்படுத்த முடியும் என்றார்.



காலம், இயற்கை, பொறுமை இவையே சிறந்த மூலிகை மருந்துகள். - ஹென்றி ஜார்ஜ் போகன்

வரும்முன் காப்போம் - மருத்துவக் கட்டுரை
ஹோமியோ மருத்துவத்தில் உயிர்சக்தி

ஆரோக்கியம் நாடி...

உயிர்சக்தி ஆற்றல்

உயிர் - சக்தி - ஆற்றல் இவை மூன்றையும் தனித்தனியே பிரித்துப் பார்க்கும்போது இதன் அடிப்படை உங்களுக்கு ஓரளவு புரிந்திருக்கும் என்று நம்புகிறேன். ஆம், வாசகர்களே இந்த உயிர் சக்தி ஆற்றல்தான் நாம் வாழ்வதற்கு அஸ்திவாரமானது. என் உயிரினும் மேலான உயிரே, உயிரே வந்து என்னோடு கலந்துவிடு, உயிருக்கு உயிராக இப்படி இந்த வார்த்தைகள் நாம் அடிக்கடி கேட்டு நம் உயிரோடு கலந்து விட்டவை. இதற்கு உண்மையில் அர்த்தம் உண்டா அல்லது வெறும் பிரம்மையான வசனங்களா? அல்லது கவிதைகளுக்கு அழகூட்ட மட்டுமே பயன்படுத்தப்படுகின்றதா என்று எண்ணிப் பார்த்தால் இதன் உண்மை நிலை விளங்கிவிடும்.

மருத்துவ அறிவியலில் சற்று புரியாத புதிராக இன்னமும் ஆய்வுகள் தொடர்ந்தாலும், இதை விஞ்ஞானிகள் ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

உயிர் பிரிந்துவிட்டது, உயிருடன் இல்லை, இந்த வார்த்தைகளையும் நாம் எல்லாரும் கேள்விப்பட்டிருக்கின்றோம். பயன்படுத்தியும் வருகிறோம். இதன் உள்ளார்ந்த அர்த்தத்தை நாம் என்றும் எண்ணிப் பார்த்ததில்லை. ஆம், அருமையான வாசகர்களே இது இல்லையென்றால் எதுவுமே இல்லை. வாழ்க்கையின் அடிப்படையே இந்த உயிர் தான். இந்த உயிர் சக்தி ஆற்றலைப் பற்றி ஞானிகளும், வேத நூல்களும், பல்வேறு கால கட்டங்களில் பல்வேறுபட்ட கருத்துக்களை சொல்லி வந்துள்ளனர். மதங்களிலும் இது பல்வேறுபட்ட சொற்களில் வழக்கத்தில் உள்ளது. இது மனிதர்களுக்கு மட்டுமல்ல, எல்லா உயிருள்ள ஜீவ ராசிகளுக்கும் பொதுவானது. எது எப்படி இருப்பினும் நமக்குள் ஒரு உயிர் சக்தி ஆற்றல் இருந்து கொண்டு இயக்கிக் கொண்டிருக்கிறது உண்மை.

உயிர்ச்சக்தி என்றால் என்ன?

கண்ணுக்குப் புலப்படாத, உணரக்கூடிய, எப்போதுமே இயங்கிக் கொண்டிருக்கிற, தானாக தன்னாற்றலுடன் இயங்கும் திறன் கொண்ட, உயிராக உடலைப் பாது காக்கின்ற ஒரு சக்தியே உயிர் சக்தி என்று மாமேதை ஹனிமென் அவரது ஆர்கானன் ஆப் மெடிசின் எனும் தத்துவ நூலில் குறிப்பிடுகின்றார்.

பொதுவாகவே எந்த ஒரு சக்தியையும் கண்ணால் பார்க்க முடியாது என்பது உண்மை. அதனுடைய விளைவையோ அல்லது அதிலிருந்து வெளிப்படுகின்ற தன்மைகளை நாம் உணர்ந்து புரிந்து கொள்ள முடியுமே தவிர எந்த ஒரு சக்தியையும் நேரடியாக பார்க்க முடியாது.

மின் சக்தியானது கம்பிகள் வழியே செல்வதை பார்க்க முடியாது. ஆனால், அது என்ன செய்யும் என்பதும், எத்தகைய வேலைகளை செய்கிறது என்பதும் நமக்கு தெரிந்ததுதான். அதேபோல காந்த சக்தி, ஒலிச் சக்தி, வெப்ப சக்தி, அணுச்சக்தி இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். ஒரு சிறிய உதாரணமாக காந்தத்தின் எதிர்முனைகள் ஒன்றையொன்று எவ்வளவு கவர்வதையும் அதேபோல இரு ஒத்த முனைகள் ஒன்றையொன்று தள்ளுவதையும் நம் கையிலேயே உணர முடியும். ஆனால் இரண்டு காந்தங்களுக்கு இடையிலுள்ள அந்த சக்திப் புலத்தை பார்க்க முடியாது.

ஒலியை அல்லது ஒரு சத்தத்தை நாம் உணர்ந்து கொள்ளுவதென்றால், ஒலியானது சக்தி வடிவில் காதினை அடைந்து செவிப்பறைகளை அதிர்வடையச் செய்து பின்பு காதிலுள்ள சிறிய எலும்புகளையும் அதிர்வடையச் செய்து, காதின் லாபிரிந்திலுள்ள வெஸ்டிபிலா மற்றும் காக்னியா எனும் உறுப்புகளை அடைந்து அதிலுள்ள திரவத்தில் அதிர்வுகளை உண்டுபண்ணி, அங்கிருந்து நரம்புகள் வழியாக மூளையில் ஒலி எனும் சக்தி எப்படிப்பட்டது என்று உணரப்படுகிறது. இவ்வாறாக எந்த சக்தியையும் பார்க்க முடியாது, உணர முடியும் என்பதை புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.



உயிர் சக்தி ஆற்றலானது தானாக இயங்கும் திறன் கொண்டது மட்டுமல்லாமல் தொடர்ந்து இயங்கிக் கொண்டேயிருக்கிறது. ஆணின் விந்துவும், பெண்ணின் கருமுட்டையும் இணைந்து தாயின் வயிற்றில் கரு உருவாகும் போதே இந்த சக்தியும் உருவாகத் தொடங்கி விடுகிறது.



உயிர் வாழ்வதற்கு அடிப்படையான மேற்குறிப்பிட்ட மூன்றையும் ஆய்வு செய்து பார்க்கிறபோது, பல உண்மைகள் நமக்குப் புலப்படும். மேற்குறிப்பிட்ட மூன்றும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து செயற்பட வேண்டும். ஒன்றில்லாமல் இன்னொன்று தனித்து இயங்க முடியாது. வெறும் உடல் மட்டும் இருந்து உயிர் சக்தி ஆற்றலும் மனமும் இல்லையென்றால் அது வெறும் பிணம்தான். அதேபோல உடல் இல்லாமல் உயிர்சக்தியும் மனமும் தனித்தனியே இயங்க முடியாது. இவையெல்லாம் சேர்ந்து இயங்கும் போது தான் ஒரு மனிதன் என்று குறிப்பிடுகிறோம்.

அனுபவம்:

சில வருடங்களுக்கு முன்பாக எனது உறவினர் ஒருவர் இறந்துவிட்டார். அவருடைய உடலை, அவருடைய உறவினர்கள் வாழும் வெளிநாடு ஒன்றுக்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதற்குரிய சட்ட ரீதியான சடங்கு முறைகளை முறைப்படி செய்து விமான நிலையத்திற்கு எடுத்துச் சென்று சரக்குகள் அனுப்பும் பிரிவான Cargo-வில் ஒப்படைக்கப்பட்டது.

அங்கு அவரின் உடல் வைக்கப்பட்டிருந்த பெட்டியின் மேல் *Human remains* என்று எழுதப்பட்டிருந்தது. *Human Dead Body* என்று எழுதுவதற்கு பதிலாக மனிதனின் மிச்சம் என்று எழுதப்பட்டிருந்தது. மிகவும் பொருத்தமாக இருந்தது. உடலில் எல்லா உறுப்புகளும் அதனதன் இடத்திலிருந்து அவற்றிற்குரிய செயற்பாடுகளை செய்து வருகின்றன.

இந்த இயக்கத்திற்கு பல்வேறு வகையான உடற் செயலியல் காரணம் இருந்தாலும் இவையெல்லாவற்றிற்கும் மேலாக இந்த உயிர் சக்தி ஆற்றல்தான் இவையெல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

இறப்பு என்றால் என்ன?

இறப்பு என்பதற்கு பல்வேறு கருத்துக்களை, இலக்கணங்களைச் சொன்னாலும் பொதுவாக மருத்துவ ரீதியில் பார்க்கும்போது மூளை, இதயம், சுவாசம் இவற்றின் முழுமையான, நிரந்தரமான செயற்பாடற்ற நிலை இறப்பு என்று அழைக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, மூளையின் நிரந்தரமான, முழுமையான செயற்பாடற்ற நிலையில் கூட ஒருவர் இறந்து விட்டதாக அறிவிக்கலாம் என்றும் மருத்துவ விஞ்ஞானம் கருதுகிறது. ஒருவர் இறக்கும் அந்த கண நேரத்தில் என்ன மாற்றம் ஏற்படுகிறது என்பதற்கான விஞ்ஞான ஆய்வுகள் தொடர்கின்றன. இதுவரை உயிரோடு இருக்கும் போது மனிதன் என்று அழைக்கப்பட்டவன் மறுவிநாடியே பிணம் என்றும் எப்போது இதை எடுப்பார்கள் என்றும் வார்த்தைகள் மாறி விடுவின்றதை அவதானித்திருப்பீர்கள்.

எல்லாவற்றிற்கும் அடிப்படையான உயிர்ச்சக்தி ஆற்றல் இறப்புக்கு பின்பு என்ன ஆகிறது என்றால், சற்று யோசிக்க வேண்டிய விஷயம்தான். பௌதிக தத்துவத்தின்படி ஒரு சக்தி அழிக்கப்படுவதில்லை. இன்னொரு சக்தியாக மாறுகிறது என்பது நாம் எல்லோரும் அறிந்த விஞ்ஞான உண்மை.

அதனால்தான் நம் முன்னோர்கள், ஞானிகள் கருத்துப்படி இறப்புக்கு பின்பு இந்த உயிர்சக்தி தான் ஆத்மா என்ற நிலையை அடைந்து விடுவதாக கருதுவது பொருத்தமாகத்தான் உள்ளது.

ஹெல்த் என்றால் என்ன?

டாக்டர் ஹனிமெனின் கருத்துப்படி நோயற்ற வாழ்வு என்பது உடற்கூறு மற்றும் உடற் செயல்பாடுகளின் சீரான தன்மையும் மனநிலையில் மாறுபாடுகள் இல்லாத நிலையுமாகும். இந்த நிலையில் உடல், மனம், உயிர்சக்தி இவற்றிற்கிடையே ஒரு சமநிலை காணப்படும்.

உயிர் சக்தி ஆற்றலானது, குறிப்பாக சீராக, தங்குதடையின்றி செயற்பட்டுக் கொண்டிருக்கும். உடற்கூறு, உடற்செயலியல், மனம் இவற்றை சமச்சீராக பேணுவதுடன் இவற்றிற்கிடையே ஏற்படும் சிறிய கோளாறுகளையும், மாறுபாடுகளையும், பாதிப்புகளையும் முடிந்தவரை தானே முன்னின்று சீர்செய்யும் ஆற்றல் வாய்ந்தது.

சில வேளைகளில் உயிர்சக்தி ஆற்றலையும் மீறி நோய்சக்தி தலையெடுத்து விடுகிறது. இந்த நிலையைத்தான் நோய்நிலை என்று அழைக்கின்றோம். இத்தருணத்தில் உயிர்சக்தி ஆற்றலை தூண்டுவதற்கு, மீண்டும் வீரியத்துடன் செயற்பட வைப்பதற்கு மருந்து எனும் இன்னொரு சக்தியைக் கொண்டு உயிர்சக்திக்கு ஆதரவாகச் செயற்பட்டு நோய் சக்தியை குணப்படுத்தும் பணியினை ஹோமியோபதி மருந்துகள் செய்து வருகின்றன.

உயிர்சக்தி ஆற்றல் என்பது நாம் இப்போது புதிதாக சொல்லும் நோய் எதிர்ப்புச் சக்தியோடு தொடர்புடையதுதான். நோய் எதிர்ப்பு சக்தி எல்லாம் உயிர் சக்திக்கு உட்பட்டுத்தான் செயற்படுகின்றன. வெறும் நோய் எதிர்ப்பு சக்தி என்பது உடற் செயற்பாட்டின் ஒரு பகுதியேதான். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதால் மட்டுமே எல்லா நோய்களையும் குணப்படுத்த முடியாது. உதாரணத்திற்கு இரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய், காக்கா வலிப்பு போன்ற பல நோய்களுக்கும் *Physiological* ஆகவுள்ள *Immunology* என்ற நோய் எதிர்ப்புக்கும் அவ்வளவு தொடர்புகள் கிடையாது.

தொடரும்...

டாக்டர். போல் யோசேப்
B.H.M.S. (India), H.D.(Canada), R.A.P.
(Bachelor of Homeopathic Medicine and Surgery) 1193A Brimley Road, Unit 10, Scarborough, Ontario M1P 3G5
Tel: 4164383939
Cell: 4169864903

உங்களுக்கு ஓர் உதவி!

கண்களில் குளுக்கோமா பிரச்சனை உள்ளவர்களுக்கு உதவுவதற்கு TSM நிறுவனம் முன்வந்துள்ளது. குளுக்கோமா பிரச்சனை கொண்டவர்கள், அதை வைத்தியரின் கடிதத்துடன் உறுதிப்படுத்தும் போது இலவசமாக Talking Computer – கணனி வழங்கப்படுகின்றது. உடனடியாக தொடர்பு கொண்டால் பெறுமதியான கணனி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு அழையுங்கள் - TMS – **647 388 2478**

BUY ONE! GET TWO FREE!!

உலக வர்த்தகர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்! உலக பிரசித்தி பெற்ற வர்த்தகப் பெருந்தகையோர்களே!

உங்கள் வியாபாரம் குறித்த விளம்பரங்களை CANADA No.1 எங்கள் கீதவாணி உலக வானொலியில் மிகக்குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள்! கீதவாணியில் நீங்கள் செய்யும் உங்கள் விளம்பரத்தை கிழமைதோறும்:

1) கதிர் ஒளி வாராந் திர பத்திரிக்கையிலும் 2) கதிர் ஒளி இ-பேப் பரிலும் (kathiroli.digitalepaper.in) பிரசுரித்து உங்கள் வர்த்தகத்தை இவ்வுலகம் முழுவதும் அறியச் செய்கிறோம்.

மேலும் விவரங்களுக்கு அழையுங்கள்:

Ph: 4162927772 Fax: 4162927780

"கதிர் ஒளி"யின் சிறு விளம்பரங்கள்

வேலைவாய்ப்பு/JOB OPERTUNITY

The Scarborough "promar" looking for a good skill person for full time Office Administator. Call immediatly. ஸ்கார்போரௌக்ஹவில் இயங்கி வரும் ப்ரோமர் ஸ்தாபனத்திற்கு, நல்ல அனுபவமுள்ள அலுவலக பொறுப்பாளர் முழுநேரப்பணிக்கு உடனடியாகத் தேவை. அழையுங்கள் **(416) 898 - 4846**

TAMILSYELLOWPAGES.COM

பிறந்த நாள் முதல் இறந்த நாள் வரை உங்கள் அனைத்துச் சேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு நாடவேண்டிய வர்த்தக **WEB SITE**

Mobile: 416-752-4444 Tel: 416-644-7273
E-mail: tamilyp@gmail.com

COMPUTER REPAIR
கணனி திருத்த வேலை



- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்

ProWin CompUters
2383 Eglinton Ave. East.
TP: 416 - 879 7489 / 647 - 340 5568
(Kennedy & Eglinton)
100% Satisfaction Guaranteed

ELECTRONICAL REPAIRS

T.V, Fridge, Washer&Dryer மற்றும் சகல விதமான இலத்திரனியல் திருத்த வேலைகளுக்கும் அழைக்க வேண்டிய தொலைபேசி:
லோகன் / Logan
416.616.1984
905.471.1984

ROOM FOR RENT McCowan / Eglinton Ave. E,

One bedroom for rent in a two bedroom apartment. Preparable for womens and students. இரண்டு அறையுள்ள உயர் மாடி கட்டிடத்தில் ஒரு அறை வாடகைக்கு விடப்படும். பெண்கள் / மாணவிகள் விரும்பத்தக்கது. மேலதிக விவரங்களுக்கு அணுகுங்கள்
(647) 984-0264

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய 15 டொலர் மட்டுமே அழையுங்கள்
1 855 292 7772

Kathiroli's Toll free: 1 855 292 7772

KENNEDY
TAX & ACCOUNTING INC.

Our Professional Services:

- Personal & Corporate Tax Returns by Qualified Professionals
- Bookkeeping, Accounting & Payroll Services
- GST / PST / HST Returns
- Complete Accounting Services for Small Businesses



Manoranjan Talukder (M.Com)
Adv. Diploma-Accounting (Canada)
Awarded – For Tax Returns (CRA)

✓ Amazing low rates and save your hard earned $$!!!
✓ Business ethics is our symbol of trust !!!
✓ You are getting guaranteed accuracy and confidentiality !!!

2390 Eglinton Avenue East, Suite # 205 (Kennedy/Eglinton)
Scarborough, ON M1K 2P5
Tel: 647. 827. 2220 Cel. 647. 938. 1955

E-mail: ranjan@kennedyaccounting.ca
www.kennedyaccounting.ca

லண்டன் ஒலிம்பிக்கை புறக்கணிக்கக் கோரிக்கை



டவ் நிறுவனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து லண்டன் ஒலிம்பிக்கை புறக்கணிக்க வேண்டும் என போபால் விஷவாயு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் மத்திய அரசை கேட்டு கொண்டுள்ளார்.

போபால் விஷவாயு சம்பவத்தில் சஞ்சய் வர்மா என்பவர் தனது குடும்பத்தில் தனது தந்தை, தாய் உட்பட 7 பேரை பறி கொடுத்தார்.

இவர் நேற்று லண்டனில் இந்திய பத்திரிகையாளர்கள் சங்கத்திற்கு அளித்த பேட்டியில், லண்டன் ஒலிம்பிக் போட்டிகளை இந்திய அரசு புறக்கணிக்க வேண்டும்.

தடகள வீரர்கள் பங்கேற்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது பற்றி முடிவு செய்யும் உரிமையை அவர்களிடமே வழங்க வேண்டும். டவ் நிறுவனத்தால் ஆயிரகணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் கைகளில் மக்களின் ரத்தக்கறை படிந்துள்ளது. அது தற்போது லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கு செல்கிறது. டவ் கெமிக்கல்ஸ் நிறுவனத்துடன் எந்தவித வியாபாரமும் செய்யக்கூடாது என கூறினார்.

விளையாட்டு செய்திகள்

அஸ்வினுக்கு அபராதம்

சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர் அஸ்வினுக்கு போட்டி ஊதியத்தில் 5 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை சூப்பர் கிங்ஸ்-கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதிய ஆட்டம் சென்னையில் சனிக்கிழமை நடைபெற்றது.


சென்னை பேட்டிங்கின்போது களத்தில் இருந்த அஸ்வின் ஆட்டத்தின் கடைசி பந்தில் 'வைடு' கேட்டு நடுவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதையடுத்து ஐபிஎல் விதிமுறைகளை மீறியதாக அவருக்கு போட்டி ஊதியத்தில் 5 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.

அவர் தனது தவறை ஒப்புக்கொண்டதோடு, தண்டனையையும் ஏற்றுக்கொண்டார் என்று ஐபிஎல் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஐ.பி.எல் போட்டிகளை எதிர்த்ததால் ரணதுங்காவின் பதவி பறிப்பா?



இலங்கைக் கிரிக்கெட் வாரியத் தலைவராக பதவி வகித்த அர்ஜுன ரணதுங்க குறுகிய காலத்தில் நீக்கப்பட்டதற்கு ஐ.பி.எல் போட்டிகளை எதிர்த்ததே காரணம் என்று கூறப்படுகிறது.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில இணையத்தளம் ஒன்று வெளியிட்ட செய்தியில், இலங்கைக் கிரிக்கெட் வாரியத்தில் ஆவணங்களை மேற்கொள்காட்டி இலங்கை அரசுக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் வழங்கிய அழுத்தத்தின் காரணமாகவே இலங்கைக் கிரிக்கெட் வாரியத்தலைவர் பதவியிலிருந்து அர்ஜுன ரணதுங்க நீக்கப்பட்டார் என்றுத் தெரிவித்துள்ளது.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் மீதும், அதன் இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) போட்டிகள் மீதும் கடுமையான விமர்சனத்தைக் கொண்டவரான அர்ஜுன ரணதுங்க, வெளிப்படையாகவே அவற்றிற்கு எதிராக விமர்சித்து வந்தார்.

2009ம் ஆண்டு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் ஐ.பி.எல் தொடரை நடத்திய போது இலங்கை வீரர்களும் அத்தொடரில் பங்குபெற ஒப்பந்தம் செய்யப்பட்டனர். எனினும் அக்காலப்பகுதியில் இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரொன்றை நடத்த இங்கிலாந்துக் கிரிக்கெட் வாரியம் விரும்பியது.

அதன் காரணமாக ஐ.பி.எல் தொடரிலிருந்து ஆரம்பத்திலேயே திரும்பி இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் பங்கேற்குமாறு ரணதுங்க இலங்கை வீரர்களுக்கு அழுத்தத்தை வழங்கியதால் இலங்கை வீரர்களும் எதிர்த்தனர்.

இந்த நடவடிக்கையால் அதிருப்தியடைந்த இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் பாங்காக்கில் இலங்கைக் கிரிக்கெட் வாரிய அதிகாரிகளைச் சந்தித்து எச்சரிக்கை விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரணதுங்க இலங்கைக் கிரிக்கெட் வாரியத் தலைவராகக் காணப்படும் வரை இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளும் பாதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டதன் காரணமாகவே ரணதுங்க அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார் எனவும் அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

டெஸ்ட் ரேங்கிங்: இந்தியா 'நம்பர்-4'

ஐ.சி.சி., டெஸ்ட் அணிகளுக்கான ரேங்கிங்கில், இந்திய அணி 4வது இடத்துக்கு தள்ளப்பட்டது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) சார்பில், சிறந்த டெஸ்ட் அணிகளுக்கான ரேங்கிங் (தரவரிசை) பட்டியல் நேற்று துபாயில் வெளியிடப்பட்டது. இதில் 111 புள்ளிகளுடன் இந்திய அணி நான்காவது இடத்துக்கு தள்ளப்பட்டது. வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 எனக் கைப்பற்றிய ஆஸ்திரேலிய அணி, 112 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியது. தலா 116 புள்ளிகளுடன் இங்கிலாந்து, தென் ஆப்ரிக்க அணிகள் முதலிரண்டு இடத்தில் நீடிக்கின்றன.

பேட்ஸ்மேன்களுக்கான ரேங்கிங்கில் இந்தியாவின் சச்சின், 12வது இடத்தை பாகிஸ்தானின் அசார் அலியுடன் பகிர்ந்து கொண்டுள்ளார். வேறு எந்த ஒரு இந்திய வீரரும், 'டாப்-20' வரிசையில் இடம் பெறவில்லை. சந்தர்பால் (வெஸ்ட் இண்டீஸ்), டிவிலியர்ஸ் (தென் ஆப்ரிக்கா), காலிஸ் (தென் ஆப்ரிக்கா) ஆகியோர் 'டாப்-3' வரிசையில் உள்ளனர்.

COUNTRY	RANK	RATINGS
England	1	116
South Africa	2	116
Australia	3	112
India	4	111
Pakistan	5	108

பவுலர்களுக்கான ரேங்கிங்கில் இந்தியாவின் ஜாகிர் கான் (12வது), பிரக்யான் ஓஜா (20) ஆகியோர் 'டாப்-20' வரிசையில் உள்ளனர். ஸ்டைன் (தென் ஆப்ரிக்கா), சயீத் அஜ்மல் (பாகிஸ்தான்), ஆண்டர்சன் (இங்கிலாந்து) ஆகியோர் முதல் மூன்று இடங்களில் உள்ளனர்.

ஆசிய ஸ்நூக்கர்: ஆதித்யா சாம்பியன்



ஆசிய ஸ்நூக்கர் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் ஆதித்யா மேத்தா சாம்பியன் பட்டம் வென்றார்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிச்சுற்றில் ஆதித்யா 7-5 என்ற கணக்கில் சகநாட்டு வீரரான பங்கஜ் அத்வானியைத் தோற்கடித்தார்.

கத்தார் தலைநகர் தோஹாவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆரம்பத்தில் பங்கஜ் அத்வானி 3-2 என்ற கணக்கில் முன்னிலை பெற்றார். ஆனால் அடுத்த சில நிமிடங்களிலேயே அதை சமன் செய்தார் ஆதித்யா.

அதன்பிறகு அபாரமாக ஆடிய ஆதித்யா 6-3 என்ற கணக்கில் முன்னிலை பெற்று, இறுதியில் 7-5 என்ற கணக்கில் வெற்றி கண்டார்.

ஆசிய ஸ்நூக்கர் சாம்பியன்ஷிப் போட்டியில் பட்டம் வென்ற 3-வது இந்தியர் ஆதித்யா. 3-வது முறையாக இந்தப் போட்டியில் பங்கேற்ற ஆதித்யா, இதற்கு முன்னர் இரு முறை வெள்ளிப் பதக்கம் வென்றார்.

வெற்றி குறித்து ஆதித்யா கூறுகையில், 'வெற்றி பெற்று தங்கம் வென்றது மிகவும் 'த்ரில்'லாக உள்ளது. இதற்கு முன்னர் இரு முறை வெள்ளி வென்றாலும், இப்போது தங்கம் வென்றுள்ளேன்.

மிகச்சிறந்த போட்டியில் வெற்றிபெற்றது அளவற்ற மகிழ்ச்சியை தந்துள்ளது' என்றார்.

இறுதிச்சுற்றில் தோல்வி கண்ட பங்கஜ் அத்வானிக்கு வெள்ளிப் பதக்கமும், 3-வது இடம்பிடித்த ஈரானின் ஹுசைன் வஃபேயிக்கு வெண்கலமும் வழங்கப்பட்டது.

கொல்கத்தாவில் மே 4 முதல் 9 வரை நடைபெறவுள்ள ஹிந்துஸ்தான் கிளப் தேசிய இன்வைட்டேசன் ஸ்நூக்கர் போட்டியில் ஆதித்யா பங்கேற்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

அரையிறுதியில் ஷரபோவா, அசரென்கா



ஜெர்மனியில் நடைபெற்று வரும் ஸ்டுட்கார்ட் சர்வதேச ஓபன் டென்னிஸ் போட்டியின் அரையிறுதியில் விளையாட ரஷியாவின் மரியா ஷரபோவா, பெலாரஸின் விக்டோரியா அசரென்கா, செக் குடியரசின் பெட்ரா விக்டோவா, போலந்தின் அக்னிஸ்கா ரத்வெஸ்கா ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

சர்வதேச டென்னிஸ் தரவரிசையில் முதல் 4 இடங்களில் இருக்கும் இவர்கள், 2009ம் ஆண்டு விம்பிள்டன் டென்னிஸ் போட்டிக்குப் பிறகு தரவரிசையில் முதல் 4 இடங்களில் இருப்பவர்கள் ஒரே நேரத்தில் அரையிறுதிக்குத் தகுதி பெறுவது இதுவே முதல் முறை. காலிறுதிப் போட்டியில் ஷரபோவா, ஆஸ்ட்ரேலியாவின் சமந்தா ஸ்டூசரை எதிர்கொண்டார். இருவரும் சளைக்காமல் விளையாடியதால் ஆட்டம் 3 மணி நேரத்துக்கு மேல் நீடித்தது. இறுதியில் 2-ம் நிலை வீராங்கனையான ஷரபோவா 6-7 (5/7), 7-6 (7/4), 7-5 என்ற செட் கணக்கில் வென்றார்.

விக்டோரியா அசரென்கா, ஜெர்மனியின் மோனா பெர்தெலை 6-4, 6-7 (3/7). 7-5 என்ற செட்கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

அக்னிஸ்கா, சீனாவின் லீ நாவையும், பெட்ரா விக்டோவா, ஜெர்மனியின் ஏஞ்சலி கெர்பரையும் காலிறுதியில் வென்றனர்.

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்

16

திருமதி விஜயா ராமன்
647 760 7075
http://vijayaamma.wordpress.com

ஒருவரது ஆத்மாவைத் திறக்கின்ற மந்திரசக்தி குருவிற்கு மட்டுமே இருக்கிறது. உடலை ஒதுக்கி, மனதிலிருந்து, அறிவிலிருந்து, ஆன்மீகத் தளத்திலிருந்து நமது ஆத்மாவைத் திறந்து அந்தப் பிரம்மத்துடன் நம்மை இணைய வைக்க குரு ஒருவரால் மட்டுமே முடியும். இப்படி அவர் திறந்தால் தான் எங்கும் எல்லாமாய்ப் பரந்து நிறைந்திருக்கின்ற பரமாத்மாவோடு பரவெளியில் நாம் கலக்க முடியும். அந்தப் பரவெளி, நமக்குள்ளேயே தான் இருக்கிறது என்ற உண்மையை உணர முடியும். குருவின் சக்தி என்னவென்று புரிகிறதா?

எனவே வெளிப்புறச் சடங்குகளால் செய்யப்படுகின்ற அனேக விதமான யாகங்களைக் காட்டிலும் ஞானயக்ஞம் மிகச் சிறந்தது. ஏனெனில் ஞானம் பெற்ற பிறகு தான் கர்ம பந்தம் அறுபடுகின்றது. இந்த ஞானவேள்வியைச் செய்வதற்கு உயரிய குரு வேண்டும். அந்த குரு ஆழ்ந்த சாஸ்திர அறிவு பெற்றவராகவும், பிரம்மத்துடன் முழுமையாகக் கலந்த பூரண உணர்வு பெற்றவராகவும் இருந்தால் தான் வேள்வி பூரணமாக நடைபெறும்.

இத்தகைய உண்மையான ஞான குருவை வணக்கத்துடனும், பணிவுடனும் அணுகி, அவருக்கு உயரிய தொண்டு புரிந்து, ஆழ்ந்த கவனத்துடன் அவரது உபதேசத்தைக் கேட்டு, அதைத் திரும்பத் திரும்பச் சிந்தித்து, உள்வாங்கி, அப்படிப் புரிந்துகொண்டதைத் தனதாக்கிக்கொள்ளும் முயற்சியில் சீடன் இடையறாது ஈடுபட வேண்டும்.

நான் அறிகின்றவற்றை அறியச் செய்பவன் யார் என்பதை நான் எப்பொழுது அறிகின்றேனோ அப்பொழுது எனது தேடல் அங்கு முடிகிறது. அறிபவனை நீ அறிய வேண்டும் என்னும் அரிய கருத்தினை நமது சனாதன தர்மம் தான் கூறியிருக்கிறதே தவிர, வேறு எந்த வித மதமும் இப்படிச் சொல்லவில்லை.

'இந்த ஞானத்தை நீ அடைந்துவிட்டால் அர்ச்சுனா! பிறகு நீ இவ்வித மயக்கத்தில் மூழ்கித் தடுமாற மாட்டாய். இப்படிச் செய்யலாமா, அப்படிச் செய்யலாமா என்ற தயக்கம் பிறகு உனக்குள் எழாது. மாறாக இதனால் நீ எல்லா உயிர்களையும் உனக்குள்ளேயே காண்பாய்! அதன் மூலம் அவற்றையெல்லாம் என்னுள்ளேயும் காண்பாய்!' என்றார் கிருஷ்ணர். இது கிருஷ்ணர் நமக்குத் தரும் உறுதி. ஞான யக்ஞத்தின் உயர்வும் சிறப்பும் இதை விட வேறு என்னவாக இருக்க முடியும்?

இந்த ஞானத்தைப் பெறுவதன் மூலம் அதாவது செயலை யோகமாகச் செய்வதன் மூலம் எத்தனையோ பிறவிகளில் எத்தனையோ பாவங்களைப் புரிந்தவனாக இருந்தாலும் அப்பாவத்தையெல்லாம் ஞானமெனும் தோணியால் ஒருவன் கடந்து செல்ல முடியும். இந்த ஞானத்தீ எல்லா வினைகளையுமே, நன்றாக எரிகின்ற நெருப்பானது விறகுகளை எரித்துச் சாம்பலாக்கி விடுவதைப்போல, எரித்து சாம்பலாக்கிவிடும், அதாவது இல்லாமற் செய்து விடும்.

ஞானத்தைப் போல் தூய்மை தரும் வேறு சாதனம் இவ்வுலகில் எதுவுமில்லை. பற்றறுத்துப் பலனில் எதிர்பார்ப்பு இன்றிக் கர்மத்தை யோகமாகச் செய்பவன் உயர் உணர்வு நிலையை அடைந்து, தானாகவே தக்க பருவத்தில் இந்த ஞானத்தைத் தனக்குள் அடைகின்றான்.

சர்வம் பிரம்ம மயம் என்று அனைத்தையும் ஒன்றாகப் புரிந்து கொண்டு புலன்களைக் கட்டுபடுத்தியவனாய், சிரத்தையுள்ளவன் ஞானத்தை அடைகின்றான். இந்த ஞானத்தை அடைந்தவன் விரைவில் பரிபூரண அமைதித் தன்மையை பெறுகின்றான்.

மாறாக இந்த விஷயத்தை நம்பாமல் சந்தேகப்படுபவன், அறிவை நம்பாமல், இதை அறிந்து கொள்வதற்கு சிரத்தையுமில்லாமல் ஐயத்தையே இயல்பாகக் கொண்டவன் அழிந்து போகின்றான். சந்தேகப்படுபவர்களால் இவ்வுலகத்திலும், நிம்மதியாக வாழ முடியாது. மேலுலகையும் அடைய முடி யாது. இன்பமென்பது கிடைக்காது.

'யோகத்தால் செயல்களைத் துறந்து, ஞானத்தால் சந்தேகம் நீங்கப் பெற்றுத் தன்னைத் தான் ஆள்பவனைத், தனஞ்சயா! கர்மங்கள் கட்டுப்படுத்த மாட்டா! ஆகவே உன் மனதில் அறியாமையால் எழுந்து நிலை கொண்டிருக்கும் ஆயிரம் கேள்விகளை உன் ஞான வாளினால் அறுத்து எறிந்துவிட்டு யோக நிலையில் நின்று செயல்படுவாய்!'

இவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணர் தன் பிரியத்திற்குரிய பக்தனான அர்ச்சுனனுக்கு உபதேசித்தது, பகவத் கீதையின் ஞான கர்ம சந்யாச யோகம் என்னும் நான்காம் அத்தியாயமாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

இனி செயலை யோகமாகச் செய்வோம்!

சந்நியாச யோகம்:

கீதாச்சாரியனான கண்ணன் மனிதன் மிகச்சரியாக யோகதர்மத்தைப் புரிந்து கொள்ள வேண்டும், அப்படிச் சரியாக அவன் புரிந்துகொண்டால்தான் மாயையிலிருந்து அவனால் விடுபட முடியும் என்பதற்காகத்தானோ என்னவோ கீதையில் முதலில் ஞானத்தைப் பற்றி விளக்குகிறார். அதனை அடுத்துக் கர்மாவைப் பற்றித் தெளிவாக உரைக்கின்றார். அதைத் தொடர்ந்து ஞானத்துடன் கர்மாவை எவ் வாறு பற்று இல்லாமல் செய்யவேண்டும் என்பதை விவரிக்கின்றார். அதற்கும் மேலாகப் பற்றின்மை என்றால் என்ன என்பதை இப்போது விளக்க முற்படுகின்றார்.

சந்நியாச யோகம் என்றவுடன் நமக்குள் பயம் ஏற்படும். பக்தியும், மரியாதையும் கலந்த உணர்வு உண்டாகும். நம்மை விட வேறுபட்ட ஒரு நிலை என்ற எண்ணம் ஏற்படும். காவி உடையும், ஜடா முடியும், கமண்டலமும் மனக்கண்ணில் தோன்றும். ஆனால் நம் கற்பனையில் தோன்றுகின்ற இந்தக் கருத்துக்களெல்லாம் சந்நியாசம் என்ற சொல்லின் உண்மையான பொருள் அல்ல.

சந்நியாசம் என்பது துறத்தல் அல்லது விட்டு விலகுவது என்று பொருள்படும். 'ந்யாஸ' என்றால் தியாகம் செய்வது என்று பொருள். ஒவ்வொருவரும் வாழ்க்கையில் ஏதாவது ஒன்றைத் தியாகம் செய்து கொண்டு தான் வருகிறோம். சம்-ந்யாஸ என்றால் முழுவதையும் தியாகம் செய்ப வர் என்று பொருள். இந்த உலக விஷயங் கள் அனைத்தையும் துறந்து விடுவது சந்நியாசமல்ல. அப்படி அனைத்தையும் துறப்பதென்பது சாத்தியமானதும் அல்ல.

துறவி என்று சொல்லிக் கொள்பவர்கள் கூடப் பார்க்கப்போனால் எதையுமே துறப்பதில்லை என்பது இப்போது அடிக்கடி நிரூபணமாகிக் கொண்டிருக்கிறது. தாடி வளர்த்தவரோ, காவி உடுத்தவரோ துறவியல்ல. உண்மையான துறவி என்பது தோற்றத்தாலோ செய்கையாலோ தெரிவதல்ல. தன்னை அறிந்தவராய், தன்னில் தோய்ந்தவராய், செய்பவை எல்லாமே செய்விக்கப்படுபவை என்பதை உணர்ந்துகொண்டு விட்ட ஞான நிலையில், செயலிலே ஆசையின்றி, அச்செயலுக்கான பலனிலும் எதிர்பார்ப்பு எதுவுமின்றி, நடுநிலை மன நிலையில் இருந்து செய்துகொண்டு போகின்றவரே உண்மையான துறவியாவார்.

நம் நாட்டில் குரங்காட்டி ஒருவன் வீதியில் ஒரு குரங்கை வைத்துக்கொண்டு வித்தைகள் காட்டிக் காசு கேட்பான். அந்தக் குரங்கு செய்வதை வேடிக்கை பார்த்தால் ஒரு உண்மை விளங்கும். அந்தக் குரங்கு தான் செய்பவற்றோடு தனக்கு எந்தவித சம்பந்தமும் இல்லாதது போல் குரங்காட்டி சொல்வதைக் கடனே! என்பதுபோல் செய்யும். அத்தைக்கு தண்ணிக்குடம் தூக்கடா ராமா! என்று குரங்காட்டி சொன்னவுடன் ஒரு சின்ன சொம்பைத் தலையில் தூக்கி வைத்துக்கொள்ளும். நடடா, ராமா! என்று கயிற்றைச் சுண்டினால் அங்கும் இங்கும் சிறிது நடக்கும். தண்ணியைக் குடடா ராமா! என்றவுடன் செம்பைத் தூக்கிப் போட்டு விட்டுப் போய்விடும். இதைப்போல் ஒவ்வொன்றையும் அது செய்யும்போது, குரங்காட்டியின் கட்டளை, குரங்கின் செயலாக வெளிப்படுமே தவிர. குரங்கு தானாகச் செய்வதாக எதுவுமே இருக்காது. இது தான் சந்நியாசம். அதற்குச் செய்வ தற்கு ஒன்றுமே இல்லை. எஜமான் சொல்கிறானே என்பதற்காக அது செய்கிறது. அவ்வளவுதான். அடிக்குப் பயந்து கொண்டு செய்கிறது, ஆகாரத்தின் மீது விருப்பம் வைத்து செய்கிறது என்ற வாதமெல்லாம் இங்குத் தேவையில்லை. அவன் சொல்வதை அப்படியே செய்து விட்டு ஓரமாகப் போய் உட்கார்ந்து விடுகிறது அல்லவா? அதைத்தான் நாம் இங்கு சிந்திக்க வேண்டும்.

ஆன்ம விசாரணையில் ஈடுபட்ட ஒருவர் தன்னையும் தனக்குள் இருக்கின்ற ஆத்மாவையும் ஆராய்கின்றபோது, உயிராகிய ஜீவனை ஈகோ என்றும், அந்த



ஜீவன் இயங்குவதற்குக் காரணமான ஆத்மாவை நான் என்றும் ஞானத்தால் பிரித்துப் பார்த்து அறிய முடியும். இப்படி ஆத்மாவை நான் என்று அறிந்தபின், வரையறைகளுக்கு உட்பட்ட நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஜீவனை அகந்தை என்றுஅடையாளம் காண முடியும். நான் என்று நினைத்திருந்த இந்த அகந்தையைத் துறந்து, ஆத்மாவே நான்! என்று அறிந்து வாழ்பவன் - சந்யாசி, துறவி, ஞானி, ஜீவன் முக்தன், தத்வதர்சி என்றெல்லாம் அழைக்கப்படுகின்றான்.

ஞானத்தின் மூலமே ஒருவர் இந்நிலையை அடைய முடியும். சத் என்பது ஆத்மா. சத்து வேறு. அசத்து வேறு. சைதன்யம் வேறு. ஜடம் வேறு. சைதன்யம அழிவற்றது. ஜடம் அழிந்துபோவது. சைதன்யம் விடுபட்டு சுதந்திரமாக இருப்பது. ஜடம் பந்தப்பட்டிருப்பது. சைதன்யம் சுத்தம். ஜடம் அசுத்தம். சைதன்யம் சாசுவதம். ஜடம் அசாசுவதம். அதாவது நிலையற்றது. சைதன்யம் சுகமாய் இருப்பது. ஜடம் துக்க மயம்.

ஆனால் இதில் ஆச்சர்யம் என்னவென்றால் நாம், ஜடமாகிய இந்த உடலை சைதன்யமாகவும், சைதன்யமாகிய ஆத்மாவை ஜடமாகவும் நினைத்திருக்கின்றோம். இந்த அறியாமை போக வேண்டுமெனில் ஜடத்தை ஜடமென்றும், சைதன்யத்தை சைதன்யமென்றும் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இப்படித் தெரிந்துகொண்டு விட்டால் துக்கம் விலகிவிடும்.

நான் சுத்த சைதன்யம். இந்த சரீரம் வெறும் ஜடம். சரீரத்தை ஒரு நாளும் சைதன்யமாக்க முடியாது. சைதன்யத்தை ஒருக்காலும் ஜடமாக்க முடியாது. இதைத் தெரிந்துகொண்டுவிட்டாலே முக்தி. இது தான் தத்துவ ஞானம். இந்த ஞானத்தைப் பெற விரும்புபவர்கள், தெளிவாகப் புரிந்துகொள்ள விழைபவர்கள் எப்படியாவது சைதன்யத்தைப்பற்றிக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். சரியான ஸத் சங்கத்தைத் தேடிப்போய் ஆன்மாவைப் பற்றிக் கேட்டுக்கொண்டே இருந்தால் தான், இந்த சம்சாரம் என்ற தீப் பிடித்து எரிகின்ற காட்டுக்குள்ளே சிக்கி எரிந்து சாம்பலாகிப் போகாமல் தப்பிக்க முடியும்.

சிறுவனான துருவன் இதைத்தான் விஷ்ணுவைத் தரிசித்தபோது கேட்டான். 'இந்தப் பிறவியில் நீ கேட்டு வந்த ஆட்சி பீடத்தையும், அதிகாரத்தையும் ஏற்றுக் கொண்டு ராஜ்ஜியத்தை ஆண்டு வருவாய். அடுத்த பிறவியில் உனக்கு முக்தி கிடைக்கும்!' என்று பகவான் அருள் புரிந்தார். அதைக்கேட்ட துருவன் அழுதுகொண்டே நாட்டிற்குத் திரும்பினான்.

அவன் ஏன் அப்படி அழுதான் என்றால், சிந்தாமணி நவரத்தினமாகிய ஆத்ம விடுதலையையே தரக்கூடிய பரம்பொருளிடம் வெறும் கண்ணாடித் துண்டைக் கேட்பதுபோல், மூடனான நான், ராஜ்ய பரிபாலனம் வேண்டும், பதவி வேண்டும் என்று கேட்டேனே! என் புத்தி சதி செய்துவிட்டதே! என்று தலை யில் அடித்துக்கொண்டு அழுதானாம். ஸ்ரீமத் பாகவதம் சொல்கின்ற கதை இது.

நாமும் கோயில்களுக்குச் சென்று செலுத்துகின்ற பிரார்த்தனைகளெல்லாம் இப்படிப் பட்டதாகத்தானே இருக்கிறது. எனக்கு வியாதி போக வேண்டும். பெண்ணுக்குக் கல்யாணம் ஆக வேண்டும். குடும்பத்திற்கு வாரிசு பிறக்க வேண்டும் என்ற அளவில் தான் நாம் விழுந்து விழுந்து வேண்டிக்கொள்கிறோமே தவிர, ஆத்ம ஞானத்தைப் பெற்று ஜென்மம் கடைத்தேற வேண்டும் என்று வேண்டுகின்றோமா?

காஞ்சி பரமாச்சார்யார், 'சனாதன தர்ம நெறியின் அடிப்படையில் ஒரு பீடாதிபதிகளாக, ஆன்மீகத்தைச் சொல்லக்கூடிய தகுதியில் நான் இருக்கின்ற நிலையில், என்னிடத்தில் வருபவர்களெல்லாம் ஆத்மஞானத்தைப் பற்றி ஒரு கடுகளவும் எதுவுமே கேட்காமல், படிப்பு வரணும், பதவி வேணும், சொத்து கிடைக்கணும், பேத்திக்குக் குழந்தை பிறக்கணும்னு இப்படி அழியக்கூடிய உலக சம்பந்தமான ஆசிகளையே என் கிட்டே கேட்டு வந்து நிற்கிறார்களே! என்று சொன்னாராம். சிந்திக்க வேண்டிய விஷயம் இது. அனைத்துமாய் இருக்கின்ற ஆண்டவனிடம் அற்ப விஷயங்களையா கேட்டுப் பெற அழுவது? மாணிக்கவாசகர் பாடியதைப்போல 'பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி, மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே'என்று அஞ்ஞானத்தை அகற்றுகின்ற வழியைக் கேட்க வேண்டாமா? எதையோ சொல்லப்போய், விஷயம் எங்கேயோ போய் விட்டது. என்றாலும் பரவாயில்லை. அறிய வேண்டியதை அறிய முற்படும் போது இவற்றையெல்லாமும் பற்றிச் சிந்திக்கத் தான் வேண்டியிருக்கிறது.




இந்தியா வந்திருந்த ஐ.நா. பொதுச்செயலர் பான்கீமூன் டில்லியில் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து பேசினார்.

இந்தியச் செய்திகள்

'தமிழகத்துக்கு, ஒரு சொட்டு காவிரி நீர் கூட விடவில்லை. கர்நாடகாவில் நல்ல மழை பெய்து, தண்ணீர் அதிகரிக்கும் வரை தமிழகத்துக்கு தண்ணீர் விடும் திட்டமே இல்லை,'' என்று முதல்வர் சதானந்த கவுடா உறுதிபட கூறியுள்ளார்.

தமிழகத்துக்கு தண்ணீர் விடவில்லை: சதானந்த கவுடா அறிவிப்பு



சாம்ராஜ் நகருக்கு செல்லும் முன், பெங்களூருவில் தன் வீட்டு அலுவலகமான கிருஷ்ணாவில், முதல்வர் சதானந்த கவுடா கூறியதாவது:காவிரி இரண்டாவது கட்ட, நான்காவது பேஸ் பகுதியின் கீழ் பகுதியில், சில பராமரிப்பு பணிகள் நடந்துள்ளன. எனவே, அப்பகுதியில் சற்று தண்ணீர் கசிந்திருக்கலாம். தமிழகத்துக்கு, எந்த வகையிலும் தண்ணீர் விடப்படவில்லை.காவிரி நதியிலிருந்து, தமிழகத்துக்கு நீர் விடப்பட்டுள்ளது என்பதில், எந்த உண்மையுமில்லை.

இது குறித்து, அதிகாரிகளிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளது. ஒரு துளி தண்ணீர் கூட, தமிழகத்துக்கு செல்லவில்லை.


எனவே, இது குறித்து மாநில விவசாயிகள் ஆதங்கப்பட தேவையில்லை.

மாநில விவசாயிகள் நலனை காப்பதில் அரசு உறுதியாக உள்ளது என்றார்.

புனே வீட்டில் வசிக்கும் முடிவை கைவிட்டார் ஜனாதிபதி பிரதிபா

ஜனாதிபதி பிரதிபா, பதவியில் இருந்து ஓய்வு பெற்றபின் வசிப்பதற்காக, புனேயில் பங்களா கட்டுவதற்காக, நிலம் ஒதுக்கப்பட்டதில் சர்ச்சை எழுந்ததை அடுத்து, அங்கு வசிக்கும் முடிவை, அவர் கைவிட்டுள்ளார்.

ஜனாதிபதி பிரதிபாவின் பதவிக் காலம், வரும் ஜூலை மாதத்துடன் முடிவடைகிறது. பதவியில் இருந்து ஓய்வு பெற்றதும், அவர் வசிப்பதற்காக, பங்களா கட்டுவதற்கு, மகாராஷ்டிர மாநிலம் புனேயில், அவருக்கு நிலம் ஒதுக்கப்பட்டது. இந்த இடம் ராணுவத்துக்கு சொந்தமானது. விதிமுறைகளை மீறி, அனுமதிக்கப்பட்ட அளவை விட, ஆறு மடங்கு அதிகமாக நிலம் (2.6 லட்சம் சதுர அடி) ஒதுக்கப்பட்டதாக சர்ச்சை எழுந்தது. ஓய்வு பெற்ற ராணுவ வீரர்கள், போரில் உயிர் நீத்த வீரர்களின் விதவை மனைவிகளுக்காக ஒதுக்கப்படும் நிலத்தில், இந்த முறைகேடு நடந்ததாகவும் புகார் கூறப்பட்டது.



இந்நிலையில், ஜனாதிபதி அலுவலகம் நேற்று ஒரு அறிக்கையை வெளியிட்டது. பணியில் இருந்து ஓய்வு பெற்றதும், ஜனாதிபதி வசிப்பதற்காக, பங்களா கட்டுவதற்கு நிலம் ஒதுக்கப்பட்டதை மையமாக வைத்து, சர்ச்சை எழுந்துள்ளது, கவலை அளிக்கிறது. ஒரு சிலர், இதை தவறாக பிரசாரம் செய்து வருகின்றனர். இதுகுறித்து, ஜனாதிபதி அலுவலகம் சார்பில் விளக்கம் கொடுக்கப்பட்டும், தொடர்ந்து தவறாக பிரசாரம் செய்து வருவது துரதிர்ஷ்டவசமானது.இந்த பிரச்னையை, போரில் உயிர் நீத்த ராணுவ வீரர்களின் விதவை மனைவிகளை முன்னிலைப் படுத்தியும் செய்தி பரப்புகின்றனர். நாட்டுக்காக தியாகம் செய்த வீரர்கள் மீதும், போரில் உயிர் நீத்த வீரர்களின் விதவை மனைவிகள் மீதும், மிகுந்த மரியாதை வைத்துள்ளார், ஜனாதிபதி. எனவே, நிலம் ஒதுக்கப்பட்டதில் எழுந்துள்ள அனைத்து சர்ச்சைகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் வகையில், பணி ஓய்வு பெற்றதும், புனேயில் உள்ள ராணுவத்துக்கு சொந்தமான இடத்தில் தங்கும் முடிவை, ஜனாதிபதி கைவிட்டுள்ளார். இவ்வாறு, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைத்தேர்தல் பிரசாரம்: புதுக்கோட்டைக்கு ஜெயலலிதா வருகிறார்



புதுக்கோட்டை தொகுதி இடைத் தேர்தல் ஜூன் 12-ந்தேதி நடக்கிறது. இதில் அ.தி.மு.க. வேட்பாளராக கார்த்திக் தொண்டைமான் போட்டியிடுகிறார். நேற்று முதல் அவர் பிரசாரத்தை தொடங்கினார். திருக்கோகர்ணம்இ திருவப்பூர் ஆகிய பகுதியில் திறந்த ஜீப்பில் வீதி, வீதியாக சென்று வாக்கு சேகரித்தார். அவருடன் மாவட்ட செயலாளர் டாக்டர் விஜயபாஸ்கர் எம்.எல்.ஏ. உள்பட கட்சி நிர்வாகிகள் பலர் சென்றனர். 28.04.2012 காலை புதுக்கோட்டையில் உள்ள மாவட்ட கட்சி அலுவலகத்தில் இடைத் தேர்தல் குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது.கூட்டத்தில் அமைச்சர்கள் ஓ.பன்னீர் செல்வம், செங்கோட்டையன், நத்தம் விசுவநாதன், கே.பி. முனுசாமி, என்.சுப்பிரமணியன், வேட்பாளர் கார்த்திக் தொண்டைமான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தேர்தல் பணிகள், வெற்றி வியூகம் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. வேட்பாளர் கார்த்திக் தொண்டைமானை ஆதரித்து முதல்-அமைச்சர் ஜெயலலிதா பிரசாரம் செய்வதற்காக புதுக்கோட்டை வருகை தர உள்ளார். இதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்பட உள்ளது. இதற்கிடையே ஜெயலலிதா ஹெலிகாப்டரில் வந்து இறங்குவதற்காக ஹெலிபேடு தளம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது.

அதாவது புதுக்கோட்டையில் இருந்து கறம்பக்குடி செல்லும் சாலையில் 5-வது கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள புதுப்பட்டியில் இடம் தேர்வாகி உள்ளது.


இந்த இடத்தினை அமைச்சர்கள் 28.04.2012 மாலை ஆய்வு செய்ய உள்ளனர்.

கர்நாடகாவில் சோனியாவுக்கு கறுப்புக்கொடி காட்டி போராட்டம்


கர்நாடக மாநிலம் தும்குர் மாவட்டத்தில் மட் என்ற இடத்தில் காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியாவுக்கு கறுப்புக்கொடி காட்டி பெண்கள் போராட்டம் நடத்தினர்.

போராட்டம் நடத்திய பெண்கள் உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

பெண்கள் இட ஒதுக்கீட்டை வலியுறுத்தி போராட்டம் நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



மகாராஷ்டிரா மாநிலத்தின் சுற்றுலாத்துறை தூதராக நடிகை மாதுரி தீட்ஷித்?



மகாராஷ்டிரா சுற்றுலா மற்றும் கலாச்சார துறையின் தூதராக பிரபல இந்தி நடிகை மாதுரி தீட்ஷித்தை நியமிக்க மாநில அரசு பரிசீலித்து வருகிறது. மாதுரி தீட்ஷித் புகழ் பெற்ற இந்தி நடிகையாக இருந்தவர். பின்னர் ஸ்ரீராம் நேனே என்பவரை திருமணம் செய்து கொண்டு அமெரிக்காவில் குடியேறினார்.

அவருக்கு குழந்தைகளும் உண்டு. இந்த நிலையில் அவர் மீண்டும் இந்தி சினிமாவில் நடிக்க முயன்று வருகிறார். இதற்காக மும்பை வந்துள்ளார்.

சமீபத்தில் இந்தி சினிமாவுக்கு ஆற்றிய சேவைக்காக அவருக்கு அமரர் தீனநாத் மங்கேஷ்கர் விருது வழங்கப் பட்டது.

இந்த நிலையில் மாதுரி தீட்ஷித்தை சுற்றுலா மற்றும் கலாச்சார துறையின் தூதராக நியமிக்க மகாராஷ்டிரா அரசு ஆலோசித்து வருகிறது. மாநிலத்தில் சுற்றுலா துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும். மகாராஷ்டிராவில் சுற்றுலாத்துறை பெரிய அளவில் வளர்ச்சி பெறவும் வாய்ப்பு உள்ளது.

எனவே மாதுரி தீட்ஷித்துக்கு மக்கள் மத்தியில் இருக்கும் வரவேற்பையும், எதிர்பார்ப்பையும், அவருக்கு இருக்கும் ரசிகர்கள் செல்வாக்கையும் பயன்படுத்த திட்டமிட்டுள்ளோம் என்று அதிகாரிகள் கூறினர்.

எல்லாவற்றுக்கும் மேலாக மாதுரி தீட்ஷித் மகாராஷ்டிராவை சேர்ந்தவர். மகாராஷ்டிராவின் பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் பிரதிபலித்து வருகிறார் என்றும் அவர்கள் கூறினர்.

இது தொடர்பாக மாதுரி தீட்ஷித்துடன் அதிகாரிகள் விரைவில் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று கூறப்படுகிறது. குஜராத் மாநிலத்துக்கு நடிகர் அமிதாப் பச்சனும், மேற்கு வங்க மாநிலத்துக்கு நடிகர் ஷாரூக்கானும் சுற்றுலா துறையின் தூதர்களாக நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

உங்களால் பார்க்க முடியாத வழிக்குப் பெயர் தான் அதிர்ஷ்டம். - அலெக்சாண்டர் போப்

அந்தரங்க அற்புதம்

ரமேஷ்பாபு, சென்ற்.

கேள்வி: எனக்கு வயது இருபத்தெட்டு. திருமணமாகி ஒரு வருடமாகிறது. என் மனைவியுடனான முன்விளையாட்டுக்களில் இருவருக்குமே பரஸ்பரம் திருப்தி கிடைக்கிறது. ஆனால், உறவின் உச்சக்கட்டத்தில் நான் மிக விரைவில் ஓய்ந்துவிடுகிறேன். பதினைந்து நொடிகள் நீடித்துச் செய்ய முடியவில்லை. என் மனைவி தனக்குத் திருப்தியாக இருப்பதுபோல் காட்டிக்கொண்டாலும் அவர் திருப்தியாக இல்லை என்பதை என்னால் உணர முடிகிறது. அவரை நினைத்தால் பாவமாகவும் இருக்கிறது. ஒரு கட்டத்தில், என் நண்பரிடம் அவரை அழைத்துச்சென்று விட்டுவிடலாமோ என்று கூட நினைக்கத் தோன்றியது. அவரைத் திருப்திப்படுத்தவேண்டும். என்ன செய்யலாம்?

பதில்: நீங்கள் மிக நல்லவர். உங்கள் மனைவியின் சந்தோஷம் தான் முக்கியம் என்று நினைக்கும் நீங்கள் நிச்சயம் நல்லவராகத்தான் இருக்க வேண்டும். ஆனால், உங்கள் மனைவியை இன்னொருவருடன் இணைத்துவிட நீங்கள் தயாராயிருப்பது சற்று அதிகம்தான். தயவுசெய்து உங்கள் திட்டத்தை உங்கள் மனைவியிடம் சொல்லிவிடாதீர்கள். நிச்சயமாகக் காயப்பட்டுப்போவார். இந்தப் பிரச்சினை உங்களைப்போன்றே பலருக்கும் இருக்கிறது.

உறவில் நீடித்திருப்பது ஒன்றும் அவ்வளவு சிரமமான காரியம் அல்ல. உறவின்போது இயல்பு கூடுதலாக இருந்தால் இனிமையும் அதிகமாகவே இருக்கும். உங்களைப் போன்றவர்களுக்கான சில அறிவுரைகள் கீழே.

மறக்க முடியாத உறவு வேண்டும் என்று நினைத்தால் முதலில் மனதை அமைதிப்படுத்துங்கள். இன்று என் மனைவியை உச்சத்துக்கு அழைத்துச் செல்வேன் என்று நம்புங்கள். வேலை, நண்பர்கள், காரைத் திருத்த வேண்டும் என்று வேறெந்த சிந்தனைகளையும் படுக்கையறைக்குள் அனுமதிக்காதீர்கள். உறவின்போது, மனைவிய சந்தோஷப்படுத்துகிறேன் என்று நினைத்துக்கொண்டு கடினமாக எதிலும் இறங்காதீர்கள். மென்மையாகக் கையாளுங்கள். எப்படி சந்தோஷப்படுத்துகிறேன் பார் என்று கடும் வேகத்தில் களத்தில் குதித்தால் அது கஷ்டத்தில் தான் கொண்டு போய் விடும். எனவே இயற்கையான வேகமே போதுமானது. சரியான சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதை சரியாக பயன்படுத்திக் கொள்பவன்தான் புத்திசாலி. வீட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்த கதையாகி விடக் கூடாது.

வேகமாக இருப்பதை விட விவேகமாக இருப்பதுதான் இயல்பான, இனிமையான செக்ஸ் உறவுக்கு சிறந்தது. இது பெண்களை விட ஆண்களுக்குத்தான் முக்கியமாக தேவை.

விதம்விதமாக முயற்சிப்பதில் தவறில்லை. அதேசமயம், அது விரக்தியில் கொண்டு போய் விட்டுவிடக் கூடாது என்பதும் முக்கியமானது. கடுமையான முயற்சிகளை பெரும்பாலான பெண்கள் விரும்புவதில்லை. அமைதியான, ஆழமான, நீடித்த உறவைத்தான் பெரும்பாலான பெண்கள் விரும்புவார்கள்.

அதேபோல மனம் நிறைய கற்பனைகளை அடுக்கி வைத்துக் கொண்டு 'ஆட்டத்தில்' இறங்கக் கூடாது. அது எதிர்பாராத ஏமாற்றங்களுக்கு வித்திட்டு விடலாம். எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல், களத்தில் இறங்கினால் எதிர்பாராத இன்பம் கிடைத்து மகிழ்ச்சியையும், கூடலையும் உறுதியாக்கும், உற்சாகப்படுத்தும்.

அதேசமயம், படுக்கையில் போய் உட்கார்ந்து கொண்டு 'பிளான்' செய்வதும் தவறு. செங்கல், ஜல்லி, மணல், சிமென்ட் இல்லாமல் கட்டடம் கட்டப் போனால் எப்படி இருக்குமோ அப்படித்தான் அதுவும். கொஞ்சம் கற்பனை, கொஞ்சம் எதிர்பார்ப்பு, கொஞ்சம் உத்திகள் என சின்னச் சின்ன முன்னேற்பாடுகளுடன் போனாலே போதுமானது. அதாவது அடிப்படை இருக்க வேண்டும். அபரிமிதமான திட்டமிடல்கள் இங்கு அவசியமற்றவை.

உங்கள் மீது உங்களது மனைவிக்கு ஆர்வம் கலந்த எதிர்பார்ப்பு இருக்க வேண்டுமே தவிர, 'இண்டைக்கு என்ன செய்யப் போறாரோ தெரியேல்ல என்ற எண்ணம் மட்டும் வந்து விடவே கூடாது.

அதேபோல 'பொசிஷன்' குறித்தும் கண்ட கண்ட எதிர்பார்ப்புகளுடன் போகக் கூடாது. உங்களுக்கு எது வசதியோ அதை மட்டுமே முயற்சித்தால் போதுமானது. அதனால் எந்த பாதிப்பும் நிச்சயம் வராது. அதில் அப்படி பார்த்தோமே, செய்து பார்த்தால் என்ன என்று முயற்சித்தால் சில நேரங்களில் ஏமாற்றமோ அல்லது கசப்பான அனுபவமோ ஏற்படக் கூடும். அதனால் முடிந்ததை செய்யுங்கள் - முக்கியமாக உங்களது மனைவிக்குப் பிடித்தமானதை மட்டும் செய்யுங்கள். இது மிகவும் சௌகரியமானது, பாதுகாப்பானதும் கூட.

செக்ஸ் என்பது கற்றுக்கொள்வதுதான். எல்லாம் தெரிந்த ஏகாம்பரம் அல்ல அனைவரும். முடிவில்லாமல் நீளும் கல்விதான் இந்தக் கலவி என்பதை புரிந்து கொண்டால் நிச்சயம் ஒவ்வொரு உறவும் மறக்க முடியாத அனுபவமாக அமையும்.

இன்னொரு முக்கியமான விஷயம். எதுவுமே முழுமையானதல்ல. முழுமையானது என்று இந்த உலகில் எதுவுமே கிடையாது. எனவே இன்று சரியில்லையே என்ற



ஏமாற்றத்துடன் தூங்கப் போகாதீர்கள். நாளை இதை விட சிறந்த இரவாக அமையலாம் இல்லையா?. எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் தானே வாழ்க்கை!

-★★★★★★★★★★★★★★★★★★★-

விஷாந்த், ஒன்றாரியோ

கேள்வி: என் நண்பர்கள், தாங்கள் ஒரு கிழமையில் ஏழு தடவைகளுக்கு மேல் தங்கள் மனைவியரை சந்தோஷப்படுத்துவதாகச் சொல்கிறார்கள். இன்னும் சிலர் ஒரு நாளைக்கே இரண்டு, மூன்று தடவைகள் என்கிறார்கள். இது சாத்தியமானதுதானா? எனக்கு அப்படி இல்லையே? என் மனைவியும் அப்படி எதிர்பார்ப்பவர் போல் தோன்றவில்லை. கட்டாயம், இப்படி உடலுறவு கொள்ளத்தான் வேண்டுமா?

பதில்: உங்கள் கையின் ஐந்து விரல்களுமே ஒன்றுபோல் இருப்பதில்லை. அப்படியிருக்கையில், உங்களுக்கு மட்டும் ஏன் இப்படி என்று கேட்டால் என்ன சொல்வது? உடலுறவு கொள்வது அவரவர்களுடைய உடலில் சுரக்கும் ஹார்மோன்களின் அளவைப் பொறுத்து ஆளுக்கு ஆள் மாறு படும். சிலருக்குத் தினமும் உடலுறவு இல்லாமல் முடியாது. சிலருக்கு வாரத்திற்கு இரண்டு முறை, மற்றும் சிலருக்கு மாதம் இருமுறை இருந்தால் கூடப் போதும்.

அவரவர்களுடைய உடற்கூற்றைப் பொறுத்து உடலுறவின் தேவை ஏற்படும். உடலுறவு கொள்ளாத பிரம்மசாரிகளைவிடக் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டவர்களே அதிக ஆயுள் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். மனிதனுக்கு உணவுக்கு அடுத்தபடியாக உடலுறவு இரண் டாவது இடத்தை வகிக்கிறது.

மனிதன் உணவு இல்லாமல் உயிர் வாழ முடியாது. அதைப் போல, உடலுறவு இல்லாமல் மனிதன் தொடர்ந்து வாழ முடியாது. அத்துடன் உடலும் உள்ளமும் வளமாய் இருந்தால் உயிர் உடலில் நீண்ட நாள் இருக்கும். உடலையும், மனத்தையும், வளமாய் வைத்திருக்க உடலுறவு உதவுகிறது என்பதை மருத்துவ விஞ்ஞானம் நிரூபிக்கிறது.

காதலும், காமமும், உடலுறவும் வாழ்க்கையில் இன்றியமையாதவை. அவற்றைச் சொல்லவேண்டிய முறையில் சொன்னால் தான் மகாபாரதம், இராமாயணம், சாகுந்தலம், சங்கப் பாடல்கள், திருக்குறள் உட்பட எல்லா இலக்கியங்களையும் சுவைத்து அனுபவிக்க முடியும். மணமாகாத வாலிபர்களின் இச்சையைத் தூண்டப் பச்சைபச்சையாக உடலுறவுகளை வர்ணித்துச் சதை வியாபாரம் செய்யும் மலிவுப்பதிப்புகள், சாலையோரப் புத்தகக் கடைகளில் மறைத்து விற்கப்படுகின்றன. அவைகள் எல்லாம் ஆபாசமானவை. இவற்றை திருமணத்திற்கு முன்பாக வாசித்து சுய இன்பத்தில் ஆழ்ந்துபோனவர்கள் பலருக்கும் திருமணத்திற்குப் பின் இது போன்ற நிலை தோன்றுகிறது. திருக்குறளில் காமத்துப்பால் என்று பிரித்துத் தனியாகப் பாலுறவைப்பற்றி எழுதியுள்ளார். சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட காமசூத்திரத்தைத் தமிழில் அதிவீரராம பாண்டியன் கொக்கோகம் என்று எழுதியுள்ளார். இந்நூல், பாலுறவுபற்றி விரி வாகக் கூறுகிறது. வடநாட்டில் கஜுரா, கோனார்க் கோவிலில் உடலுறவு நிலையை அற்புதச் சிற்பங்களாக வடித்துள்ளனர். தென்னிந்தியக் கோவில்களிலும் இத்தகைய உடலுறவு நிலைச் சிற்பங்களைக் காணலாம். இவை, கலவி குறித்த சரியான தகவல்களைத் தருகிறது.

மதம், இதிகாசம், இலக்கியம், சிற்பம், சித்திரம் அனைத்திலும் பாலுறவு பற்றி எழுதப்பட்டுள் ளது. அது தவறானது என்றால் அவ்வாறு எழுதுவார்களா? மனித இனம் ஆதியிலிருந்து இன்றுவரை பாலுறவின் பற்று கொண்டிருக்கிறது. காரணம், அதில் கிடைக்கும் இன்பத்திற்கு ஈடான வேறு இன்பம் இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை.

எல்லாப் பிரச்சினைகளையும், நோய்களையும் ஒரே ஒரு மருந்தால் தீர்க்க முடியுமா முடியும்; அது குடும்ப வாழ்க்கையில் உள்ள உடலுறவு ஒன்றால்தான், தலைவலி, முதுகு வலி, இடுப்புவலி, மனநோய் எல்லா வற்றையும் தீர்க்க முடியும். உடலுறவுதான் உடலிலுள்ள தடுப்புச் சக்தியான இம்யூன் என்னும் நோயெதிர்ப்புச் சக்தியைத் துரிதப்படுத்துகிறது. இதனால் அனைத்து உடல் வலிகளும், தசை வலிகளும் நரம்பு வலிகளும், மன நோயும் தீருகின்றன.

ஒருவன் குடும்ப வாழ்க்கையில் உடலுறவு கொள்ளாதவனாய் இருந்தால் மனத்தில் இறுக்கமும் ஒரு வேகமான கோபமான நிலையும் ஏற்படும். இதற்குக் காரணம், உடலுறவு கொள்ளாததால் அட்ரினலின் *(Adernalin)* ஹார்மோன் சுரப்பது தான். உடலுறவு கொள்வதால் உயர் இரத்த அழுத்தம் இதய நோயைக் குறைத்து இரத்தத்தை விருத்தியடையச் செய்யும். பெண்களுக்கு மார்பில் கட்டி ஏற்படாது சளி பிடிக்காது;

அடிக்கடி உடலுறவு கொள்வதால் தேவையான அளவு இரத்த ஓட்டம் அதிகரித்துப் பெண்களின் உடலிலுள்ள அனைத்து வலிகளும் தீர்ந்து விடும். உடலுறவின் போது ஹார்மோன் சுரப்பது தூண்டப்பட்டுப் பல விதமான இரசாயனப் பொருள்கள் உற்பத்தியாகின்றன. அவை வலி நிவாரணியாக, மருந்தாகப் பெண்களுக்கு அமைந்து, நோய் எதிர்ப்புச் சக்தி ஏற்படும். சரியான அளவில் அடிக்கடி உடலுறவு கொள்பவர்களுக்குச் செரிமானம் அதிகமாகிப் பசி எடுக்கும் ; நல்ல தூக்கம் வரும்; அதனால் மன இறுக்கம், கவலை தீரும்; மனத்தில் அமைதி, நிதானம், மகிழ்ச்சி ஏற்படும்.

இன்பம் நீளுமா?

கதிர்ஒளி வாசகர்களுக்காக! எவ்வளவுதான் நாம் கல்வித்தகுதி கொண்டிருந்தாலும், தொழில் ரீதியாக, பணி ரீதியாக வெற்றியடைந்த மனிதர்களாயிருந்தாலும், நமது பழக்க வழக்கங்கள் அத்தனை உயர்வானதா இருப்பதாகத் தெரியவில்லை என்பதை, அந்தரங்கம் பகுதிக்கு வரும் மின்னஞ்சல்களே வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றன. பல அஞ்சல்கள் முகம் சுளிக்கும் அளவுக்கு இருந்தாலும், அவற்றின் உண்மைத்தன்மையில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஏனெனில், அந்த அஞ்சல்களில் விரசத்துக்கும் மேலான ஆதங்கங்கள் வெளிப்படையாகத் தெரிவதே. இம்மாதிரியானவர்களுக்காக பொதுவாக இந்த விளக்கம். இந்தப் பிரச்சினை குறித்து அஞ்சல் அனுப்பியவர்கள் அனைவருக்கும் இது பதிலாக அமையட்டும்.

பெண்கள் உடலுறவிற்கு பின்னர் ஆண்களின் அரவணைப்பையே விரும்புகிறார்கள். ஆனால் தங்களுடைய செயற்பாட்டை முடித்த பின்னர் நித்திரை அடிப்பதால் - சிலர் குறட்டை வேற - பெண்கள் தனிமை ஆக்கப்பட்டது போல உணர்வார்கள். உங்களால் நித்திரையை அடக்க முடியாத சந்தர்ப்பத்தில் நீங்கள் படுக்கையில் செய்கிறவற்றை விரைவாக செய்து முடிக்காது, மெதுவாகச் செய்யுங்கள்.

சில ஆண்களுக்கு பெண்களை எவ்வாறு கட்டியணைத்து முத்தம் கொடுப்பது என்று கூடத் தெரியாதிருக்கிறது. ஆங்கிலப் படங்களையும் பலான படங்களையும் பார்த்துவிட்டு அதில் உள்ளவாறு செய்ய வெளிக்கிட்டு ஏடாகூடமாகிய ஏராளமான சந்தர்ப்பங்கள் அஞ்சல்களாக எம்மிடம் இருக்கின்றன.

பெண்கள் சில இடங்களில் முத்தம் இடுவதை விரும்புவது கிடையாது. பெண்களின் மன நிலையை உணர்ந்து அவர்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்து செயற்பட்டால் திருமண வாழ்க்கையில் செழிப்பு ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை.

பெரும்பாலான ஆண்கள் தங்களுடைய அழுத்தங்களையும், கோபங்களையும் குறைப்பதற்காக உடலுறவில் ஈடுபடுகிறார்கள். பெண்கள் இப்படியான சந்தர்ப்பங்களை விரும்புவது கிடையாது. இது பெண்களின் மன அழுத்தத்தை அதிகரிக்க செய்து பெண்களிற்கு கணவனின் மேல் வெறுப்பை உண்டாக்கி விடுகிறது. இப்படியான சந்தர்ப்பங்களின் போது விடயங்களை படுக்கை அறையின் வெளியே வைத்து கதைப்பது தான் உகந்தது.

தேவை ஏற்படும் போது மட்டும் அணைத்தல் என்பது பொதுவாக ஏற்படுகின்ற ஒரு பிரச்சனையாகவே இருந்து வருகிறது. மற்றைய நேரங்களிலும், பகலிலும் மனைவியை அடித்து துவைத்தெடுத்து விட்டு இரவு நேரங்களில் மட்டும் தங்களுடைய காரியம் முடிவதற்காக அன்பாகவும், மனைவிக்கு உதவி செய்கிறோம் என்ற போர்வையில் சில வேலைகளை சமையல் அறையில் செய்ய போய் ஏடா கூடமாகிவிடுகிறது.

அனேகமான பெண்களிற்கு உடலுறவிற்கு முன்னதாக 5 நிமிடங்கள் தேவைப்படுகிறது. பலான படங்களில் வருகின்ற பெண்களை போல இருக்க வேண்டுமென நினைத்தால் இது நிஜ வாழ்க்கையில் நடக்க சாத்தியம் முற்றாக இல்லை. திருமணமான பெண்கள் தங்களுடைய விருப்புங்களை சொல்லுவதற்கு ஆண்கள் நேரம் கொடுப்பதில்லை.

ஆகையால், பரஸ்பரம் இன்று உறவு கொள்ளலாமா? என்பதை அறிந்துகொள்ள ஒரு கடவுச்சொல்லை வைத்துக்கொள்ளுங்கள். வீட்டில் நீங்கள் தனியாகத்தான் இருந்தாலும், பலர் இருப்பதுபோல் பாவனை செய்யுங்கள். ஏனெனில், அப்போதுதான் கூடலில் ஒரு போதை இருக்கும். இன்றோடு நமது வாழ்க்கை முடிந்துபோகிறது என்பதுபோல் கூடுங்கள். கண்களைத் திறந்து நேருக்கு நேர் பார்த்தபடி உறவில் இறங்குங்கள். உறவுக்குப் பின், கணவனை-மனைவியைக் கட்டியணைத்துக் கொண்டு துயிலப் பழகுங்கள். இதுதான், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் கொடுத்துக்கொண்ட இன்பத்துக்குச் செய்யும் நன்றி தெரிவிப்பாக அமையும்.

அந்தரங்க அற்புதம்

கட்டுரை தொடர்பான தங்களுடைய கருத்துக்களை யும், உங்களுக்குத் தேவைப்படும் அந்தரங்க ஆலோசனைகளையும் அனுப்ப வேண்டிய முகவரி:

அந்தரங்க மனவள ஆலோசகர்:

அந்தரங்க அற்புதம் பகுதி

மின்னஞ்சல்: antharangaminfo@gmail.com

உலகச் செய்திகள்

சூடான் எல்லையில் அவசரநிலை அறிவிப்பு

தெற்கு சூடான் எல்லையில் உள்ள பகுதிகளில், சூடான் அரசு அவசர நிலையை அறிவித்துள்ளது. சூடான் நாட்டில், 20 ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டு சண்டையில், 15 லட்சம் பேர் பலியாயினர். ஐ.நா., தலையீட்டின் பேரில், கடந்த ஆண்டு தெற்கு சூடான், தனி நாடாக உருவானது.

சூடான் மக்கள் விடுதலை இயக்கத்தினர் தற்போது தெற்கு சூடானை ஆட்சி செய்து வருகின்றனர். இரு நாட்டு எல்லை யில் உள்ள ஹெக்லிக் என்ற இடத்தில், எண்ணெய் வளம் அதிகமாக உள்ளது. இதை தங்களிடம் ஒப்படைக்கும்படி சூடான் அரசு, தெற்கு சூடானை எச்சரித்து வந்தது.

இதற்கு தெற்கு சூடான் மறுப்பு தெரிவித்ததால், இரு நாடுகளுக்கிடையே சமீபத்தில் சண்டை நடந்தது.

இந்த சண்டையில், இருதரப்பிலும் 22 வீரர்கள் பலியாயினர்.



ஹெக்லிக் பகுதியிலிருந்து, தெற்கு சூடான் தனது படையை வாபஸ் பெற வில்லையென்றால், அந்நாட்டுடன் போர் நடக்கும்' என, சூடான் அதிபர் ஓமர் அல் பஷீர் தெரிவித்திருந்தார். 'சண்டை நடந்தால், தெற்கு சூடானுக்கு ஆதரவளிப்போம்' என, உகாண்டா தெரிவித்திருந்தது.

நிலைமை விபரீதமாக போவதை கண்ட ஐ.நா., பொதுச் செயலர் பான் -கி- மூன், சர்ச்சைக்குரிய ஹெக்லிக் பகுதியிலிருந்து, தெற்கு சூடான் தனது படைகளை வாபஸ் பெற வேண்டும் எனக் கூறியிருந்தார். இதைத் தொடர்ந்து, தன்னுடைய படைகளை வாபஸ் பெறுவதாக, தெற்கு சூடான் அதிபர் சால்வா கிர் அறிவித்தார். இருப்பினும், சூடான் படையினர் தொடர்ந்து குண்டு வீசி வருவதாக, தெற்கு சூடான் தெரிவித்துள்ளது. இதற்கிடையே தெற்கு சூடானையொட்டிய கார்டோபன், வொயிட் நைல், செனார் ஆகிய பகுதிகளில் சூடான் அதிபர் அல் பஷீர், அவசர நிலையை அறிவித்துள்ளார். இதன் மூலம் தெற்கு சூடானுடனான வர்த்தகம் துண்டிக்கப்பட்டுள்ளது. அவசர நிலையால், போர் தொடரக்கூடிய அச்சம் ஏற்பட்டுள்ளது.

லிபிய அதிபரிடமிருந்து பெற்றார்: ரூ.353 கோடி தேர்தல் நிதி பிரான்ஸ் அதிபர் மீது புகார்



கடந்த 2007 தேர்தல் பிரசாரத்துக்காக லிபிய முன்னாள் அதிபர் முவாம்மர் கடாபியிடம் இருந்து, பிரான்ஸ் அதிபர் நிகோலஸ் சர்கோசி ரூ.353 கோடி பெற்றதாக செய்தி வெளியாகியுள்ளது. பிரான்சில் இப்போது நடக்கும் அதிபர் தேர்தலில் இப்போதைய அதிபர் சர்கோசி 2வது முறையாக போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து போட்டியிட்ட பிரான்காய்ஸ் ஹாலண்டுக்கும், சர்கோசிக்கும் இடையேயான இறுதி வாக்கெடுப்பு (2வது) விரைவில் நடக்க உள்ளது.

இந்நிலையில், 2007ம் ஆண்டு அதிபர் தேர்தல் பிரசாரத்துக்காக சட்ட விரோதமாக கடாபியிடமிருந்து ரூ.353 கோடி பெற்றதாக வெளியான செய்தி பிரான்சில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரான்ஸ் சட்டப்படி தேர்தல் பிரசாரத்துக்காக ரூ.5.3 லட்சத்துக்கு மேல் கரன்சியாக நன்கொடை வாங்குவது குற்றமாகும். ஆனால், சர்கோசி ரூ.353 கோடி வாங்கியுள்ளார்.

2ம் கட்ட வாக்குப் பதிவில் சர்கோசி, ஹாலண்டுக்கும் இடையே கடும் போட்டி நிலவும் என்ற நிலையில், சட்ட விரோதமாக பணம் பெற்றதாக வெளியான செய்தி சர்கோசிக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

சர்கோசியில் செல்வாக்கு புகழை குறைக்கும் வகையில் ஹாலண்டின் ஆதரவாளர்கள் இதுபோன்ற பொய்யான செய்தியை வெளியிட்டுள்ளதாக சர்கோசியின் செய்திதொடர்பாளர் நதலியெ கொசியுஸ் கோ குற்றம் சாட்டியுள்ளார்.

தென் ஆப்ரிக்காவில் சுதந்திரமாக நடந்த தேர்தல் தினத்தையொட்டி, 35 ஆயிரம் கைதிகள் விடுதலை



தென் ஆப்ரிக்காவில் சுதந்திரமாக நடந்த தேர்தல் தினத்தையொட்டி, 35 ஆயிரம் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தென் ஆப்ரிக்கா வெள்ளையர் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு, கடந்த, 94ம் ஆண்டு தேர்தல் நடந்தது. இதில் நெல்சன் மண்டேலா போட்டியிட்டு அதிபரானார். இந்த நாளை கொண்டாடும் விதமாக அந்நாட்டில் பல்வேறு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இதற்கிடையே இந்த தினத்தையொட்டி பல்வேறு சிறைகளில் சிறு குற்றங்களுக்காக அடைக்கப்பட்டிருந்த, 35 ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

பாலியல் பலாத்காரம், போதைப் பொருள் கடத்தல், ஆயுதங்களால் தாக்குதல் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்டவர்கள் விடுவிக்கப்படவில்லை.

இந்த நடவடிக்கையால் சிறைகளில் கைதிகளின் நெரிசல் குறைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூன் 'ஒருதலைப்பட்சமானவர்': சிரியா அரசு கண்டனம்



ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூனை 'ஒருதலைப்பட்சமானவர்' என்றும் அவரது கருத்துகள் 'கடுமையானவை' என்றும் சிரியா அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. போர் நிறுத்தம் அமலுக்கு வந்த பிறகும் வன்முறைகள் நடந்து வருவது குறித்து பான் கி மூன் தெரிவித்திருந்த கருத்துகளுக்கு எதிராக சிரியா அரசு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இவ்வாறு திடீரென பான் கி மூன் மீது சிரியா அரசு சாடியுள்ளது, அதிபர் அசாத் கூடுதல் கால அவகாசத்தை பெறும் ஒரு முயற்சி என கருதப்படுகிறது. அதன் மூலம், தனது பதவியை தக்கவைத்துக் கொள்ள அசாத் முயல்வதாக அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தூதரான கோபி அன்னானின் தலைமையின் கீழ் 6 அம்சத் திட்டத்துடன் போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டது.

அதைத் தொடர்ந்து 300 பார்வையாளர்களை அனுப்ப ஐ.நா. உத்தேசித்துள்ளது. மேலும் சிரியா அதிபருக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே சிரியாவின் அரசியல் எதிர்காலம் குறித்து பேச்சு நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில், ஐ.நா. பொதுச் செயலர் மீது சிரியா கண்டனம் தெரிவித்துள்ளது. ஏப்ரல் 12-ம் தேதி கோபி அன்னான் அறிவித்த போர்நிறுத்தம் தொடர்ந்து மீறப்பட்டு வருகிறது.

அரசுப் படைகள் தொடர்ந்து போராட்டக்காரர்களைத் தாக்கி வருகிறது.

அதேநேரத்தில் நாட்டு வெடிகுண்டுகள் உதவியுடன் ராணுவத்தினரை போராட்டக்காரர்களும் தாக்கி வருகின்றனர். மேலும், மறைந்திருந்து தாக்கும் உத்திகளையும் கையாண்டு வருகின்றனர். போர்நிறுத்த உடன்பாட்டுக்கு எதிராக, அரசுப் படைகளின் கனரக வாகனங்களும், டாங்குகளும், ராணுவத்தினரும் வீதி களை விட்டு அகலவில்லை. இதனிடையே வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் வன்முறைகள் தலைதூக்க ஆரம்பித்தன.


டெமாஸ்கஸின் புறநகர்ப் பகுதியில் கடலோரக் கிராமத்தில் உள்ள சிரிய அதிபர் பஷார் அசாதின் கோடைகால அரண்மனைக்கு அருகில் அரசுப் படைகள் போராட்டக்காரர்களைத் தாக்கின. அவர்கள் மீது குண்டு வீசித் தாக்குதல் நடத்தின. சிரியா கடற்கரைப் பகுதிக்கு ரப்பர் படகில் வந்த ஆயுதம்தாங்கிய சிலரின் முயற்சியை அரசு படைகள் முறியடித்ததாக சிரியா தொலைக்காட்சி கூறியது.

கடல்வழியாக சிரியாவுக்குள் ஊடுருவ நடந்த முதல் முயற்சியாக இது கருதப்படுகிறது. இந்நிலையில், ஐ.நா. பார்வையாளர்கள் குழுவின் தலைவரான நார்வேயின் மேஜர் ஜெனரல் ராபர்ட் மூட், டமாஸ்கஸுக்கு ஒரு சில நாள்களில் வரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



வெள்ளை மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர்கள் மற்றும் திரைதுறையினர் பங்கேற்ற விருந்தில் கலந்து கொண்ட அமெரிக்கா அதிபர் பராக் ஒபாமா

கே.எப்.சி கோழிக்கறி சாப்பிட்டதால் மூளை பாதிப்பு: நஷ்ட ஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவு



கோழிக்கறி சாப்பிட்டதால் மூளை பாதிப்படைந்த பெண்ணுக்கு, 80 லட்சம் டொலர் நஷ்ட ஈடு வழங்க கே.எப்.சி நிறுவனத்திற்கு அவுஸ்திரேலிய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அமெரிக்காவின் பிரபல கோழிக்கறி நிறுவனமான கே.எப்.சி.க்கு, உலகம் முழுவதும் கிளைகள் உள்ளன. கடந்த 2005ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரத்தில் உள்ள கே.எப்.சி நிறுவன கிளையில் இருந்து மோனிகா என்ற சிறுமிக்கு, அவரது பெற்றோர் கோழிக்கறி வாங்கி தந்தனர்.

இந்த கறியை சாப்பிட்ட மோனிகாவுக்கு உடல் நிலை பாதித்து, ஆறு மாதம் கோமா நிலைக்கு சென்றாள். அதன் பின் அவளது கை, கால்கள் முடங்கி போயின.

விஷமாகி போன கோழி கறியை சாப்பிட்டதால் இந்த நிலை ஏற்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து கே.எப்.சி நிறுவனத்தின் மீது, மோனிகாவின் பெற்றோர் வழக்கு தொடர்ந்தனர்.

கோழிக்கறி விஷமானதற்கு பொறுப்பேற்க கே.எப்.சி மறுத்தது. இருப்பினும் இந்த வழக்கை விசாரித்த நியூசவுத் வேல்ஸ் உச்சநீதிமன்றம், மோனிகாவுக்கு 80 லட்சம் டொலர் இழப்பீடு அளிக்கும் படி உத்தரவிட்டது.

இந்த தீர்ப்பு ஏமாற்றம் அளிப்பதாகவும், இதை எதிர்த்து மேல்முறையீடு செய்யப் போவதாகவும் கே.எப்.சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

உன் நண்பனைப் பற்றி பெருமையாகப் பேசு. உன் பகைவனைப் பற்றி ஒன்றும் சொல்லாதே. - கிளாஸ் வொர்தி

சிறுகதை

கடவுளின் ஆயுதம்

உலகை சிருஷ்டித்து சலித்து போன கடவுள் எட்டாம் நாளில் ஒரு டெலிவிஷனை உருவாக்கினார். கொஞ்ச நேரம் அதை பார்த்து கொண்டிருந்தார். பிறகு சே.. சகிக்கமுடியலே மோசம் என்று அதை அணைத்துவிட்டு உறங்கிவிட்டார். அவர் உறங்கி எழுந்த போது அங்கிருந்த டிவியைக் காணவில்லை. எங்கே போனது என்று தெரியாமல் குழம்பி போனார். இதனால் என்ன விளைவுகள் உருவாக போகிறதோ தெரியவில்லையே என்று ஆதங்கபட்டார்.

அது நிஜம். சாத்தான் அந்த டிவியை திருடிக் கொண்டு போய் என்ன செய்வது என்று தெரியாமல் சுற்றிக் கொண்டிருந்த ஆதாம் ஏவாளிடம் விற்று விட்டான். அதுவும் ஆதாம் இல்லாத நேரமாக பார்த்து ஏவாளிடம் பேரம் பேசி மயக்கி அதை விற்றிருந்தான்.

அப்பாவி ஆதாம் `விலங்குகளுக்கு பெயர் வைத்து முடித்துவிட்டு பசியோடு வீடு திரும்பி வந்து என்ன சாப்பாடு என்றபடியே ஏவாளை சமையல் அறையில் தேடினாள். அவளை அங்கே காணவில்லை. அவள் வெளிச்சம் மினுமினுங்கும் ஒரு பெட்டியின் முன்னால் ஒய்யாரமாக சாய்ந்தபடியே உட்கார்ந்து வேடிக்கை பார்த்து கொண்டிருப்பதை கண்டான். என்ன அது கேட்டபடியே அருகில் போய் நின்றான். அவள் நிமிர்ந்து பார்த்துவிட்டு பதில் சொல்லாமல் டிவியை ஆசையோடு பார்த்து கொண்டிருந்தாள்.

டிவியில் தோன்றிய கவர்ச்சியான விளம்பரங்களை காட்டி அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று ஆதாம் கேட்டான். எனக்கும் தெரியவில்லை ஆனால் வசீகரமாகயிருக்கிறது என்றாள் ஏவாள். அவள் அருகில் எப்படி ஒரு பாப்கார்ன் பாக்கெட் வந்தது என்று ஆதாமிற்கு புரியவேயில்லை. அவன் தானும் ஒரு கை நிறைய பாப்கார்ன் எடுத்துமென்றபடியே பசியை மறந்து டிவி பார்க்க துவங்கினான்.

டிவி அவனுக்குள் இச்சையை தூண்டியது. அவன் ஏவாளை வியப்போடு உற்று பார்க்க துவங்கினாள். அப்படி என்ன பார்க்கிறாய் என்று ஏவாள் கேட்டாள். இத்தனை நாட்கள் விலங்குகளுக்கு பெயர்வைக்க போகிறேன் என்று வெட்டியாக அலைந்து திரிந்ததில் உன்னுடைய அழகை ரசிக்க தவறிவிட்டேன். உண்மையில் நீ ஒரு பேரழகி என்றான். அ தன்னை ஆதாம் ரசிக்கிறானே என்று பெருமிதம் கொண்டாள் ஏவாள்.

அவர்கள் இருவரும் தங்களை மறந்து டிவி பார்த்து கொண்டிருந்தாள். கடவுள் படைத்த உடலுக்கு நிறைய வேலைகள் இருக்கிறது என்பதை டிவி வழியாகவே அவர்கள் அறிந்து கொண்டார்கள். அத்துடன் விளம்பரத்தில் வந்த பல உபயோகப் பொருட்களை தாங்கள் உடனடியாக வாங்க வேண்டும் என்று ஆசை கொண்டார்கள்.

அன்றிரவு புகைபிடிப்பதற்காக ஆதாமின் பண்ணை வீட்டுபக்கம் நடந்து போன கடவுள் என்ன வாழ்க்கையிது என்று புலம்பியபடியே ஆதாம் வீட்டை கவனித்தார். ஏதோ வெளிச்சம் பீறிட்டுக் கொண்டிருந்தது. ரகசியமாக ஜன்னல் வழியாக எட்டி பார்த்தார்

அவரால் நம்பவே முடியவில்லை. டிவி ஓடிக்கொண்டிருந்தது. அதன் முன்னே ஆதாமும் ஏவாளும் ஒருவரையொருவர் கட்டிபிடித்து முத்தமிட்டபடியே மல்யுத்தம் போல ஒருவர்மீது மற்றவர் ஏறி அமர்ந்து இறுக்கிபிடித்து உருண்டு கொண்டிருந்தார்கள்.

நிச்சயம் இது தனது எதிரியான அந்த சாத்தானின் வேலை தான் என்று கடவுளுக்கு தெரிந்து போனது. தேவிடியா மகன் நம்ம பிள்ளைகளை இப்படி கெடுத்துவிட்டானே என்று சாத்தான் மீது கடுமையான கோபம் வந்தது. ஒரு வாரம் கஷ்டப்பட்டு நாம உருவாக்கியதை மோசம் செய்து விட்டானே புலம்பியபடியே கதவை ரகசியமாக திறந்து உள்ளே போய் டிவியை அணைத்தார்.

திடுக்கிட்டு எழுந்த ஆதாம் ஏவாளை பார்த்து இந்த தவறுக்காக நீங்கள் தண்டிக்கபட போகிறீர்கள் என்று கோபத்துடன் சொன்னார். இருவரும் தங்களின் பாவச்செயலுக்காக மன்னிப்பு கேட்டார்கள். ஆனாலும் கடவுள் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆதாமே நீயும் உன் வாரிசுகளும் இனிவாழ்நாள் முழுவதும் கேபிள் டிவி இணைப்பிற்காக மாதமாதம் பணம் செலவழித்து சீரழிந்து போவீர்கள். ஏவாளே இனி நீ பிள்ளைகளை வளர்க்கும் பிரச்சனையுடன் பகல் எல்லாம் டிவி பார்த்து உன் நேரத்தை செலவழிக்க நேரிடும் என்ற தண்டனையும் தருகிறேன் என்றார்.

அத்துடன் சாத்தானின் வீட்டை நோக்கி சென்று மோசக்காரனே உன்னை என்ன செய்கிறேன் பார் என்று கத்தினார். சாத்தான் முடிந்தால் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள் என்று ஏளனம் செய்தான்.

ஆத்திரமான கடவுள் உலகை அழிப்பதற்கான மஹாபிரளயத்தை உருவாக்கினார். மழை கொட்டியது. வெள்ளம் உலகெங்கும் நிரம்பியது . முப்பத்தி ஒன்பது நாட்கள் பகலிரவாக மழை பெய்தது. நாற்பதாம் நாள் கடவுளின் கோபம் தணிந்தது.

வெள்ளம் வடிந்த பிறகு கடவுள் நோவாவின் கப்பல் என்னவானது என்று காண்பதற்காக சென்றார். அது ஆராத் மலையில் தட்டி நின்றிருந்தது. அங்கே நோவா எதையோ பார்த்து கொண்டிருந்தான். என்ன அது என்று கடவுள் நெருங்கி போய் கண்ட போது அவன் முன்னே இரண்டு டிவிகள் ஓடிக் கொண்டிருந்தன.

எப்படி இரண்டு டிவி வந்தது என்று புரியாமல் கடவுள் கோபபடவே உலகில் உள்ள ஒவ்வொன்றிலும் ஒரு ஜோடியை காப்பாற்ற வேண்டும் நீங்கள் தானே கட்டளை தந்தீர்கள். அதனால் இரண்டு டிவிகள் காப்பாற்றபட்டன என்றான். கடவுளுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை

அதன் பிறகு நோவாவின் வாரிசுகளும் வாரிசுகளின் வாரிசுகளும் பெரிய பெரிய டிவிகளை பார்க்க துவங்கினார்கள். விளையாட்டு சீதோஷ்ணநிலை, அன்றாட செய்திகள், சினிமா என்று சேனல் மாற்றி மாற்றி சலிக்காமல் பார்த்து தொலைக்காட்சி அடிமைகளானார்கள். மனிதர்களை தன்னால் திருத்த முடியாது என்று ஓய்வு பெற்ற கடவுளும் பொறுப்பை தன் மகனிடம் ஒப்படைத்துவிட்டு தனியாக முதுமையை கழிக்க ப்ளோராரிடா மாநிலத்தில் உள்ள தனது பண்ணை வீட்டிற்கு சென்றுவிட்டார்.

சமீபமாக அவரை தொலைக்காட்சி சேனலுக்காக நேர் முகம் செய்த போது ஒருவேளை தன் படைப்புகளை திருத்தி கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தால் கட்டாயம் டிவியை உருவாக்கமல் தவிர்த்து விடுவேன் என்றார்.

இது விளம்பரத்திற்காக அவர் அடித்த ஸ்டண்ட் என்றே பார்வையாளர்கள் நினைத்தார்கள்.

INDIAN DELEGATION - A Double Game

M.K.EELAVENTHAN

Former Member of Parliament Srilanka

Member of Transnational govt. of Tamileelam Representing Canada.

The much Talked Controversial Indian Parliamentary Delegation. Finally made its visit to Srilanka. The Delegation's aims were said to be fact finding of the situation prevailing in the war affected North & east where the battered Tamils are living. The delegation left without the AIDMK ,DMK,MDMK & PMK representatives. AIDMK & DMK took the view the visit will not save of the causes of the tamils but only to please the srilankan Govt. with state functions & receptions.

The vociferous & pragmatic Dr, Wickramabahu Karunaratna correctly sated the objective of this delegation is to continue the process decimation of Tamils while the delegation will see the Tamils as if they are the "Adivasis" or " backward tribes".

The popular daily of taminadu the" thinamani "has commented on this visit as a fall of india in to a srilankan trap!.

Srilanka will utilise this visit to paint a picture of normancy, peace & harmony prevailing in Srilanka to international community with the assistant of India who undoubtedly will be keen to make amends for the friction which srilanka cause by its vote against Srilanka at the UN Human Rights council.

The Delegation was let by Sushma Suwaraj the BJP opposition leader with four Congress MP 's from Tamilnadu & Marxist MP Of tamilnadu. The Other four MP's are from the North Indians Parties. the Delegation first met Basil Rajapaksha & G.L.Peiries. Later they met the TNA Delegation as well the delegation's chief Sushma Swaraj met the president Mahinda Rajapaksha alone and had face to face meeting with him after a breakfast session. The Tamil members from India opted not to join the breakfast & were excluded in the talks between President Rajapaksha & Sushma swaraj.What transpired in these talks is not fully known. However Sushma Swaraj in the press conference has spoken about this assurance given by Rajapaksha to implement a 13+ Settlement.

To solve the Tamils problem Rajapaksha also stressed on the need of TNA's participation in the joint parliamentary select community. Which will be nothing but a lame duck. She also stressed the resettlement of displaced refugees without delay. The delegation chief in statement has spoken of the need for urgency in settling the still displaced. The withdrawal of military from North, Necessity of TNA' & Govt to enter in to dialogues of final participation in the parliament select community.

The need for a Settlement within united srilanka based on 13+ which is again promised by Rajapaksha according to Sushma Swaraj. The delegation concluded there are visit & have gone back to prepare a report to Manmohan & Sonia Gandhi the outcome of which is anybody's guessed.

What has the delegation Achieved for the Eelam tamils? & what are its failings?

1. The Delegation followed the agenda of srilankan Govt. They didn't interact with the peoples as they wished. Nor did they visit the displaced & the resettled to see the conditions of living.

2. The Displaced Sampoor population was deliberately excluded in the agenda & the delegation also never bothered as this a creation of both India & Srilanka.

3. The delegation didn't include local human rights activist who are well versed with the ground situation.

4. The Constant accompaniment of Basil, Douglas & army personnel provided blanket protection to the state Machinery & deterred the officials & the civilians met with to speak out frankly.

5. The delegation as usual expressed their concerns with some ground problems but failed to stress on the urgency of a political settlements meeting the aspirations of tamils.even the important of northern East merger, provided by India was ignored by the delegation. Nor were there any mentions of compensation to the victims of war or accountability for the war crimes. Sinhalisation & Buddisisation didn't find any mention & were conveniently omitted as of no concerns.

In short, the delegation came to make amends & to heal the wounded feelings of Srilanka while also appearing to placate the victimised Tamils. It would appear that in the final result the delegation would have achieved none of the above objectives. As usual Delhi would never dare call Srilanka to take any measures to address the grievances of tamils. Everything will be wrapped under the cover of non-interference in the internal affairs of a sovereign state. Surely Manmohan Singhe who apologised to Rajapaksha with bended knees will display nothing tangible for the tamils.

As far as rajapaksha is concerned he will denied any promised of 13+ given to Sushma Swaraj as it is already not conceded by his private Secretary in the subsequent press conference. Rajapaksha has already stated that No police or Land power will be granted to north & east. It is learnt that he had already conveyed this position to the delegation.

Viewing the above Srilankan ethnical decimation agenda. There is nil hope for any salvation to the desperate Tamils, coming from Delhi.

For the Tamils this event is an exercise of futility and the way open is to seize the momentum provided by the international community, UN & Tamilnadu. The rare unified voice of tamilnadhu politicians augurs well for the eelam tamils particularly the calls for a referendum in the North & east need to be strengthened and advocated by the diaspora. Undoubtedly Rajapaksha clan is assisting the Tamils in this cry for eelam as they are bent on a suicidal path to eliminate the identity of eelam tamils.

The present god send opportunities must be skillfully exploited by the Diaspora & more pressure must be exerted on the tamilnadhu leaders as the key to our solutions lies mainly with Tamilnadhu only.

The timely and wise statement of TNA leader Sampanthan cautioning the Tamils of the web of sinister & wily designs spun by Rajapaksha & calling all the tamils to rally round to defeat the Srilankan Govt's chicanery has to be welcomed.

A heavy responsibility now lies on the shoulders of the TNA to mobilize the support of tamilnadhu peoples & leaders and to interact with them as well, as initiating public meeting to launch widespret agitations to advance the causes of tamils with the support of the masses on ground.

செய்வதற்கு எப்போதும் வேலை இருக்க வேண்டும்; அப்போது தான் முன்னேற முடியும். - மில்டன்

மே 7ம் தேதி இந்தியா வருகிறார் ஹில்லரி


அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் அடுத்த (மே) மாதம் 7ம் தேதியும், 8ம் தேதியும் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்கிறார். முன்னதாக அவர் 3 மற்றும் 4ம் தேதிகளில் சீனாவிலும், பிறகு 2 நாட்கள் வங்கதேசத்திலும் சுற்றுப் பயணம் செய்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்துகிறார்.



இந்தியாவில் ஹிலாரி கிளிண்டன் கொல்கத்தா மற்றும் டெல்லிக்கு மட்டும் செல்கிறார். கொல்கத்தாவில் அவர் மாநில அதிகாரிகள் மற்றும் பல்வேறு அமைப்பினருடன் பேச்சு நடத்துகிறார். டெல்லியில் இருக்கும்போது பிரதமர் மன்மோகன்சிங், வெளியுறவுத்துறை மந்திரி எஸ்.எம்.கிருஷ்ணா ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்துகிறார்.

ஜுன் 13ம் தேதி அமெரிக்காவில் நடக்கும் 5-வது இந்தியா-அமெரிக்கா உச்சி மாநாட்டு பேச்சு வார்த்தைக்கு ஹிலாரியின் இந்திய சுற்றுப் பயணம் முன்னேற்பாடாக அமையும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

ஒசாமா பின்லேடனை அமெரிக்காவுக்குக் காட்டிக் கொடுத்ததில் எங்களுக்கும் பங்கு உண்டு: ஐ.எஸ்.ஐ.



பாகிஸ்தானில் ஒசாமா பின்லேடன் பதுங்கியிருந்ததை முதலில் அந்நாட்டின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.தான் அமெரிக்காவுக்குத் தகவல் கொடுத்ததாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திற்கு வடக்கே உள்ள அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்த அல்குவைதா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடனை ஓராண்டுக்கு முன்பு அமெரிக்க கமாண்டோ படைவீரர்கள் அதிரடி நடவடிக்கை மூலம் சுட்டுக் கொன்றனர். பாகிஸ்தானைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர்தான் அமெரிக்காவுக்கு தகவல் கொடுத்ததாக கூறப்பட்டு வந்தது.

இந்நிலையில் பெயர் வெளியிட விரும்பாத பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. அதிகாரி ஒருவர் அமெரிக்க ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், உலகின் எந்த பகுதியில் அல்குவைதா தாக்குதல் நடத்தினாலும் எங்களது உதவியுடன் தான் நடக்கும் என்று கூறியுள்ளார்.

மற்றொரு அதிகாரி கூறுகையில், அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏ.வுக்கு ஒசாமாவின் தூதராக செயல்பட்ட அபு அகமது பயன்படுத்தி வந்த செல்போன் எண்ணை பாகிஸ்தானின் உளவு அமைப்புதான் கொடுத்தது என்றும் கூறியுள்ளார்.

உலகச் செய்திகள்

அபோதாபாத்தில் அமெரிக்க படைகள் தாக்குதல் நடத்திய போது இது உண்மை என உறுதி செய் யப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால் பாகிஸ்தான் உளவுத்துறை அதிகாரிகள் இதனை நிராகரித்துள்ளனர்.

அபு அகமதுவின் செல்போன் எண் அவர்களிடமிருந்து கிடைக்கப்பெறவில்லை என்றும் அமெரிக்க உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பிரிட்டனை நாசப்படுத்திய சூறாவளிகள்

பிரிட்டனை மூன்று பலத்த சூறாவளிகள் தாக்கியதால் கட்டிடங்கள் தரை மட்டமாயின, சாலைகளில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.



இரண்டு சூறாவளிக் காற்றுகள் வார்விக்ஸில் உள்ள ரகபியிலும், சவுத் வேல்ஸில் உள்ள நியுபோர்ட்டிலும் வீசின.

இதுவரையிலான காலங்களில் ஏப்ரல் மாதத்தில் பெய்யாத அளவுக்கு நேற்று மழை பெய்தது. போர்ன் மவுத் பகுதியில் இருந்த விடுதிகள் பலத்த சேதமடைந்தன.

நேற்று முன்தினம் பெய்த மழையை விட 50 சதவிகிதம் அதிகமாகும். மேலும் ஆலன் பரோ (55) என்பவரின் பண்ணையில் இருந்த கோழிகள் உட்பட சுமார் 20 பறவைகள் இறந்துவிட்டன.

100,000 பவுண்டு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும், இந்தச் சூறாவளி தன்னை தரை மட்டமாக்கி விட்டதாகவும் ஆலன் தெரிவித்துள்ளார்.



துருக்கி சென்றிருந்த ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியாகிலார்ட் (இடது), அந்நாட்டு பிரதமர் ரீசெப் தைப்பி ஈர்டோஜனை, அங்காரா நகரில் சந்தித்து பேசினார்.

நைஜீரியாவில் ஊடகங்கள் மீது தாக்குதல்: 40 பேர் உடல் சிதறி பலி



நைஜீரியாவில் 'திஸ் டே' என்ற முன்னணி நாளிதழ் அலுவலகங்கள் மீது நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

தலைநகர் அபுஜாவின் வட மத்திய பகுதியிலும், கடுனா மாகாணத்திலும் உள்ள 'திஸ் டே' நாளிதழின் அலுவலகங்கள் மீது வெடிகுண்டுகளை நிரப்பிய கார் ஒன்று மோதி இந்த தற்கொலைப்படைத் தாக்குதலை நடத்தியுள்ளது.

நேற்று அபுஜாவில் உள்ள திஸ் டே அலுவலகத்தில் தாக்குதல் நடத்தப்பட்டது. பின்னர் கடுனா மாகாணத்தில் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இத்தாக்குதல்களில் சம்பவ இடங்களிலேயே 37 பேர் உயிரிழந்தனர். மேலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 3 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து கடுனாவில் 'திஸ் டே', 'தி சன்', 'தி மொமன்ட்' போன்ற பல நாளிதழ்களின் அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டிடங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதல்களுக்கு 'போஹோ கராம்' என்ற அமை ப்பு தான் காரணம் என்று கூறப்படுகிறது.

ஊடகங்கள் மீதான தற்கொலைப் படைத் தாக்குதல்களுக்கு நைஜீரியா அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா, ஜப்பானை சேர்க்க இங்கிலாந்து ஆதரவு

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தற்போது 5 நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன. இந்த கவுன்சிலை விரிவுபடுத்த வேண்டும். அதில் மேலும் சில நாடுகளை சேர்க்க வேண்டும் என்று இந்தியா, ஜப்பான் உள்பட பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றன. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் வழங்க பல நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. இந்நிலையில், சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் நடந்த சர்வதேச மாநாட்டில் இங்கிலாந்து வெளியுறவுத் துறை அமைச்சர் வில்லியம் நேற்று உரை நிகழ்த்தினார்.

இதுகுறித்து லண்டனில் உள்ள வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரிகள் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பாதுகாப்பு கவுன்சில் உள்பட ஐ.நா. சபையை விரிவுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளை கட்டாயம் சேர்க்க வேண்டும். இதற்கு இங்கிலாந்து முழு ஆதரவு அளிக்கும்.

உலகின் பொருளாதாரம் உள்பட பல விஷயங்களில் பல நாடுகள் வலிமை உள்ள நாடுகளாக உருவெடுத்து வருகின்றன.

இந்த சூழ்நிலையில் சர்வதேச வெளியுறவுத் துறை கொள்கைகளை மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை விரைவில் விரிவுப்படுத்த வேண்டும் என்று வில்லியம் வலியுறுத்தி உள்ளார். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



கடமையை முன்னிட்டு செய்த செயலுக்கு, வெகுமதி எதிர்பார்க்கக் கூடாது. - மான்டேஸ்க்யூ

இலங்கையில் தொடரும் பௌத்த சிங்கள பேரினவாத தாக்குதல்களைக் கண்டித்து கண்டனக் கூட்டம்

தம்புள்ள பள்ளிவாசல் மீதான சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தாக்குதல்

Sunday May 06th, 2012 @ 5:00 P.M
Don Montgomery
Community Recreation Centre
(Mid Scarborough C. C)
2467 Eglinton Ave E., Scarborough, ON. M1K 2R1

அண்மையில் தம்புள்ளையில் முஸ்லீம்களது பள்ளிவாசல் மீது பௌத்த சிங்கள இனவாதிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலை அரசும் அவர்களது படைகளும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தமை இலங்கையில் இனங்களுக்கிடையிலான உறவுகள் குறித்து அக்கறை கொண்டோருக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது.

ஸ்ரீலங்கா மகிந்த அரசின் பிரதம மந்திரி ஜெயரத்தின முஸ்லீம் மக்கள் தலைவர்களை சந்தித்து பேசாமலேயே அவர்களை சந்தித்தாகவும் அவர்கள் பள்ளிவாசலை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு இணக்கம் தெரிவித்தாகவும் கூறும் செயற்பாடு மிக மோசமானது. ஜனநாயகத் தன்மையற்றது.

முதல் தடவையாக முஸ்லீம் வணக்கத் தளங்கள் மீது தாக்குதல் நடைபெறவில்லை. இதற்கு முன்பும் நடைபெற்றுள்ளன. கடந்த ஜனவரியில் அனுராதபுரத்தில் உள்ள தர்கா ஒன்றும் பௌத்த சிங்கள இனவாதிகளால் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இது இனவாதிகள் முஸ்லீம்கள் மீது தமது கவனத்தை திருப்பியுள்ளதன் வெளிப்பாடாகும். அத்துடன் இந்தப் போக்கானது இச் சம்பவத்துடன் முடிந்து போவதல்ல. தொடர்ச்சியாக இந்து, முஸ்லீம் வணக்கத் தலங்கள் மீது தாக்குதல்களை எதிர்பார்க்கலாம்.

இப்படியாக முஸ்லீம் மக்கள் மீது தொடரும் தாக்குதல்களை அரசுடன் இணைந்து செயற்படும் முஸ்லீம் தலைமைகள் தாக்குதல்களை தடுத்து நிறுத்த முடியாமல் இருப்பது கவனிக்கத்தக்கது. இதே இன வெறி சிங்கள அரசில் முஸ்லீம் காங்கிரசின் ரவூப் ஹக்கீம் நீதி அமைச்சராக இருப்பது வேடிக்கையானது.

ஸ்ரீலங்கா மகிந்த அரசின் எடுபிடிகளாக இருக்கும் தமிழ், முஸ்லீம் தலைமைகள் கடந்த காலங்களில் நடைபெற்ற இன அழிப்பிற்கு 'புலிகளின் பயங்கரவாதம்' காரணம் என கூறிவந்தன. மாறாக ஸ்ரீலங்கா பௌத்த சிங்கள இனவாதமானது இன அழிப்பை தீவிர முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றன. இதில் சிங்கள தலைமைகள் மிகத் தெளிவாக உள்ளன.


இப்படிப்பட்ட நிகழ்வுகளை தடுத்து நிறுத்துவதும், இலங்கையில் தேசிய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதும், இலங்கையானது ஒரு பல் தேச பல் கலாச்சார சமூகம் என்பதை ஏற்றுக் கொண்டு, அதனை அரசியல் அமைப்பில் உறுதி செய்வதும், அந்த அடிப்படையில் அரசியல் தீர்வுகளை முன்வைப்பதிலுமே தங்கியுள்ளது.

இப்படிப்பட்ட தீர்க்கமான அறிவார்ந்த முன்மொழிவுகளுக்கு மாறாக பௌத்த சிங்கள இனவாதிகளின் உணர்வுகள் பாதிக்கப்படக் கூடாது என்ற அக்கறையில் மேற்கொள்ளப்படும் எந்த முன்மொழிவுகளுமே இலங்கையில் தேசிய இனப் பிரச்சினையை தீர்ப்பதில் எந்த விதமான பாத்திரமும் ஆற்ற முடியாது. இது சிக்கலை மேலும் ஆழப்படுத்தவே வழிவகுக்கும். இதனை புரிந்து கொள்வது அவசியம்.

தம்புள்ளையில் பள்ளிவாசல் மீதான தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம். இதற்கு மூலகாரணமாக அமைந்துள்ள சிங்கள பௌத்த பேரினவாதத்தை முறியடிப்பதில் அனைவரையும் ஒன்று திரளுமாறு நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

புதிய திசைகள்
மே 18 இயக்கம்
அசை
தேடகம்

இந்த வாரத்தில் பிறந்த பிரபலங்கள்





அஜித் குமார்

பிறப்பு - மே 1, 1971, இந்தியா
தொழில்கள் - நடிகர் மற்றும் கார் பந்தய வீரர்

நரசிம்மன் ராம்

பிறப்பு - மே 4, 1945, இந்தியா
தொழில் - த இந்து ஆங்கில நாளிதழின் முதன்மை ஆசிரியர்





த்ரிஷா கிருஷ்ணன்

பிறப்பு - மே 4, 1983, இந்தியா
தொழில் - நடிகை

லட்சுமி ராய்


பிறப்பு - மே 5, 1989, இந்தியா
தொழில் - நடிகை







அதர்வா முரளி

பிறப்பு - மே 7, 1989, இந்தியா
தொழில் - நடிகர்





விடாதீர்கள். அதாவது, நம்பிக்கை, சத்தியம், உறவு, இதயம். ஏனெனில், உடைந்தால் ஆனால் வலி அதிகமாக இருக்கும் - சார்லஸ்



...டமும் வாதம் செய்யாதே! - ஆலன் தார்ன் ஹில்



The Chennai Spice

Ultimate South Indian Feast

DINE IN, TAKE OUT, CATERING & BAR



Weekend Lunch Buffet – $8.99
Lunch Buffet Days : Friday,Saturday & Sunday
Lunch Buffet Hours : 11.30 AM to 3.30 PM ONLY.
Buffet menu changes everyday.
Buffet always includes 3 varieties of Dosa(Plain,Masala Dosa,Mysore Masala Dosa), Naan, Paratha, Icecream and much more ...
Follow us on twitter to get daily buffet menu updates.

Wednesday Closed.



Special Lunch Combo Menu (Lunch Only)

Idly 2 Vada 2 (limit 8ozsambar)	2.99	Veg-Biryani ½ plate (2 oz raitha)	2.99
Idly 4	2.99	Veg-Curry 8oz - rice or naan	3.99
Vada 3	2.99	Chicken curry 8oz - rice or naan	3.99
Sambar Idly 2 or Vada 2	2.99	Butter Chicken 8oz-rice or naan	4.99
VenPongal Vada 1	3.99	Goat Curry 8oz 4 pieces with bone rice or naan	5.99
Uppuma-Vada 1	3.99	Chicken Biryani ½ plate (2 oz raitha)	4.99
Poori 2 Masala 4oz	3.99	Mutton Biryani ½ plate	5.99
Parota 1 Vegkorma 4oz	3.99		
Batura 1 Potato Masala 4oz	3.99		
All dosas served with 8oz of sambar 2oz of chutney	2.99		
Mini-Plain Dosa	3.99		
Mini-Masala Dosa	3.99		
Mini-Mysore Masala Dosa	4.50		
Mini-Spinach Dosa	4.99		
Mini-Paneer Dosa	2.99		

Extras
Add coffee for 1.50, Sambar 4oz 0.99, Coconut Chutney 4oz 0.99, Potato Masala 4oz 0.99, Raitha 4oz 0.99, Curd 4oz 0.99



LICENSED BAR



www.thechennaispice.ca

Open 6 Days a week (Wednesday Holiday)
Mon-Thursday 11:30 am to 3.00 pm, 5:00 pm to 9.30 pm
Fri-Sat 11:30 am to 3:30 pm, 5:00 pm to 10:00 pm
Sunday 11:30 am to 3:30 pm, 5 pm to 9 pm)



155 Clark Blvd, Brampton, ON L6T 4G6
(410 Clark, West Drive)
Near Bramelea City Center



Tel: 905 452 7777 416 833 4970



போர்வாளின்றி தன் சாம்ராஜ்யத்தை ஆள்வது காதல். — ஜார்ஜ் ஹெர்பெர்ட்



காதல் ஆட்கொள்ளும் போது, மனிதன் கயவனாக இருக்க முடியாது. — சார்லஸ்லேம்ப்



கடுமையான பாதையை எளிதில் கடக்க, துணையாக அமைந்திருப்பது காதல். —ஷெல்லி

அகந்தையை வென்று விட்டால், அடக்கம் தானாகவே நம்மை வந்து சேரும்.— மகாவீர்.